பக்கங்கள்: பதினெட்டு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆவணி 18 வியாழக்கிழமை (03.09.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 281

# புலம்பெயர் தமிழர்கள் அனுப்பிய நிவாரணம் அகதிகள் கைக்கு வருமா?

## உணவும், மருந்தும் பாவனைக்கு உகந்தவையா என்ற சந்தேக நிலை

கொழும்பு, செப்ரம்பர் 03

**போரினால் பாதிக்கப்பட்டு அகதிகளான வன்னி மக்களுக்கு, ஐரோப்பா வாழ் புலம் பெயர்ந்த தமிழ் மக்களால் 'வணங்கா மண்' (கப்டன் அலி) கப்பல் மூலம் அனுப்பப்பட்ட உணவு மற்றும் மருந்து நிவாரணப் பொருள்கள் அவர்களின் கைக்கு எட்டுமா என்பது சந்தேகத்துக்குரியதாகியுள்ளது.**

*மாதங்கள் ஆறு தாண்டியும் ஐரோப்பிய தமிழ் மக்கள் வாஞ்சையுடனும் மனிதாபிமானத்துடனும் அனுப்பிய பொருள்கள், மனிதபாவனைக்கு உகந்தவையா என்ற பரிசோதனைத் தடை தாண்டி அகதிமுகாம்களில் வாழும் மக்களுக்குக் கிடைக்குமா என்பது நிச்சயமற்றதாகி வருவதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.*

வன்னி அகதிகளுக்கென 'வணங்கா மண்' ஏற்றி வந்த உணவு மற்றும் மருந்துப் பொருள்கள், மனிதாபிமானமற்ற பல தடைகள், வீம்புத்தனங்களால் சென்னைக்குச் சென்று 'கொலரடோ' கப்பலுக்கு மாற்றப்பட்டு பல தடங்கல்களின் பின்னர் ஜூலை மாதத்தில் கொழும்பு வந்து சேர்ந்தது.

உணவுப் பொருள்களும் சரி மருந்துப் பொருள்களும் சரி மக்கள் பாவனைக்கு உகந்தவையா என்பது குறித்த பரிசோதனைகள் சாதகமாக இருந்தால் மட்டுமே அவற்றை அகதிகளுக்கு விநியோகிக்க முடியும் என்று -

நிவாரணப் பொருள்களை இப்போது பொறுப்பேற்றுள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்க உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

"கொலரடோ" கப்பலிலுள்ள உணவுப் பொருள்கள் கடந்த ஜூலை 31 ஆம் திகதி முதல் கொழும்புத் துறைமுகத்தில் தேங்கிக்கிடக்கின்றன. இந்த உணவுப் பொருள்களில் தகரங்களில் அடைக்கப்பட்ட உணவுகளான பால் வகைகள், பிஸ் கட்டுகள், பழச்சாறுகள் ஆகியனவும் இருக்கின்றன.

எனவே, இந்த உணவுப் பொருள்கள் தற்போது பாவனைக்கு உகந்த நிலையில் இருக் கின்றனவா (18 ஆம் பக்கம் பார்க்க)

## 'லங்கா' ஊடகவியலாளர் மூவர் பொலிஸாரால் கைது

கொழும்பு, செப். 03

ஊடகவியலாளர்கள் மூவர் நேற்று தெனியாயப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். ஜே.வி.பி. சார்பு வாராந்தப் பத்திரிகையான 'லங்கா'வில் கடமையாற்றும் ஊடக வியலாளர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரியவருகிறது.

தென் மாகாண தேர்தல் சம்பந்தப்பட்ட செய்திகளைச் சேகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டபோதே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என 'லங்கா' பத்திரிகை வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

இந்தப் பத்திரிகையின் அலுவலக ஊடகவியலாளர் சாலிக்க விமலசேன, படப்பிடிப்பாளர் ரவீந்திர புஸ்பகுமார மற்றும் செய்தியாளர் தயா நெத்தசிங்க ஆகியோரே கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ-சி)

# ஆந்திர முதல்வர் ரெட்டி பயணம் செய்த ஹெலி மாயம்! தேடும் பணியில் 5,000 பொலிஸார், விமானப் படையினர்!!

## நக்சலைட் பிரதேசத்தில் அகப்பட்டிருக்கலாம் என அச்சம்

புதுடில்லி, செப். 03

ஆந்திர மாநிலத்தின் முதலமைச்சர் ராஜசேகர ரெட்டியை ஏற்றிச்சென்ற ஹெலிகொப்டர் காணாமற்போயுள்ளது. அது இந்திய வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இச் சம்பவம் குறித்து கூறப்படுவதாவது:

ஆந்திரப் பிரதேசத்தில் மழை பெய்து வருவதால் வானம் தொடர்ந்தும் மேகமூட்டத்துடனேயே காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

பொதுமக்களுடன் நேரடியாக உரையாடும் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்பதற்கு சித்தூர் மாவட்டத்திற்கு ஹெலிகொப்டர் மூலம் மலைப்பாங்கான பிரதேசத்தின் மீது பயணித்துக் கொண்டிருந்த போதே முதலமைச்சர் காணாமற் போயுள்ளார். நேற்றுக் காலை 8.25 மணிக்கு சென்ற அவரது ஹெலிகொப்டர் 9.35 மணிவரை ராடர் கட்டுப்பாட்டு அறையுடன் தொடர்பில் இருந்ததாகவும் அதன்பின்னரே தொடர்பை இழந்ததாகவும் சொல்லப்பட்டது.



அங்கு தொடர்ச்சியாக மழை பெய்துவருவதால் சீரற்ற காலநிலை நிலவி வருகின்றது. இதனால் ஹெலிகொப்டர் மூலமான தேடும் பணிகளும் தாமதமடைந்தன. முதலமைச்சர் ராஜசேகர ரெட்டி பயணித்த ஹெலிகொப்டர் நக்சலைட்களின் கட்டுப்பாட்டில் உள்ள காட்டினுள் தரையிறங்கியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

முதலமைச்சர் ராஜசேகர ரெட்டி காணாமற்போனதை அடுத்து அவரைத் தேடும் பணியில் இந்திய இராணுவத்தினரின் ஹெலிகொப்டர்களும் (18 ஆம் பக்கம் பார்க்க)

# மூன்று லட்சம் அகதிகளையும் புலிகளாக நினைக்கக் கூடாது

## அரசிடம் ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை

கொழும்பு, செப். 03

அகதி முகாம்களில் புலி உறுப்பினர்கள் உள்ளனர் என்பது உண்மையென்றால் அவர்களுக்கு எதுவித தண்டனையும் வழங்காது அவர்களை சமூக வாழ்வுக்குள் இணைத்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளது ஐக்கிய தேசியக் கட்சி.

அதேபோல் மூன்று லட்சம் அகதிகளையும் புலிகளாக நினைத்துத் தண்டனை வழங்கவோ கொடுமைப்படுத்தவோ வேண்டாம் என்றும் அக்கட்சி கேட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் எம்.பி. விஜிர அபயவர்தனவே இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஒருவர் குற்றம்புரிந்தால் அவரைக் கொலை செய்யக்கூடாது. அது பௌத்த தர்மம் அல்ல. மனிதர்கள் தவறு செய்யக் கூடியவர்கள். அவர்களுக்கு மன்னிப்பு வழங்கி அவர்களை சமூகத்தோடு இணைக்கவேண்டும்.

**சிறைச்சாலைகளில் இருந்த ஜே.வி.பியினருக்கு எமது கட்சி மன்னிப்பு வழங்கியது**

ஜே.வி.பி. கலவரத்தின்போது ஜே.வி.பியினர் பலர் பூஸா உட்பட பல சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டிருந்தனர். அன்று ஆட்சியில் இருந்த எமது கட்சி அவர்களுக்கு மன்னிப்பு வழங்கி அவர்களை விடுதலை செய்தது.

இப்போது ஜே.வி.பியின் எம்.பியாகவிருக்கும் (18 ஆம் பக்கம் பார்க்க)

# கைதிகளைப் பரிமாற்றுவது தொடர்பில் இலங்கை – இந்தியா விரைவில் ஒப்பந்தம்

கொழும்பு, செப். 03

சிறைக் கைதிகளைப் பரிமாற்றம் செய்வது தொடர்பாக இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் விரைவில் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட உள்ளது என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சின் மேலதிகச் செயலாளர் பிரசாத் காரியவசம் இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் கைதிகளைப் பரிமாற்றம் செய்வது தொடர்பான உடன்படிக்கை அடுத்த இரு மாதங்களுக்கு இடையில் கைச்சாத்திடப்படும் என்று தெரிவித்துள்ளார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவிக்கையில், இந்த உடன்படிக்கைக்கான பூர்வாங்க வேலைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இலங்கையில் சட்டமா அதிபர் திணைக்களம், இந்த உடன்படிக்கையின் நகலை தயாரிக்கும் சட்ட வேலையில் ஈடுபட்டுள்ளது. உடன்படிக்கையை எங்கே, எப்போது கைச்சாத்திடுவது என்று இன்னமும் முடிவாகவில்லை. (18 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவசேவை அதிகாரசபையின் தலைவராக பொன்சேகாவின் மனைவி

கொழும்பு, செப் 03.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் மனைவி அனோமா பொன்சேகா இலங்கை இராணுவ அதிகார சபையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் நேற்றுக்காலை 9.07 மணிக்குத் தமது பதவியைப் பொறுப்பேற்றுக்கொண்டார். முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுடனான உறவுகளை மீளப் புதுப்பிப்பதை நோக்கமாகக் கொண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இலங்கை இராணுவ அதிகாரசபையின் தலைவர் பதவியை சரத் பொன்சேகாவின் மனைவிக்கு வழங்கியுள்ளார் (18 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தேர்த்திருவிழாக்கள்

யாழ்ப்பாணம், செப்.3

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவில் இன்று தேர்த்திருவிழாநடைபெறுகின்றது.

காலை 7 மணிக்கு வசந்தமண்டபப் பூசை இடம் பெற்று காலை 8.30 மணிக்கு பிள்ளையார் தேரில் ஆரோகணிப்பார்.

நாளை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (1)

(சிறப்பு மலர் 6ஆம், 13ஆம் பக்கங்களில் )

* * *

யாழ்ப்பாணம், செப்.3

பிரான்பற்று பெரியவளவு முருகமூர்த்தி கோயிலில் நடைபெற்று வரும் பெருந்திருவிழாவில் இன்று தேர்த்திருவிழா இடம்பெறுகிறது.

முற்பகல் 10 மணிக்கு வசந்தமண்டபப் பூசை இடம் பெற்று 11 மணிக்கு பிள்ளையார், பாலசுப்பிரமணியர், வள்ளி தெய்வானை, ஆறுமுகப்பெருமான் வள்ளி தெய்வானை ஆகியோர் மூன்று சித்திரத் தேர்களில்வலம்வந்து அருள் காட்சி வழங்குவர். நாளை தீர்த்தத் திரு விழா நடைபெறும். (1)

(சிறப்பிதழ் 7ஆம் பக்கத்தில்)

* * *

யாழ்ப்பாணம்,செப்.3

கொக்குவில் மஞ்சவனப்பகுதி முருகன் ஆலயத்தில் இடம்பெற்று வரும் பெருந் திருவிழாவில் இன்று தேர்த்திருவிழாவாகும்

இன்று காலை வசந்தமண்டபப் பூசை இட்ம் பெற்று காலை 9 மணிக்கு முருகன் தேரில் வலம்வந்து அருள்காட்சி வழங்குவார். நாளை தீர்த்தத் திருவிழா இடம்பெறும்.

(சிறப்பு மலர் நேற்று வெளியாகியிருந்தது)

# சந்நிதி ஆலய தேர், தீர்த்த நிகழ்வுகள் இன்றும் நாளையும் நேரடி அஞ்சல்

யாழ்ப்பாணம், செப்.3

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் வருடாந்த தேர் மற்றும் தீர்த்தத் திருவிழா நிகழ்வுகளை, இம்முறை இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன தமிழ்ச்சேவை, செல்வச்சந்நிதி ஆல யத்தில் இருந்து நேரடி அஞ்சல் செய்யவிருக்கிறது.

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்கவின் பணிப்புரைக்கு அமைய ஒலிபரப்பு கூட்டுத்தாபன ஆலோசகர் வீ.ஏ.திருஞானசுந்தரத்தின் வழிகாட்டலின் கீழ் இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இன்று வியாழக்கிழமை காலை 7 மணியில் இருந்து 9 மணிவரை தேர்த்திருவிழா நிகழ்வுகளையும் நாளை வெள்ளிக்கிழமை 4ஆம் திகதி காலை 7 மணி முதல் 9 மணி வரை தீர்த்தத் திருவிழா நிகழ்வுகளையும், தமிழ்ச்சேவை, தென்றல், யாழ் சேவை, மற்றும் www.slbc.lk என்ற இணையத் 'தளத்தின்னுடாகவும் உலகெங்கும் வாழும் இந்து மக்கள் கேட்பதற்கான ஏற்பாடுகளை தமிழ்ச்சேவை மேற்கொண்டுள்ளதென அதன் பணிப்பாளர் ஆர்.கணபதிப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இந்த நேரடி நிகழ்வுகளை தமிழ்ச்சேவையின் அறிவிப்பாளர் முருகேசு ரவீந்திரன் தொகுத்து வழங்குகின்றார். தயாரிப்பு பணிகளை ஜீ.சிவசங்கர் மேற்கொள்கின்றார். (1)

# கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு

அச்சுவேலி, செப்.03

வலி.கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவு சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தின் கீழ் உள்ள அச்சுவேலி சமுர்த்தி அபிவிருத்தி வங்கி பிராந்தியத்தில் உள்ள பாடசாலை மாண வர்களுக்கான சித்தோறா புலமைப் பரிசில் திட்டத்தின் ஏற்பாட்டில் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வுகள் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

அச்சுவேலி சமுர்த்தி அபிவிருத்தி வங்கி மண்டபத்தில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.கிழக்கு பிரதேச செயலாளர் சி.ஏ.மோகன்ராஸ் கலந்து கொள்ளவுள்ளார். (1-11)

# கொழும்பிலிருந்து வந்த 11 வயதுச் சிறுமி யாழ்.ஆஸ்பத்திரியில்; டெங்கு அறிகுறி

யாழ்ப்பாணம், செப். 03

யாழ்.வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் பதினொரு வயதுச் சிறுமி ஒருவர் டெங்குக் காய்ச்சல் தாக்கத்துக்கு ஆளாகியிருக்காலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டா ரங்கள் தெரிவித்தன.

டெங்குக் காய்ச்சலுக்கான அறிகுறிகள் வைத்திய சோதனைகளில் கண்யறிய்பட்டதாகவும் ஆய்வுகூட பரிசோதனை 'அன்ரி பொடி' (ANTI BODY) ஆய்வுச் சோதனை மூலமே அவர் 'டெங்கு' நோயினால் பீடிக்கப்பட்டுள்ளாரா என்பதைக் கண்டறிய முடியும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இச் சிறுமி சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் இருந்து திரும்பியுள்ளார். நோய்த்தாக்கம் குறித்து முடிவு எடுப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் உதயனுக்குமேலும் தெரிவித்தன. (அ-1-9-51)

# சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆசிரியர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், செப். 03

சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆசிரியர்கள் அனை வரையும் நாளை வெள்ளிக் கிழமை காலை 9.00 மணிக்கு பாடசாலைக்கு வருகை தருமாறு அதிபர் திருமதி சி. சிவநாதன் அறிவித்துள்ளார். (1 - 207)

* * *

பண்டத்தரிப்பு மகளிர் உயர்தர பாடசாலையின் சகல ஆசிரியர்களை யும் இன்று காலை 9 மணி யளவில் பாடசாலையில் சமுக மளிக்கு மாறு அதிபர்கேட்டுள்ளார். (1)

# இலத்திரனியல் பணப்பரிமாற்றச் சேவை யாழ்.தபாலகத்தில் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப்.3

யாழ்.பிரதம தபாலகத்தில் இலத்திரனியல் பணப்பரிமாற்றச் சேவை நேற்று புதன் கிழமை முற்பகல் 10 மணியளவில் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் கே.புஸ்பநாதன், தபாலகத்தின் பிராந்திய கணக்காளர் திருமதி.சு.கலைச்செல்வன், பிரதம தபாலதிபர் ஏ.லோகஞானம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஈ.எஸ்.பி.சன்ஸ், சிவகணேசன் ரெக்ஸ் ரைல்ஸ் சார்பாக சம்பிரதாய பூர்வமாக இலத்திரனியல் பணப்பரிமாற்றம் கொழும்பிற்கு அனுப்பப்பட்டது. ஐ.ரி.பாக் நிறுவனத்தின் சார்பாக வி.பரணிதரன் கொழும்பி லிருந்து அனுப்பப்பட்ட பணத்தை சம்பிரதாய பூர்வமாகப் பெற்றுக்கொண்டார்.

யாழ்.பிரதம தபாலகத்தில் நேற்று ஆரம்பிக்கப்பட்ட இலத்திரனியல் பணப்பரிமாற்றச் சேவை ஊடாக பொதுமக்கள் தமக்கு அனுப்பப்படும் பணத்தினை சில நிமிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

அத்துடன் யாழ்ப்பாணத்திலிருந்து ஏனைய மாவட்டங்களிற்கு அனுப்பப்படும் பணத்தினை உரியவர்கள் அங்கு சில நிமிடங்களில் பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

உள்ளூர் பணப்பரிமாற்ற வசதியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள இச்சேவை விரைவில் வெளிநாட்டுப் பணப்பரிமாற்ற வசதிகளைக் கொண்டதாக விஸ்தரிக்கப்படவுள்ளது. இந்தப் பணப்பரிமாற்ற சேவை நிலையம் பொது மக்களின் நன்மை கருதி காலை 7 மணிமுதல் இரவு 9 மணி வரை திறந் திருக்கும் என்றும் பிரதம தபாலதிபர் ஏ. லோகஞானம் தெரிவித்தார். (1-9)

# திருமுறைப் பாராயணமும் முற்றோதலும் நாளை

யாழ்ப்பாணம், செப். 03

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்த பூரணைத் தினத்தில் நடத்திவரும் அகத்தியர் தோவாரத்திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப்பாராயணம் நிகழ்வுகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 7 மணிமுதல் யாழ். சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பகப்பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறவுள்ளன.

இந் நிகழ்வு மேற்படி ஆலய அறங்காவலர் சபை யின் அனுசரணையில் பண்டிதர் ப. பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. (1 - 9)

# திருத்தொண்டர் தொகை மனனப் போட்டி

யாழ்ப்பாணம், செப். 03

நாரந்தனை ஸ்ரீ தான்தோன்றி மனோன்மணி அம்பாள் ஆலய பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழாவான இன்று திருத்தொண்டர் தொகை மனனப் போட்டி நடைபெறவுள்ளது. வெற்றி பெறுபவர்களுக்கு தீர்த்தத்தினமான நாளை பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை:-

தினந்தோறும் நாயன்மார்களின் வரலாறு தொடர்பாக திருமதி சுகன்னியா பாஸ்கரனால் சொற்பொழிவு ஆற்றப்பட்டு வருகின்றது. தேர், தீர்த்தத் திருவிழாவான இன்றும் நாளையும் சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோரின் திருத்தொண்டுகள் பற்றி சொற்பொழிவு ஆற்றவுள்ளார்.

தினந்தோறும் சொற்பொழிவின் இறுதியில் வினாக்கள் கேட்கப்பட்டு விடையளிப்போருக்கு அவரால் பரிசுகள் வழங்கப் பட்டும் வருகின்றன.

இதேவேளை -

ஆலயத்தின் 50 ஆவது வருட நிறைவாக பொன்மலர் நூல் வெளியீட்டு விழாவும் இன்று மு.ப. 11 மணிக்கு இ. துரைச்சாமி தலைமையில் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருக்தினராக வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேச செயலர் சி. சத்தியசீலன் கலந்து கொள்ளவுள்ளதுடன் முதல் பிரதியை க. பாஸ்கரன், திருமதி சுகன்னியா பாஸ்கரன் ஆகியோர் பெறவுள்ளனர். (06)

AVT மெடிக்கிளினிக்
45 K.K.S வீதி யாழ்ப்பாணம். தொ.இல:021 222 8965
ஆரம்பம்: இன்று 03.09.2009 பிற்பகல் 5.00
விசேட வைத்திய நிபுணர்களினது ஆலோசனை
★இருதய சிகிச்சை நிபுணர்கள்
★சத்திர சிகிச்சை நிபுணர்கள்
★காது மூக்கு தொண்டை நிபுணர்கள்
★மகப்பேற்று நிபுணர்கள்
★பொதுமருத்துவ நிபுணர்கள்
★குழந்தைகள் வைத்திய நிபுணர்கள்
★எலும்பு சத்திர சிகிச்சை நிபுணர்கள்
★தோல் சிகிச்சை நிபுணர்கள்
★வாகன சாரதி பத்திர மருத்தவ சான்றிதழ் (மென்மை ஊர்தி/ பாரஊர்தி)
வெளிநோயாளர் பிரிவு (M.B.B.S மருத்துவர் பார்வையிடல்)
ஆய்வுகூட பரிசோதனைகள் மருந்தகம்
பல் மருத்துவம்
★பல் அறுவை சிகிச்சை ★பல் கட்டுதல்
★Ultra Sonic முறையில் பல் சுத்தம் செய்தல்
★Light Cure முறையில் பல் அடைத்தல்
★நிரந்தர பல் பொருத்தல்
★ பல் கிளிப் போடுதல் (பல் சீரமைப்பு)
★பல்வேர் முறை சிகிச்சை
அன்னை நாகா பூட்சிற்றிக்கு அருகாமையில்
ஸ்கானிங் ECG வசதிகளும் உண்டு
நிர்வாகிகள், AVT மெடிகிளினிக்.

## மரண அறிவித்தல்

### திருமதி வைத்திலிங்கம் பாக்கியம்

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வைத்திலிங்கம் பாக்கியம் நேற்று (02.09.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் சரவணமுத்து - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும், அமரர் இளையதம்பி - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் அமரர் வைத்திலிங்கம் (தபால் தெரிவு உத்தியோகத்தர், சுன்னாகம்) அவர்களின் அன்பு மனைவியும் இந்திரா (ஏழாலை), அமரர் சிறிதரன், மனோகரன் (C.T.B. சாரதி, மன்னார்), தயாபரன் (நோர்வே), ரவீந்திரன் (சயன் உணவகம், மல்லாகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பத்மநாதன், வசந்தகுமாரி, யோகேஸ்வரி, புஸ்பராணி, அருட்செல்வி (செல்வி) ஆகியோரின் மாமியாரும். தர்ஷிகா, லக்ஷிகா, அகழ்விழி, பிரிசாந்தினி, சுலக்சன், பிரியதர்சன் , வேணுஜா, அகல்யா, சியானி, நிஷானி, பிரசன்னா, தனஞ்சயன், ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் அமரர் நடராசா, அமரர் இராசம்மா, குமாரசாமி (ஏழாலை) ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2009) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை மேற்கு, ஏழாலை.
060 2007980 (மல்லாகம்),
023 5680210 (மன்னார்),
0047 70120969 (நோர்வே).

தகவல்
குடும்பத்தினர்.

மீண்டும் மலிவான விலையில்...
MW1: • Intel 1.6 Ghz Processor • Intel Chip D945GCLF Motherboard • 250GB SATA Hard Disk • 1 GB DDR II Ram • ATX Casing • DVD Writer • 15" LCD Monitor • Optical Mouse • Keyboard • UPS 650W 37000/-
MW2: • Intel 2.8 Ghz Pentium Processor • Intel Chip Asrock G31 M-S Motherboard • 160GB SATA Hard Disk • 1 GB DDR II Ram • ATX Casing • DVD Writer • 15" LCD Monitor • Optical Mouse • Keyboard. • UPS 650W 41000/-
MW3: • Intel 2.2 Ghz Dual Core Processor • Intel Chip Foxconn G31 Motherboard • 250GB SATA Hard Disk • 1 GB DDR II Ram • ATX Casing • DVD Writer • 19" LCD Monitor • Optical Mouse • Keyboard • UPS 650W 48500/-
MW4: • Intel 2.5 Ghz Dual Core Processor • Intel Chip Asrock G31 Motherboard • 250GB SATA Hard Disk • 1 GB DDR II Ram • ATX Casing • DVD Writer • 19" LCD Monitor • Optical Mouse • Keyboard • UPS 650W 49500/-
MW5: • Intel 2.6 Ghz Dual Core Processor • Asus P5 KPL-AM Motherboard • 320GB SATA Hard Disk • 1 GB DDR II Ram • ATX Casing • DVD Writer • 19" LCD Monitor • Optical Mouse • Keyboard • UPS 650W 50000/-
MW6: • Intel 2.8 Ghz Core 2 Duo Processor • Intel Chip Intel DG31 PR Motherboard • 320GB SATA Hard Disk • 1 GB DDR II Ram • ATX Casing • DVD Writer • 19" LCD Monitor • Optical Mouse • Keyboard • UPS 650W 56500/-
Printer: HP 1560 - 4300/- ; Canon IP1980 - 5000/- ; HP 1005 Laserjet - 13750/-
Scanner: Mustek - 5500/- ; HP 2410 - 7500/- ; HP G3110 - 13900/-
SUBWOOFER: 2.1 SSD - 2200/- ; 5.1 Microlap - 5700/- ; 5.1 Creative - 6750/-
Accessories: • Headphone - 400/- • Modem 56K - 600/- • Soundcard - 450/- • Card Reader - 400/- • Power Supply - 1250/- • UPS Battery 12V - 1250/-
UPS: DCP 650 W - 3900/- ; Techcom 650 W - 3900/-
* Warranty Value 1-3 years * Stock Available
MUSIC WORLD & COMPUTERS (PVT) LTD.
141 B, பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி. தொலைபேசி/ஃபக்ஸ்: 021 222 5654
Email: musicworld@dialognet.lk (ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# நீடித்த சமாதானமும் உறுதியான நல்லிணக்கமும் நிரந்தரமாகக் கிட்டுவதற்கு அவசியமானவை எவை?

*"அபிவிருத்தியின்றி சமாதானம் சாத்தியமில்லை. நாங்கள் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யவேண்டும். வெறுமனே விடுதலையை மட்டும் தேடித் தந்தவராக இருக்க நான் விரும்பவில்லை. வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் மக்களுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி, நாட்டுக்கு நிலையான சமாதானத்தையும் அபிவிருத்தியையும் தேடித் தந்த தலைவராக விளங்கவே நான் விரும்புகின்றேன்."* - இப்படித் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல, சர்வதேச சமூகத்துக்கே காதில் இனிப்பாக விழும் வார்த்தைகள் இவை. ஆனால் இப்படிப் பேச்சில் தீட்டப்படும் கனவு மாளிகை நிஜத்தில் வடிவமைக்கப்படுமா என்பதுதான் பிரதானமான கேள்வியாகும்.

பொதுவாக நோக்கின் - சமாதானம் மூலம் அபிவிருத்தியா அல்லது அபிவிருத்தி மூலம் சமாதானமா என்று பார்த்தால் - அது கோழி முதல் வந்ததா, முட்டை முதல் வந்ததா என்ற கேள்விக்கு ஒப்பானதாக இருப்பதை உணரமுடியும்.

ஆனால் இலங்கை இனப்பிரச்சினையை விசேடமாக எடுத்து நோக்கினால் சமாதானம் இத்தேசத்தில் - இலங்கைத் தீவில் - நிலை குலைந்தமைக்குப் பிரதான காரணம் பொருளாதார சீரின்மை அல்ல என்பது தெளிவாகும். இனப்பாகுபாடும், இன ஒதுக்கலுமே சமாதானத்துக்கு வேட்டு வைத்து குழப்ப நிலையை ஏற்படுத்தின. அதன் விளைவாகவே பொருளாதாரம், அபிவிருத்தி போன்ற துறைகளும் நிலைகுலைந்து சீர்கெட்டன என்பது தெளிவு.

எனவே, இலங்கையில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதாலோ அல்லது அபிவிருத்தித் திட்டங்களை ஏற்படுத்துவதாலோ நிரந்தர - நீடித்து நிலைக்கக் கூடிய - சமாதானம் வந்துவிடாது.

ஆனால், மறுவழமாகப் பார்த்தால் அத்தகைய சமாதான சூழ்நிலை ஏற்பட்டு, அது நின்று, நிலைத்து, நீடிக்குமானால் பொருளாதார வளர்ச்சியும், அபிவிருத்தியும் தன்பாட்டிலேயே மேன்மையுறும் என்பதையும் உய்த்தறிய முடியும்.

எனவே நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதில் நாட்டின் தலைவருக்கும், நாட்டின் மக்களுக்கும் உண்மையில் விருப்பமும் ஆர்வமும் இருக்குமானால், அதற்கு அத்தகைய சமாதானம் குழம்புவதற்கு அடிப்படையாக - மூலமாக - இருந்த காரணங்களைக் கண்டறிந்து அவற்றைக் களைவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை அத்தரப்பினர் எடுக்கவேண்டும். அப்படிச் செய்வதற்கு அதற்கான திடசங்கற்பத்தை - உறுதிமொழியை - அவர்கள் மனம் கொள்வது பிரதானமானதாகும்.

இலங்கையில் சமாதான சமரச நிலை குழம்பி, போரும், அமைதியின்மையும், குழப்பமும், வன்முறையும், கலவரமுமாக நிலைமை மாறிப்போனமைக்குப் பிரதான காரணம் - அடிப்படை - சிறுபான்மையினரான தமிழர்களுக்கு எதிராகக் காட்டப்பட்ட இனப்பாகுபாடும், இன ஒதுக்கலும், அடக்குமுறையும், அவற்றுக்கு மூலகாரணியாக விளங்கிய பேரினவாத எதேச்சாதிகாரமும்தான் என்பது வெளிப்படையான உண்மை.

எனவே, சமாதானத்தை எட்டுவதாயின் முதலில் சிறுபான்மையினருக்கு எதிராகப் பாகுபாடோ, ஒடுக்குமுறையோ, அடக்குமுறையோ, எதேச்சாதிகாரமோ பிரயோகிக்கப்படும் நிலைமை அடியோடு மாற்றப்பட வேண்டும். அது மாத்திரமல்ல, அத்தகைய பிரயோகம் இனி இடம்பெறாது என்ற நம்பிக்கையை முதலில் அவர்கள் மனதில் ஏற்படுத்தக் கூடியதாகக் காரியங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இதையே வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் சமூகத்துடன் நல்லிணக்கம் காணும் ஏற்பாடாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கொள்ளவேண்டும்; அப்படித்தான் அவர் கருதுகின்றார் என நம்புகிறோம்.

வடக்கு, கிழக்குத் தமிழர்களுடன் நல்லிணக்கம் காணும் உறுதிப்பாட்டில் தாம் உள்ளார் என்ற ஜனாதிபதியின் கூற்று விதந்து வரவேற்கத்தக்கது.

ஆனால், அத்தகைய இணக்கம் காணும் நிலைப்பாட்டை எட்டுவதற்கு முக்கியமான தேவைப்பாடுகள் சில நிறைவு செய்யப்பட வேண்டும் என்பதையும் இங்கு சுட்டிக்காட்டுவது அவசியமானதாகும்.

நாம், ஏலவே குறிப்பிட்டமைபோல, இனிமேல் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட மாட்டோம் என்ற நம்பிக்கை முதலில் தமிழர்கள் மனதில் உறுதியாக ஏற்படுத்தப்பட வேண்டும். அடுத்ததாகத் தமிழர்கள் தங்களின் கருத்து நிலைப்பாட்டைப் பய, பீதியின்றி சுதந்திரமாகப் பிரதிபலிக்கக்கூடிய சூழல் உருவாக்கப்பட வேண்டும். அப்போதுதான் நல்லிணக்கமும், அதன் பெறுபேறாக நிரந்தர சமாதானமும் பிறப்பெடுக்க வாய்ப்புக் கிட்டும்.

மூன்று லட்சத்துக்கும் அதிகமான அகதிகளை நலன்புரிமையங்கள் என்று கூறப்படும் முகாம்களில் தடுத்து வைத்துக்கொண்டு, அவசரகாலச் சட்டம் போன்ற கெடுபிடிகளை நீடித்தபடி, நல்லிணக்கமும் சமாதானமும் கிட்டும் என்று எண்ணுவதில் அர்த்தமில்லை. அது வெறும் அபத்தமாகவே முடியும்.

அதிகாரத்துக்கு அடங்கி வாய்மூடிக் கிடக்கும் தரப்புகளுடன் ஏற்படுவதை நல்லிணக்கமாக அர்த்தப்படுத்த முடியாது. அது அடக்குமுறையுடன் செய்து கொள்ளப்படும் சமரசமாகவே கொள்ளப்படும். தேவையானால் அதனால் உருவாகக்கூடிய அத்தகைய அசாதாரண அமைதியை வெளிவேஷத்துக்கு வேண்டுமானால் 'நிரந்த சமாதானம்' என்று நாம் பூசி மெழுகலாம். அவ்வளவே. சம்பந்தப்பட்டோர் இதனைப் புரிந்துகொண்டால் நல்லது.

# தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத் தேர்த்திருவிழா இன்று



யாழ்ப்பாணம், செப்.3

சரித்திரப் பிரசித்தி பெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய தேர்த் திருவிழா இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை இடம்பெற்று 9 மணியளவில் முருகப் பெருமான்எழுந்தருளி வீதியுலா வருவார்.

நாளை காலை 8 மணிக்குத் தீர்த் தத் திருவிழாவும் மாலை 5 மணிக்கு மௌனத் திருவிழாவும் இடம்பெறும்.

ஆலயப் பெருந்திருவிழா கடந்த மாதம் 20 ஆம் திகதி கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி நடைபெற்று வரு கின்றது.

ஆலயத் திருவிழாவை முன்னிட்டு குடிதண்ணீர் வசதிகள், சுகாதார வசதிகள் என்பன வல்வெட்டித்துறை நகர சபையால் ஆலய சுற்றாடலில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஆலயவீதியில் அமைந் துள்ள 18 இற்கும் மேற்பட்ட அன்னதான மடங்களில் பக்தர்களின் நலனைக் கருத்தில் கொண்டு தினமும் அன்ன தானம் இடம்பெற்று வருகின்றது.

ஆலய வீதிகளில் தற்காலிக பொலிஸ் நிலையம், வல்வெட்டித்துறை நகர சபையின் உப அலுவலகம், சுகாதாரத் திணைக்கள அலுவலகம் என்பன அமைக்கப்பட்டுள்ளன.

திருவிழாக் காலங்களில் விசேட போக்குவரத்துச் சேவைகளை இலங்கை போக்குவரத்துச் சபையினர் மற்றும் தனியார் சிற்றூர்திச் சேவையினர் ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர். (203-236-253)

(சிறப்பு மலர் 8 ஆம் 9 ஆம் பக்கங்களில்)

# தேசிய மட்டப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக யாழ். பாடசாலைகளின் வீரர்கள் நாளை கொழும்புக்கு

யாழ்ப்பாணம், செப் 3

கொழும்பில் நடைபெறவுள்ள அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்டப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணப் பாடசாலைகளில் வீரர்கள் மற்றும் விளையாட்டுப் பொறுப்பாசிரியர்கள் அடங்கிய முதலாவது குழு நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ் ரயில் நிலையத்தில் இருந்து ஏ-9 வீதியூடாக கொழும்பு புறப்படுகின்றது. இந்தக் குழுவின் முதற் கட்டமாக வலைப்பந்து, சதுரங்கம், உடற்பயிற்சி, உதைபந்து, ரெனிஸ் ஆகிய போட்டிகளில் கலந்து கொள்ளும் வீரர்கள் கொழும்பு செல்கிறார்.

இரண்டாம் கட்டக் குழு எதிர்வரும் 10 ஆம்திகதி வியாழக்கிழமை இங்கிருந்து புறப்படுகின்றது. இந்தக் குழுவில் கரப்பந்து, ஹொக்கி, கிரிக்கெட், கபடி, எல்லே, கூடைப்பந்து, கரம், மேசைப் பந்து பட்மின்ரன் ஆகிய போட்டி களில் கலந்து கொள்ளும் வீரர்கள் செல்கின்றனர்

மூன்றாம் கட்டக்குழு எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்புக்குப் பயணிக்கின்றது. மெய்வன்மைப் போட்டிகளில் கலந்து கொள்ளும் வீரர்கள் இந்தக் குழுவில் அடங்குகின்றனர்.

முதலாம் கட்டமாக நாளை புறப்படும் குழுவில் 321 விளையாட்டு வீரர்களும் 62 விளையாட்டுப் பொறுப்பாசிரியர்களும்இடம்பெறுகின்றனர். (50-325)

## உயர்தர மாணவர்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செப். 03

ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான மாபெரும் வழிகாட்டல் கருத்தரங்கு நாளை மு.ப. 10 மணிக்கு யாழ். பெருமாள் கோயிலுக்கு அண்மையில் அமைந்துள்ள யாழ்ப்பாண தொழில் நுட்ப நிறுவனத்தின் விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ACCA கற்கை நெறியும், விசா நடைமுறைகளும் என் னும் தலைப்பில் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களைக் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# நோர்வே நாடாளுமன்றத்திற்கு முன்னால் புலம் பெயர்ந்த தமிழர்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, செப். 03

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் நாயகம் பான் கீ மூனின் நோர்வே வருகை யின்போது நோர்வே வாழ் புலம்பெயர்ந்த தமிழ் மக்களால் கவனயீர்ப்புப் போராட்டம் கடந்த திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

நோர்வே நாடாளுமன்றத்தின் முன்பாகக் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை ஒன்றுகூடிய நோர்வே வாழ் புலம்பெயர் தமிழ் மக்கள், தாயக மக்களின் அவலநிலை தொடர்பாக பான் கீ மூன் தலைமையிலான ஐ.நா.வின் பாராமுகம் மற்றும் செயல் முனைப்பின்மை மீதான அதிருப்தியை வெளிப்படுத்தும் முகமாக இக்கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

முகாம்களுக்குள் அடைக்கப்பட்டுள்ள மக்களை, வன்னியில் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்துவதற்குரிய துரித நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட வேண்டும்.

இலங்கைமீது போர்க்குற்ற விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

சர்வதேச உதவி நிறுவனங்களும் ஊடகங் களும் முகாம்களுக்குள்ளும் வடக்கு, கிழக்கு பிரதேசங்களுக்கும் அனுமதிக்கப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

**பான் கி மூனுக்கு விமான நிலையத்தில் வரவேற்பு**

சுற்றுச் சூழல் விவகாரங்கள் தொடர்பான சந்திப்புகளில் கலந்து கொள்வதற்காக கடந்த ஞாயிற்றுக்கிழமை நோர்வே வந்தடைந்த பான் கீ மூனை நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம், காட்மூவன் விமான நிலையத்தில் வரவேற்றார்.

நோர்வே தலைமை அமைச்சர் ஜென்ஸ் ஸ்தொல்த்தன்பார்க், வெளியுறவுத் துறை அமைச்சர் யூணாஸ் கார் ஸ்தோர மற்றும் நோர்வே மன்னர் ஹற்றால்ட் ஆகியோருடனும் கடந்த திங்கட்கிழமை சந்திப்புகள் இடம்பெற்றன.

# கைதடி ஆயுள் வேத வைத்தியசாலையின் அவசர திருத்த வேலைக்கு நிதி ஒதுக்கீடு

வண்ணை, செப் 3

கைதடி, அரச ஆயுள் வேத வைத்தியசாலையின் அவசர திருத்த வேலைகளுக்காக உடனடியாக 50 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் வைத்தியசாலைக்கு வருகைதந்த மகரகம, நாவின்ன ஆயுள் வேத திணைக்கள ஆணையாளர் திருமதி றமணி குணர்வர்த்தன இத் தகவலைத் தெரிவித்தார்.

வைத்தியசாலையைப் பார்வையிட்ட ஆணையாளர் வைத்தியசாலைப் பணியாளர்களின் குறைகளை உடனடியாக நீக்குவதாக உறுதி வழங் கியதுடன் வைத்தியசாலைக்கு வேண்டிய உபகரணங்கள் மற்றும் ஆளணிப் பற்றாக் குறைகளை நீக்கி அபிவிருத் திக்கு அவசியமான நடவடிக்கை களை எடுக்க இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அதே வேளை ஆயுள்வேத பரிசாரகர் பயிற்சி நெறி மூன்று மாதங்கள் நடைபெற்றன. மேலும் மருந்தாளர்கள், மருந்துக் கலவையாளர்கள், தாதியர் பயிற்சி நெறிகளையும் விரைவில் நடத்த இருப்பதாகவும் ஆணையாளர் திருமதி றமணி குணவர்த்தன தெரிவித்தார்.

இவர் நாளை தொடக்கம் 6ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து ஆயுள்வேத வைத்தியத் துறை முன்னெடுப்பைக் கவனிப்பாரென்றும் தெரிய வருகின்றது. (203-160)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி 19 | 04.09.2009 |
| | வெள்ளிக்கிழமை |
| திதி: | பூரணை |
| | மு.இ. 09.42 வரை |
| நட்சத்திரம்: | சதயம் |
| | பி.இ.01.55 வரை |
| சுபநேரம்: | 06.05 - 07.35 |
| ராகுகாலம்: | 10.35 - 12.05 |

# அகதி முகாம்களில் சுகாதாரச் சீர்கேடுகள் என்ற குற்றச்சாட்டில் உண்மை இல்லை

## சுகாதார அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, செப்.3

இடம்பெயர்ந்து மக்கள் தங்கியுள்ள முகாம்களில் சுகாதார சேவைகள் சீர்குலைந்துள்ளன என சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளில் எவ்வித உண்மையும் இல்லையெனச் சுகாதார அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே சுகாதார அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்து முகாம்களிலுள்ள மக்களுக்குச் சுகாதார சேவைகள் சர்வதேச தரத்திற்கு அமைவாகவே வழங்கப்படுகின்றன என தெரிவித்த அமைச்சர், உலக சுகாதார ஸ்தாபனம் கூட இதனை பாராட்டியுள்ளது என வும் தெரிவித்தார்.

வாந்திபேதி மற்றும்தொற்றுநோய்கள் முகாம்களில் பரவியுள்ளன என தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகளை விடுதலைப் புலிகளுக்குச் சார்பான ஊடகங்களிலே முன்னெடுத்து வருகின்றனர் எனவும் அவர் கூறினார்.

முகாம்களிலுள்ள இடம்பெயர்ந்த மக்களுக் குச் சேவையாற்றுவதற்காக தகுதியற்ற வைத்தியர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர் என முன் வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பதிலளித்த அமைச்சர் எம்.பி.பி.எஸ் பட்டம் பெற்ற தகுதிவாய்ந்த வைத்தியர்களே அங்கு பணிபுரிகின்றனர் என சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, தற்போதுள்ள சுகாதார அமைச்சருக்கு சுகாதார வைத்திய துறை தொடர்பான போதுமான அறிவில்லையென அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூடைப்பந்தாட்டச் சங்கத்தின் கூட்டம் நாளை

யாழ்ப்பாணம், செப். 03

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள கூடைப்பந்தாட்டச் சங்கத்தின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கலந்து கொள்ளும் மத்தியஸ்தர்களே சர்வதேச மத்தியஸ்தர்களால் (FIBA Referees) மேற்கொள்ளப் படும் பயிற்சி முகாமில் கலந்து கொள்ளலாம். புதிதாக இணைய விரும்பும் ஆண், பெண் மத்தியஸ்தர்களும் தமது பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (06)


### தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல மிதிவண்டி விற்பனை நிறுவனம்ஒன்றுக்கு (க.பொ.த சாதாரணதரம்) சித்தியடைந்த, மிதிவண்டி, மிதிவண்டி உபகரண விற்பனையில் அனுபவமுள்ள வேலையாள்கள் இருவர் தேவை. அனுபவம், நற்சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல :3936
(560702) மே/பா உதயன்


## பத்தாம் ஆண்டு நினைவலைகள்

தாய் மடியில் 13 ★ 06 ★ 1981



சந்நிதியான் காலடியில் 25 ★ 08 ★ 1999

### செல்வி திருமகள் கனகசபை

(மாணவி, சாவகச்சேரி இந்துக்கல்லூரி)

*திதி.சதுர்த்தசி*

மலர்ந்து மணங் கமழ்ந்து மனை விளக்காய் ஒளிரவென
இரந்து முருகபதம் இறைஞ்சியுனை வளர்த்தோமே
அரும்பாகி, மலராகி, காயாகி கனியும் முன்னே
அம்மா அப்பாவையும், அண்ணன்மார் தம்பியரையும்
தவிக்கவிட்டு சந்நிதியான் காலடியில் சேர்ந்தாயோ
திருமகளே...

த.மு - 125, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.
நி.மு - மீசாலை வடக்கு, மீசாலை. (88487)

உன் நினைவுடன்
குடும்பத்தினர்.

## தர்மர் நினைவு நிகழ்வு அவரது தூபியில் அனுஷ்டிப்பு

சண்டிலிப்பாய், செப். 03

நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் தர்மலிங்கத்தின் 24 ஆவது நினைவுதினம் நேற்றுக் காலை தாவடியிலுள்ள அன்னாரின் நினைவு தூபிக்கு முன்பாக ஆடம்பரமின்றி மிக அமைதியான முறையில் அனுஷ்டிக்கப்பட்டது.

உடுவில் கிராம சேவையின் முன்னாள் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் வேட்பாளருமான எஸ். முத்துலிங்கம் தலைமையில் நடைபெற்ற நினைவு தின வைபவத்தில் கட்சிபேதமின்றி பலரும் கலந்து கொண்டனர்.

தமிழர் விடுதலைக்கூட்டணி, இலங்கை தமிழரசுக்கட்சி ஆகிய அரசில் கட்சிகளைச் சேர்ந்த எஸ்.எக்ஸ் குலநாயகம், எஸ். கனகசபாபதி, எஸ். சங்கையா, கௌரிகாந்தன், சிவகுமார் உட்பட பலர் கலந்து கொண்டு நினைவுரையற்றினர்.

(1-115)

## உள்ளூராட்சித் திணைக்களத்தின் நடமாடும் சேவை யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், செப். 03

வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களம், யாழ். மாவட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான நடமாடும் சேவையினை எதிர்வரும் 12 ஆம், 13 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடத்தவுள்ளது.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் நடத்தப்படும் இந்த நடமாடும் சேவையினை மக்களுக்கு பயன்பெறக் கூடிய வகையில் நடத்துவதற்கு வசதியாக மேற்படி தினங்களில் உள்ளூராட்சி சபை உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கு விடுமுறை வழங்க வேண்டாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(50 - 207)


### விற்பனைக்கு

பாவித்த நல்லநிலையில் உள்ள 15" 17" CRT MONITER விற்பனைக்கு.
View Sonic
Sam Sung
LG
நிறுவனங்களுக்கு விசேட விலைக்கழிவு உண்டு.
கரன் திருத்துநரும் விற்பனையாளரும்
இல (2) 10, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். T.P : 021 222 4332


## தும்பளையில் இன்று இறுதியாட்டம்

யாழ்ப்பாணம், செப். 03

தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகத்தின் 36 ஆவது ஆண்டு நிறைவையொட்டி பருத்தித்துறை கலைவாணி நகை மாளிகையின் ஆதரவில் வடமராட்சி மட்டத்தில் நடத்தப்பட்ட மென்பந்து சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி இன்று பிற்பகல் 2.30 மணிக்கு தும்பளை கணக்கிலாவத்தை விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த ஆட்டத்தில். கலைமகள் விளையாட்டுக் கழகமும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

இந்நிகழ்வின் விசேட அதிதிகளாக தும்பளை சிவப்பிரகாச ம.வி அதிபர் கே.கே. யோகநாதன், சட்டத்தரணி சபா ரவீந்திரன், கோப்பாய் பிரதேச செயலக முகாமைத்துவ உதவியாளர் ஆர். லோகேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (6)


# VACANCIES

EXPO AVIATION PVT LIMITED,(EXPOAIR) THE LEADING DOMESTIC AIRLINE IN SRI LANKA HAS THE FOLLOWING VACANCIES FOR THEIR PROPOSED GUEST HOUSE PROJECT IN JAFFNA.

### Assistant Public Relation Officers

a. Smart, friendly and pleasing personality
b. Ability to converse fluently in English language
c. Desire to interact with local and foreign customers
d. Knowledge of Computer and Basic accounts
e. Previous experience in Hotel or Front Office is advantageous
f. Ability and Willing to work long hours

### Cooks

a. Able to prepare Sri Lankan, Chinese and Western cuisine and Pastry items.
b. Previous experience is NECESSARY and will be advantageous
c. Ability and Willing to work long hours

### Assistant Cooks

a. Able to prepare Sri Lankan, Chinese and western cuisine and Pastry items.
b. Previous experience is NECESSARY and will be advantageous
c. Ability and Willing to work long hours

### Stewards cum Housekeeping Boys

a. Pleasant and pleasing personality
b. Ability to converse in English language will be a distinct advantage
c. Previous experience will be advantageous
d. Honest in character.
e. Ability and Willing to work long hours

EXPOAIR

Please register-post your Bio-data with copies of certificates, with two non- related referees and contact details, to reach us before the 10th of September 2009. Please indicate on the top left hand side of the envelope the job you have applied for.

The Manager
EXPO AVIATION PVT LTD.
144, Brown Road Jaffna.


# மரண அறிவித்தல்கள்

## திருமதி பஞ்சரத்தினம் கமலாம்பிகை

(அரியாலை, யாழ்ப்பாணம்)



அரியாலையைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட கமலாம்பிகை பஞ்சரத்தினம் 30.08.2009 அன்று பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பஞ்சரத்தினத்தின் (ஆசிரியர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஜெயரத்தினம், புஸ்பரத்தினம் (S.M) மற்றும் சிவராசா (ஹொலண்ட்), யோகரெட்ணம் (லண்டன்), ராஜினி (பிரான்ஸ்), சாந்தினி (சுவிஸ்), ரஞ்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், அமரர் கனகநாயகம், தயாளன் (பிரான்ஸ்), ஆனந்தன் (சுவிஸ்), பத்மேஸ்வரன் (பிரான்ஸ்), ஜெயமலர், கிரிகாம்பிகை, அனித்தா (ஹொலண்ட்), வசந்தராணி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2009) வியாழக்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*480, கண்டி வீதி,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.* (88479)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்.

## பண்டிதர் நாகலிங்கம் கணபதிப்பிள்ளை

(ஓய்வுபெற்ற அதிபர்)



சண்டிலிப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் தற்பொழுது லண்டனில் வசித்தவருமாகிய பண்டிதர் நாகலிங்கம் கணபதிப்பிள்ளை 31.08.2009 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி நாகலிங்கத்தின் அன்பு மகனும் செல்வநாயகியின் (சின்னத்தைலம்மா - ஒய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும் பவானி, குமரன், கலையரசி, சரவணபவன், விநாயகமூர்த்தி, மாலினி, கணேசமூர்த்தி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (05.09.2009) சனிக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செ.நித்தியானந்தம், அன்ன வாசா,
சண்டிலிப்பாய்.
தொ. பே. இல . 0044 208 201 3175

தகவல்: மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

## சுரேந்திரா றொபின்சன் றேமன் (றாஜ்)



சூராவத்தை, சுன்னாகத்தைப் பிறப்பிடமாக கொண்டவரும் தற்போது கனடாவில் வசித்தவருமாகிய சுரேந்திரா றொபின்சன் றேமன் (றாஜ்) 21.08.2009 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் சுரேந்திரா (சுரேஸ் - எலக்ரிசியன், நெல்லியடி) - யோகரத்தினம் (மலர்) தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும், தங்கரத்தினத்தின் (புஸ்பம்) பெறாமகனும், பிருந்தா (கனடா), றுஜந்தன் (இந்தியா), றுஜந்தா (முகாமைத்துவ உதவியாளர், யா/பாஷையூர் சென்.அன்ரனிஸ் றோ.க. வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், றெஜினோல்ட் ஜெயசந்திரன் (கனடா), அன்ரனிற்றா நிஷாந்தினி (இந்தியா), யோண்சன் ராஜ்குமார் (ஆசிரியர், யா/திருக்குடும்ப கன்னியர்மடம்) ஆகியோரின் மைத்துனரும், ஜனோலாநிவேதா (கனடா), அபிஷேக், அனந்திகா (யாழ்ப்பாணம்) ஆகியோரின் தாய்மாமனும், ஹெவின், டவீற்றா (இந்தியா) ஆகியோரின் பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (01.09.2009) மு.ப 11 மணியளவில் கனடாவில் ஸ்ரோவில் ஹைலண்ட் கில் காடின் கல்லறைப் பூங்காவில் நல்லடக்கம் செய்யப்பட்டது . இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளையன் தோட்டம்,
வதிரி, கரவெட்டி. (88461)
தொ.பேசி - 0776506600, 0773086944

தகவல்:
போ.யோண்சன் ராஜ்குமார்
(மைத்துனர்).

## அப்பாபிள்ளை நல்லையா



கோண்டாவில் குமரகோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாபிள்ளை நல்லையா நேற்று (02.09.2009) புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் முத்தம்மாவின் கணவரும் காலஞ்சென்றவர்களான அப்பாபிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் விநாயகமூர்த்தி - பருவதம் (சுதுமலை) தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்றவர்களான ஆச்சிமுத்து, சபாரத்தினம், பழனி, கனகம்மா ஆகியோரின் சகோதரனும் தயாளினி, ஜெயந்தினி, ராஜசிறி, சுபாசினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் மகேந்திரராசா (நாவலப்பிட்டி), பத்மானந்தன் (சங்குவேலி), றஜிதா, ஸ்ரீகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சுதர்ஜன், தனுஜன், பிருந்தாஜினி, தர்சிகன், பர்மிலா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2009) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குமரகோட்டம்,*
*கோண்டாவில்.* (88493)

தகவல்:
மகன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மண்டைதீவில் இருந்து இடம்பெயர்ந்து மீண்டும் மீளக்குடியமர்ந்துள்ள மக்களை குறிப்பிட்ட பகுதிக்கு நேரில் சென்று யாழ்.அரச அதிபர் கே.கணேஸ், வேலணைப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் ஆகியோர் பார்வையிட்டு அவர்களின் தேவைகள் குறித்துக் கேட்டறிந்தனர்.
மக்களுடன் அரச அதிபரும் பிரதேச செயலரும் கலந்துரையாடுவதைப் படங்களில் காணலாம்.

(படங்கள்: லக்ஷ்மன்)

# மூத்த பிரஜைகள், மாற்றுவலுவுள்ளோர் தின விழாவும், கண்காட்சியும்

யாழ்ப்பாணம்,செப்.3

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாவட்ட மட்ட மூத்த பிரஜைகள், மாற்றுவலுவுள்ளோர் தின விழாவும், கண்காட்சியும் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 10ஆம், 11ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளன.

சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் சமூகத்தில் வைத்தே இவர்களுக்கான வாய்ப்புக்களை வழங்க வேண்டும் என்ற உணர்வை மேலோங்கச் செய்யும் விதத்தில்தான் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் மூத்த பிரஜைகள், மாற்று வலுவுள்ளோருக்கான விளையாட்டு நிகழ்வுகள், கல்வித் திணைக்கள அனுசரணையுடன் விழிப்புணர்வுப் போட்டிகள், சமூக சேவையில் முத்திரை பதித்த மூத்த பிரஜைகள் கௌரவிப்பு, தொனிப்பொருளை வெளிப்படுத்தவல்ல கருத்தாழம் மிகுந்த கலை நிகழ்வுகள் என்பன நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் முதியோர் சங்கங்கள், முதியோர் இல்லங்கள், வலுவிழந்தோர் சங்கங்கள் என்பன பங்கேற்பதுடன் ஆர்வலர்கள் அனைவரதும் காத்திரமான பங்களிப்புக்களையும், ஆலோசனைகளையும் சமூக சேவை உத்தியோகத்தர்களிடம் வழங்கலாம் எனவும் கேட்கப்பட்டுள்ளது.

(50- 204)

# மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், செப்.3

சரசாலை மத்தி மயூரி அம்பாள் முன்பள் ளியின் மெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சமாதான நீதிவான் க. சிவசங்கரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் பிரதம விருந்தினராகவும், ஈ.பி.டி.பி.யின் பிரதி அமைப்பாளர் சூசைமுத்து அலெக்சாண்டர் சாள்ஸ், சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளர் வே.சிவராஜலிங்கம், மக்கள் வங்கியின் சாவகச்சேரி கிளை முகாமையாளர் க. சண்முகலிங்கம், தென்மராட்சி சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி செல்வராணி ஜெகதீசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.

(204)

# 50 வருடங்களுக்கு மேலாகத் திருத்தப்படாத சிறுப்பிட்டி மேற்கு ஞானவைரவர் வீதி

யாழ்ப்பாணம், செப்.3

சிறுபிட்டி மேற்கு ஞானவைரவர் வீதி கடந்த 50 வருடங்களுக்கு மேலாக மீள் புனரமைப்பு இன்றி கற்குழிகளாகக் காணப்படுகின்றது.

சிறுப்பிட்டி மேற்கு ஞானவைரவர் வீதி மீள்புனரமைப்புச் செய்வதற்கு சபையில் நிதியில்லையென வலி.கிழக்குப் பிரதேச சபை செயலாளர் தெரிவித்துள்ளார்.

தற்போது இந்த வீதி பொதுமக்கள் போக்குவரத்து செய்யமுடியாத அளவிற்கு முற்று முழுதாகச் சேதமுற்றுள்ளது.

1999.05.17 இல் இருந்து மேற்படி வீதியை மீள்புனரமைப்புச் செய்து தருமாறு கோரி சிறுப்பிட்டி மேற்குக் கிராம அபிவிருத்தி சங்கங்கள், சனசமூக நிலையங்கள், பொது அமைப்புகள் மற்றும் பிரதிநிதிகள் பதின் நான்கிற்கு மேற்பட்ட மகஜர், கடிதங்கள் வழங்கி பத்து வருடங்கள் முடிவடைந்த நிலையிலும் இவ்வீதி மீள்புனரமைப்பு செய்யப்படவில்லை.

கடந்த பத்து வருடங்களிலும் ஐந்து பிரதேச சபைச் செயலாளர்கள் இப்பிரதேசத்தில் கடமை புரிந்துள்ளனர்.

எனினும் இவ்வீதி தொடர்பாக இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

கடந்த காலங்களில் ஏ-9 வீதி முழுமையாக மூடப்பட்டு இருந்த காலத்தில் திட்டம் நிறைவேற்ற முடியாது இருந்தது.

தற்போது ஏ-9 வீதி போக்குவரத்துக்கு திறந்து விடப்பட்டுள்ளதால் தார் போதுமான அளவு குடாநாட்டுக்குள் கொண்டுவரப்படுகின்றது.

இனிவரும் காலங்களில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழாவது வீதி புனரமைப்புத்திட்டத்தை முன்னெடுக்குமாறு செயலாளரை அப்பிரதேச மக்கள் கேட்டுள்ளனர்.

(201-302)

# ஓட்டுமடம் தேவாலய வீதி புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,செப்.3

ஒட்டுமடம், செபஸ்தியார் வீதியின் தேவாலய வீதி புனரமைப்பு செய்யப்படவிருக்கின்றது. இதற்கென வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் முதலாம் கட்டமாக 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த வீதி புனரமைப்பு தொடர்பாக அப்பகுதியைச் சேர்ந்த க.கந்தசாமி என்பவர் எழுதிய கடிதத்திற்கு யாழ். மாநகர சபை வீதி வேலைப்பகுதி மராமத்து பொறியியலாளர் அனுப்பியுள்ள பதிலில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ப)

# யாழ்ப்பாணத்தில் கடவுச்சீட்டு, அடையாள அட்டை வழங்குவதற்கு நடமாடும் சேவை ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப்.3

யாழ்ப்பாணத்தில் கடவுச் சீட்டு, அடையாள அட்டை என்பன வழங்குவதற்கு நடமாடும் சேவை ஒன்று நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 12ஆம், 13ஆம் திகதிகளில் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் வழிப்படுத்தலில் இந்த நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவை மூலம் வழங்க வேண்டிய சேவைகள் குறித்து இனங்கண்டு அவற்றை யாழ்.செயலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலர்கள், உதவி அரச அதிபர்களை அரச அதிபர் கேட்டுள்ளார்.

சேவையை இலகுவாக்கும் முகமாக தேவையான ஆவணங்களை உரிய திணைக்களங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

(அ). புதிதாக தேசிய அடையாள அட்டை பெறுவதற்குத் தேவையான ஆவணங்கள்:

1. பிறப்பு அத்தாட்சிப் பத்திர மூலப் பிரதி
2. திருமணமானவராயின் திருமணப் பதிவுச் சான்றிதழ் மூலப்பிரதி
3. தொழில் புரிபவராயின் பதவிப் பெயரை உறுதிப்படுத்திய 6 மாதங்களுக்குட்பட்ட கடிதம் அல்லது சான்றிதழ்
4. தேசிய அடையாள அட்டைக்குரிய புகைப்படம் கலர் 06 (முத்திரை அளவு)
5. முத்திரைக் கட்டணம் 15/= (ரூபா பதினைந்து)
6. விண்ணப்பங்கள் அனைத்தும் தங்களுக்குரிய பிரிவு கிராம அலுவலரிடம் பெற்று, உரிய பிரதேச செயலாளரூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

(ஆ). தேசிய அடையாள அட்டை புதிப்பித்தலுக்குத் தேவையான ஆவணங்கள்:

1. உரிய மாற்றத்தினை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்/ ஆவணங்கள்
2. தேசிய அடையாள அட்டைக்குரிய புகைப்படம் கலர் 06 (முத்திரை அளவு)
3. முத்திரைக்கட்டணம் 15/= (ரூபா பதினைந்து).
4. சேதமடைந்த தேசிய அடையாள அட்டை
5. விண்ணப்பங்கள் அனைத்தும் தங்களுக்குரிய பிரிவுக் கிராம அலுவலரிடம் பெற்று, உரிய பிரதேச செயலாளரூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

(இ). தொலைந்த தேசிய அடையாள அட்டை பெறுவதற்குத் தேவையான ஆவணங்கள்:

1. தேசிய அடையாள அட்டை தொலைந்தமைக்கான 6 மாதங்களுக்குட்பட்ட பொலிஸ் அறிக்கை
2. தேசிய அடையாள அட்டை புதிதாகப் பெறுவதற்குரிய சகல ஆவணங்களும் இணைக்கப்படல் வேண்டும்
3. முத்திரைக் கட்டணம் 15/= (ரூபா பதினைந்து)
4. விண்ணப்பங்கள் அனைத்தும் தங்களுக்குரிய பிரிவு கிராம அலுவலரிடம் பெற்று, உரிய பிரதேச செயலாளரூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

(அ). புதிதாகக் கடவுச்சீட்டுப் பெறுவதற்கான ஆவணங்கள்:

1. பிறப்பு அத்தாட்சிப் பத்திர மூலப்பிரதி
2. திருமணமானவராயின் திருமணப் பதிவுச் சான்றிதழ் மூலப்பிரதி
3. தொழில்புரிபவராயின் பதவிப் பெயரை உறுதிப்படுத்திய ஆங்கில மொழியிலமைந்த 6 மாதங்களுக்கு உட்பட்ட கடிதம் அல்லது சான்றிதழ்
4. பிறப்பு அத்தாட்சிப் பத்திர ஆங்கில மொழிபெயர்ப்பு
5. திருமணமானவராயின் திருமணச் சான்றிதழ் ஆங்கில மொழிபெயர்ப்பு
6. கடவுச்சீட்டுப் பெறுவதற்குரிய மூன்று மாதங்களுக்குள் எடுக்கப்பட்ட புகைப்படம் கலர் 03 (3.5cm x4.5cm)
7. கட்டணம்

* சகல நாடுகளுக்குமான கடவுச்சீட்டு ரூபா 2500 (ரூபா இரண்டாயிரத்து ஐந்நூறு)
* மத்திய கிழக்கு நாடுகளை உள்ளடக்கிய குறிப்பிட்ட [illegible] ரூபா.1000 ([illegible])
* இந்தியா மற்றும் நேபாளம் ஆகியவற்றுக்கான அவசரகாலச் சான்றிதழ் ரூபா 500. (ரூபா ஐந்நூறு)

8. விண்ணப்பங்கள் அனைத்தும் தங்களுக்குரிய பிரிவு கிராம அலுவலரிடம் பெற்று, உரிய பிரதேச செயலாளரூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

(ஆ). கடவுச் சீட்டு புதுப்பித்தல்/ மாற்றங்கள்:

1. புதுப்பிக்கப்படவேண்டிய தேவையான ஆவணங்கள்
2. பழைய கடவுச் சீட்டு
3. அத்துடன் புதிதாகக் கடவுச்சீட்டுப் பெறுவதற்கான சகல ஆவணங்களும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்
4. மாற்றங்கள் ஏதுமிருப்பின் அது தொடர்பான அறிக்கை அல்லது உறுதிப்படுத்தல் கடிதம்
5. மாற்றத்திற்குரிய கடவுச்சீட்டு
6. மாற்றத்திற்கு/ புதுப்பித்தலுக்குரிய கட்டணம் ரூபா 500 (ரூபா ஐந்நூறு)

(இ). தொலைந்த கடவுச்சீட்டு பெறுவதற்கான ஆவணங்கள்:

1. தொலைந்தமைக்கான காரணத்தை விளக்கிய 6 மாதங்களுக்குட்பட்ட பொலிஸ் அறிக்கை
2. புதுப்பித்தலுக்கான கட்டணம் ரூபா 10,000.
3. புதிதாகக் கடவுச்சீட்டு பெறுவதற்கான சகல ஆவணங்கள்.

* ஓய்வூதியத் திணைக்களம்

ஓய்வூதியர்களால் விண்ணப்பிக்கப்பட்ட குடிசார், விதவை ஓய்வூதியங்கள் தொடர்பாக ஏற்ற நடவடிக்கை தாமதமாகிய ஓய்வூதியர்கள், விதவை, அநாதை இலக்கங்கள் கிடைக்கப் பெறாத அலுவலர்கள் உரிய பிரதேச செயலாளர், கணக்காளர், கிராம அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு தங்கள் பிரச்சினைகளை மாவட்டச் செயலக நிர்வாகக்கிளையில் உரிய பிரதேச செயலாளரூடாகச் சமர்ப்பிக்கலாம்.

* சமூக அமைச்சு, சமூக சேவைத் திணைக்களம்

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் கண் பார்வை குறைந்த சகல வயதினருக்குமான மூக்குக் கண்ணாடி வழங்கல், முதியோர் அடையாள அட்டை வழங்கல் தொடர்பான கடமைகள் இடம்பெறும். இது தொடர்பாக உரிய பிரிவு பிரதேச செயலாளர், சமூக சேவை உத்தியோகத்தர், கிராம அலுவர்களுடன் தொடர்பு கொண்டு தங்கள் விண்ணப்பங்கள், பிரச்சினைகளை மாவட்டச் செயலக நிர்வாகக் கிளையில் உரிய பிரதேச செயலாளரூடாகச் சமர்ப்பிக்கலாம்.

* தொழில் திணைக்களம்

அலுவலர்களின் ஊழியர் சேமலாபநிதி, ஊழியர் நம்பிக்கை நிதி (E.P.F.& F.P.F.) தொடர்பான தங்களின் பிரச்சினைகளுக்கான ஆலோசனைகளையும், தீர்வுகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

* பதிவாளர் நாயகம் திணைக்களம்

இதுவரை பதியப்படாத பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவுகளைப் பதிவு செய்தல் தொடர்பான விவரங்களை உரிய பிரிவு பிரதேச செயலாளர், உதவி மாவட்டப் பதிவாளர், கிராம அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு தங்கள் விண்ணப்பங்கள், பிரச்சினைகளை மாவட்டச் செயலக நிர்வாகக்கிளையில் உரிய பிரதேச செயலாளரூடாக அல்லது பிரிவுக்குரிய உதவிப்பதிவாளரூடாகச் சமர்ப்பிக்கலாம்.

* மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம்.

1. கொழும்பு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு இதுவரை கிடைக்கப் பெறாத வாகன உடைமை மாற்றம்
2. வாகன அடையாள அட்டை, வாகனப் பதிவுச் சான்றிதழ்
3. சாரதி அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல்
4. வாகன இலக்கத்தகடு
5. புதிய வாகனப் பதிவுகள்
6. பழைய ஆவணங்களுடன் புதிய நடைமுறைக்கமைய வாகனங்களைப் பதிவு செய்தல்.

(203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்வேலி அருள்மிகு ஸ்ரீ அரசகே…

# தேர்த் திருவிழாச்…



## அரசகேசரியானின் அருள்மிகு வரலாறு

யாழ்ப்பாணப் பூமி சைவமும் தமிழும் வளர்த்துப் பேர்பெற்ற நாடு. இங்கு ஆரியச் சக்கரவர்த்திகள் எனும் தமிழரசர்கள் நன்கு செங்கோலோச்சி பற்பல நல்லறங்களைச் செய்துள்ளனர் 'இடபக்கொடியை' தம் கொடியாகவும் இடப இலச்சினையைத் தம் இலட்சினையாகவும் கொண்டவர்களாகிய யாழ்ப்பாணத்தரசர்கள் தமிழ் சங்கம் நிறுவி தமிழாராய்ந்தும் புகழ் பெற்றனர்.

கி.பி (1478- 1519) களில் செண்பகப் பெருமாள் என்பவன் யாழ்ப்பாணத்தை வென்று சிதைந்து போன தமிழ்ச்சங்கத்தை மீளவும் கட்டியெழுப்பினான், இதனை 2ஆம் தமிழ்ச்சங்கம் என்பர். அடுத்து ஆட்சி புரிந்த பரராசசேகரனின் ஆட்சி யாழ்ப்பாண தமிழ்ச் சைவப் பெருமக்களின் பொற்காலம் ஆயிற்று இவன் காலத்தில் சமஸ்கிருதம், தமிழ் இருமொழி வல்லுநனும் தர்க்கம் முதலியவற்றில் தலை சிறந்த பேராளனும் தமிழகத்து ஆழ்வார் திருநகரியில் கற்றுத் தேறி சைவ, வைஷ்ணவ சமரச உணர்வு பூண்டவனாக மிளிர்ந்தவனும் பரராசசேகரனின் மருமகனுமான அரசகேசரி என்பவன் அவைக்களத்தலைமைப் புலவனாய் இருந்தான்.

இவனே இலங்கைத் தமிழிலக்கியத்திற்கே உன்னதமளித்த ''இரகுவம்ச காவியத்தை'' தமிழில் பாடினான் என்பர். இது நிற்க, தமிழரசர்கள் நல்லூரை தலைமையிடமாக கொண்டு நல்லூர், இருபாலை, கோப்பாய், நீர்வேலி ஊடாக அச்சுவேலி செல்லும் திறந்த பிரதான வீதியை பயன்படுத்தியதாக அறியக் கிடக்கிறது: இது ''இராஜவீதி'' என இன்றும் புகழ் பெறுகிறது. அரசகேசரி ஒரு நாள் ஒரு அபூர்வ கனவு கண்டான். அதன் வழி அவன் இராஜவீதியூடாக வருகையில் பனங்கூடலும் நன் மரங்களும் செறிந்த புனிதம் மிக்கதாய் தென்பட்ட ஓரிடத்தில் இயற்கையான எழிலும் சுவையும் மிக்க கூவ தீர்த்தம் ஒன்றிருக்க கண்டான் வியப்புற்ற அரசகேசரி அளவிலா ஆனந்தத்துடன் அங்கே இறைவன் அருளாணைப்படி ஒரு திருக்கோயில் அமைத்து விநாயகரும் பாலாம்பிகாசமேத வைத்தீசப் பெருமானும் கோயில் கொள்ளச் செய்தான்

போர்த்துகீசர் காலத்தில் அரசகேசரி ஆலயமும் சேதமுற்றதாயும் அரசகேசரி விநாயகரடியார்கள் விநாயகப் பெருமானின் திருவருவை கிணற்றுள் மறைத்து காப்பாற்றியதாயும் செய்தி உண்டு. இது எவ்வாறாயினும் 1792இலேயே அரசினர் ஆலய பதிவில் மேற்படி ஆலய பதிவுள்ளமை ஆலய பழைமையை விளக்கும். கதிர்காமர், ஐயம்பிள்ளை என்பவராலும் பின் 1907 முதலாக '' அப்பாச்சாமி குரு'' எனப்பட்ட பரிசுத்தரான ஆலய குருவானவர் சிவஸ்ரீ சு. இராம்சாமிக் குருக்களாலும் ஆலயம் பரிபாலிக்கப்பட்டது. 1949ஆம் ஆண்டிலிருந்து சட்டப்படி பரிபாலன சபை மூலம் ஆலய பரிபாலனம் சிறப்புற நிகழ்கிறது.

1967ல் புதிய சித்திரத்தேர் உருவாக்கியும் 1992ல் முருகனுக்கு தேரமைத்தும் 2004ல் பஞ்சதள இராஜ கோபுரமமைத்து கும்பாபிஷேகம் செய்தும் அடியார்கள் அரசகேசரி பிள்ளையாரை வழிபடுகின்றனர் கா. சாம்பசதாசிவக்குருக்கள் ஆலய குருவாகப் பலகாலம் தொண்டாற்றினார் இன்று அவர் வழியில் சா. சோமதேவக்குருக்கள் இறைபணியாற்றுகிறார்.

இறுதியாக 1995இல் திருக்குடமுழுக்கு விழா கண்ட மேற்படி அரசகேசரி ஆலயத்தில் ஆவணி சதுர்த்தியை அடுத்து கொடியேறி பூரணையை தீர்த்தவிழாவாக கொண்டு பெருந்திருவிழா நடைபெறுகின்றது. ஆலய சூழலில் பாலர் பள்ளி, பாடசாலை, சனசமூக நிலையம், குருபூசைமடம், அறநெறிப் பாடசாலை என்பவுடன் இது ஒரு பெரும் ஆலயமாக விளங்குகின்றது. சிவத்தொண்டன் செல்லத்துரை சுவாமிகளும் சங்கர பண்டிதர் போன்ற பெருமக்களும் பிறந்தகம் ஆகவுள்ள நீர்வேலியூர், ஒரு சிவ மணங்கமழும் தலம். இங்கு வீற்றருளும் சர்வ விக்ன விநாயகராகிய அரசகேசரியானின் திருவடிகளை தினம் சிந்தித்து விக்கினமற்ற மங்கள வாழ்வு வாழ்வோமாக.



## ஆசியுரை

'வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுத்து வரும்'

முதற் பூசைக்கு உரியவரான விநாயகரை வணங்கினால் எல்லாத் துன்பங்களும் நீங்கும். சரித்திரப் பிரசித்தி பெற்ற நீர்வை அரச கேசரிப் பிள்ளையார் கோயில் தேர்த்திருவிழா இன்று நடைபெறுகின்றது. எம் பெருமான் ஆன்மாக்களுக்கு அருள்புரியும் பொருட்டு சித்திரத் தேரில் இவர்ந்து வரும் காட்சி அற்புதமானது. அடியவர்களின் பத்திக் கோசமும், இசைமழையும் பொழிய எம்பெருமான் தேரில் அமர்ந்து அசைந்துவரும் பொழுது எமது உள்ளம் உருகி பக்திபரவசமாகிவிடும். தும்பிக்கையான் எமது வினைஅறுத்து நல்லருள் தருவான்.

ஆன்மாக்களின் ஆணவமலம் போக்கி அருள்தரவே ஆனைமுகன் தேரில் அமர்ந்து காட்சி தருகின்றான். இன்று நடைபெறும் தேர்த்திருவிழா சிறப்புற இறைவனை வேண்டி அடியவர்களுக்கு நல்லாசிகள் கூறி அமைகின்றேன்.

சிவஸ்ரீ. சா. சோமதேவக்குருக்கள், பிரதம குரு,அரசகேசரிப்பிள்ளையார் கோயில்.


ஷாம்பவி
பதிப்பகம்
சகலவிதமான அச்சுப்பதிப்பு வேலைகளைச் சிறந்த முறையில் உங்கள் எண்ணத்திற்கேற்ப வடிவமைத்துத் தருபவர்கள்.
Shampavi Printers
Neervely & Jaffna.
276, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4143
நீர்வேலி தெற்கு, நீர்வேலி.
077 6184425

ஒரே கூரையின் கீழ் ஆலய அபிஷேகத் திரவியங்கள், மருந்துப் பொருள்கள், புடைவை வகைகள், மளிகைப் பொருள்கள், அன்பளிப்புப் பொருள்கள் ஆகியவற்றை மலிவாகப் பெற்றிடலாம்.
திருமுருகன்
திருமண மண்டபமும் பல்பொருள் அங்காடியும்
கரந்தன் வீதி, நீர்வேலி.
(கந்தசுவாமி கோயில் வடக்கு வீதி)
தொ.பே. 060 2217320, 077 6660241.

சகல வாகனங்களுக்கும் ரியூப் ஒட்டும் வேலைகள் நேர்த்தியாகச் செய்து தரப்படும். அத்துடன் திரைப்பட இறுவட்டுக்கள் மற்றும் ஒளி நாடாக்கள் வாடகைக்குப் பெறலாம்.
மூர்த்தி வேக்ஸ் சொப்
கரந்தன் வீதி, நீர்வேலி தெற்கு.

கஜானன்
அரைக்கும் ஆலை
இராஜ வீதி, நீர்வேலி வடக்கு.
உரிமையாளர்: S. நாகரத்தினம்.

ஜெயகலா
அரைக்கும் ஆலை
அரசகேசரிப் பிள்ளையார் ஆலய வடக்கு வீதி.

பிரதா…
ரான்ஸ் பேரேட்…
நீர்வேலி வட…
உரிமையாளர்: க. …







பிறவுண்ஸ் அன்…
❄ TAFE உழவு இயந்திரம், ❄ EXIDE பற்றரி வகை…
❄ ரோனர் வகைகள் …
அக்ரோ ரெக் நிறுவனத்தின் இரு சக்கர உழவு…
சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்…
❄ உரவகைகள் ❄ கிருமிநாசினி வகை…
❄ கால்நடைத் தீவனங்கள் ❄ பெயின்…
ஏனைய கெல்லீஸ், பாம்கெமி, மக்ரட்ஸ் கம்பனிகளின் …
மருந்துகள் என்பவற்றையும் வீட்டுப்பாவனைக்கு…
மொத்தமாகவும் சில்லறையாகவும் ஒரே கூரையின் கீழ்…
பவானி க…
இராஜ வீதி, நீர்வேலி வ…

கஜமுகா ரேட்சென்ரர்
கே.கே.எஸ் வீதி,யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரான்பற்று பெரியவளவு முருகமூர்த்தி கோயில்

## தேர்த்திருவிழாச் சிறப்பு மலர் – 03.09.2009



### நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி



பிரான்பற்று முருகமூர்த்தி ஆலயத்தில்இன்று தேர்த்திருவிழா, அழகன் முருகன் அடியார்களுக்கு அருட்காட்சி தருகின்ற புனிதத் திருநாள் இன்றாகும்.

முன்னைவினை தீர்க்கும் முருகப் பெருமான் அழகிய திருத்தேரிலே ஆரோகணித்து வீதிவலம் வரும் அற்புதக் காட்சியை இன்று கண்குளிரக் காணலாம்.

அநியாயங்களையும் அக்கிரமங்களையும் அழித்தொழிக்கத் தேரிலே புறப்பட்டு விட்டான் தேவசேனாபதி. கலியுகவரதனான கந்தப்பெருமான் வழிபடும் அடியார்களின் குறை தீர்க்கும் குமரனாக இன்று தேரிலே வீற்றிருந்து அருளை அள்ளி வழங்கும் அருட்காட்சி பிரான்பற்று மக்களுக்கெல்லாம் ஓர் அரிய வாய்ப்பாகும்

முத்தமிழால் வைதாரையும் வாழ வைக்கும் முருகப் பெருமானது பாதார விந்தங்களைப் பணிந்து எல்லோருக்கும் அருள் வழங்க வேண்டுமென உளமாரப் பிரார்த்தித்து அருளாசி வழங்குகின்றோம் என்றும் இன்பம் பெருகி அனைத் தடியார்களும் ஆனந்த மயமான வாழ்க்கையில் மங்களம் நிறைந்து மன நிம்மதியுடன் வாழ்வார்களாக.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்,
இரண்டாவது குருமஹாசந்நிதானம்,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், யாழ்ப்பாணம்.

### வாழ்த்துச் செய்தி

இலங்கைத் தீவின் வடபால் அமைந்து விளங்கும் பிரான்பற்று பதியிலே எழுந்தருளிக் குடிகொண்டிருக்கும் பெரியவளவு முருகன் ஆலயத்தில் வருடம் தோறும் ஆவணி பௌர்ணமியைத் தீர்த்தோற்சவமாகக் கொண்டு பன்னிரண்டு தினங்கள் மகோற்சவம் நடைபெறுவது வழமை. அதே போன்று விரோதி வருஷம் 2009 ஆண்டு 09 மாதம் 03ஆம் திகதி இரதோற்சவம் சிறப்பான முறையில் நடைபெறுவதையிட்டு மகிழ்வடைவதுடன் இவ்விரதோற்சவம் சிறப்புற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்பதுடன் பெரிய வளவில் அமர்ந்து கருணை செய்யும் கந்தா எல்லா மக்களின் துயர் துடைக்க தேரேறி வருக.


ஆலய பரிபாலன சபை,
பிரான்பற்று, பெரியவளவு, முருகமூர்த்தி ஆலயம்.

### தேரேறி வந்தெம்மை காத்தருளாயோ

ஞான வேலுடனும் சேவல் கொடியுடன்
தோகை மயிலேறி
பிரான்பற்று பதி உறையும்
ஆறுமுக வேலா தேரேறி வாரீர்
வளமான பெரியவளவில் வாழ்கின்ற மக்களை
வாரி அனைத்து வாழ்வளிக்கும் முருகா
வள்ளி தெய்வானையுடன்
வண்ணத் தேரேறி வாரீர்
ஆனை முகத்தோன் முன்னேவர
ஆறு முகத்தோன் பின்னேவர
அரு முகத்துடன் இச்சா, கிரியா சக்தியுடன்
அருள் பொழிய சுப்பிரமணியனாக தேரேறி வாரீர்
வேல்தனை தூக்கி மயில்மீது அமர்ந்து
சேவல் கொடியுடன் கருணை முகம்கொண்டு
வல்வினைதனைப் போக்கி -நல்
வாழ்வு தனை தந்திட தேரேறி வாரீர்

நா. சசிக்குமார் (B.A)
பிரான்பற்று, பண்டத்தரிப்பு.





### பிரான்பற்றில் உதித்தவன் அருள் செய்ய தேரேறுகிறான்



தமிழுக்கோர் தெய்வமென முருகா வந்தாய்
தரணிக்கோர் இறையாகிக் கந்தா நின்றாய்
அமிழ்தமெனும் தமிழுக்கே அழகைச் சேர்த்தாய்
அழகுக்கு அழகாக முருகா அவதரித்தாய்
தமைநந்தும் எளியவர்க்கு தாயாய் நின்றாய்
சரவணத்துத் தாமரையில் தமிழாய் பூத்தாய்
பிரான்பற்று பதிதனிலே வந்துதித்தாய்
பெரிய அருள் நலத்தால் எமைக்காப்பாய்

வர்ணணைக் கலாநிதி, மதுரகவி
காரை.எம். பி.அருளானந்தன்.

### அருளை வழங்க தேரில் பவனி வரும் பெரியவளவு முருகப் பெருமான்



இந்து சமுத்திரத்தில் முத்தாய் விளங்கும் இலங்கைத் திரு நாட்டில் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாண நகரிலே பிரான்பற்று என்னும் அழகிய எழில்மிகு கிராமத்தில் மகா வல்லி ஹஜ வல்லி சமேதராக எழுந்தருளி அருள் பாலித்து கொண்டிருக்கும் பெரியவளவு சிவசுப்பிரமணியர் கோயில்.

ஆலயத்தில் நடைபெறும் நித்திய, நைமித்திய, காமிக கிரியை போன்றனவற்றில் நிகழும் தவறுகளை போக்கும் வகையில் சிறப்பாக நடைபெறும் உற் சவம் மஹோற்சவமாகும். இந்த வகையில் கொடியேற்றி நிகழும் பிரமோற் சவம் நைமித்திய உற்சவத்தில் சிறந்த தாகும். இந்த வகையில் பெரியவளவு முருகமூர்த்திக்கு ஆவணி பூரணையை தீர்த்தமாக கொண்டு 11 நாள்கள் மஹோற் சவம் நடைபெறுகின்றது. அந்த வகையில் இன்று பிரான்பற்று பெரியவளவு முருகமூர்த்தி கோயிலில் முத்தேர்ப்பவனி இடம்பெறுவது சிறப்பாகும். தேர்த்திருவிழா என்பது இறைவன் தன்னை நோக்கி இதுவரை நாளும் விசேட வழிபாட்டில் ஈடுபட்ட அடியார்களின் புலன் கள் முதலான பகை அனைத்தையும் அழிக்க தேரில் இறை வன் எழுந்தருளும் உற்சவமாகும்.

எனவே மஹோற்சவம் கலைகளின் வெளிப்பாட்டையும் வழிபாட்டையும் தெளிவு படுத்துவதோடு சமூக ஒழுக்கம், கலாசாரம் ஆன்மீக விடுபேறு என்னும் அளப் பரிய மாற்றமாகும்.

பிரான்பற்று பெரியவளவு முருகமூர்த்தி ஆலயத்தில் தேர்த்திருவிழா சிறப்பாக நடைபெற இறைவன் திருவருளும் எனது நல்லாசிகளும்,

சுபம்
பிரம்மஸ்ரீ இ.உலகேஸ்வரக் குருக்கள்
பிரான்பற்று முருகமூர்த்தி தேவஸ்தானம், பிரதமகுரு, மஹோற்சவ குரு

### கலாப மயிலேறிக் காத்தருளும் வேலவனே வாழி!

சைவமும் தமிழும் தழைத் தோங் கும் பழம்பெரும் பதியாம் பிரான்பற் றுப் பெரியவளவு முரு கனைத் தொழுவோர்க்குப் பேரிடும்பை நீங்கி பேரா னந்தம் பொங்கிடுமே என்றவாறு சக்தி சிவத்தின் ஆற்றலாகிய திகளொ ளிப் பரப்பிரமத்தை இன்றைய தினத் தில் பவனிவரும் சித்திரத் தேர்களில் காணலாம்.

இச்சாசக்தி ஞானசக்தி, கிரியா சக்தியாகிய திருவருளால் துதிபாடும் மக்களெல்லாரும் கூடிப் பணிந்து பெற்றுக் கொள்ளும் கருணைக் கடாட்சப் பேற் றினை "திருக்குரானடி நிழல் தனிலுறைவோனே திருக்கை வேல் வடிவழகிய பெருமாளே" யென அருணகிரி சுவாமிக ளும் போற்றியுள் ளார். அன்பைக் கொடுத்து அருளைப் பெறும் அடியார்களாகிய நாம் இப்பிரதேசத்தில் புகழ் பெற்ற முருகன் ஆலயங்களில் இதுவும் ஒன்று. பல்லாண்டு காலங்களுக்கு முன் புனிதம் பெற்ற தலம் என்று ஆலயவரலாற்றுப் பூம்பந்தல் பதிகம் கூறுகின்றது.

இங்குயர் கோலாகலமான கிரியா கோமயாக பூஜைகள் நிவர்த்திக்கும் தேர் விழாவில் பஞ்சகிருத் திய நித்திய தாண்டவபதத்தோனின் குமாரனாகிய முருகப் பெருமானின் தாழ் பணிந்து விழாக்காண மக்கள் யாவரும் " வருடாவருடம் கந்த புராணப் படிப்பும் வந்து குவிந்திடும் ஆவணித் திங்கள் கொடியேற்றுவிழா மூன்றில் கைலாய வாகனம் எட்டில் வேட்டை ஒன்பதில் சப்பறம் பத்தாம் நாள் சித்திரத்தேர் மூன்று முந்து கணபதிக்கென்று அருட்சோதி அழகனுக்கென்று வள்ளி குஞ்சரி வணங்கும் ஆறுமுகனுக் கொன்றாய் கைலயங் கிரி மல்கும்" என வரலாறு பாடி மகிழும் பெருமானை அடியார்களும் அனைவரும் நாமும் சிறப் புறப் பணிந்து அருள் பெற்று வழுதி வாழ்த்துவோமாக.

புராணபடன வித்தகர் கலைமணி க.தெய்வேந்திரம் (A.I.J.P)

## ஆலயத்தின் தோற்றமும் வரலாறும்

"ஆலயம் இல்லாத ஊர் அடவிகாடு' என அப்பர் பெருமான் கூறியது போல இக்கிராம மக்களை ஆன்மீக சிந்தனையாளர்களாக நிலைநாட்டிக் கொண்டிருப்பது ஆலயங்கள் எனலாம். இவற்றுள் பிரான்பற்று பெரியவளவு முருகன் கோயிலும் ஒன்றாகும்.

பிரான்பற்று என்ற பெயரை நோக்கினால் ஆரம்பத்தில் இக்கிராம மக்கள் தொகை குறைந்தும் பார்க்குமிடம் எங்கும் பாரிய மரங்களும் பற்றைகளுமாக காணப்பட்டன. காணப்பட்ட மரங்களில் "பிராய்" என்ற மரங்கள் அதிகமாக காணப்பட்டன. இதனால் முன்னோர்கள் "பிராயம்பத்தை" என்று அழைக்கலாயினர். பின்னர் காலம் செல்லச் செல்ல "பிராம்பத்தை" என்ற சொல்லில் வந்த "பத்தை " என்ற சொல்லினை நீக்கி "பற்று" என்ற சொல்லினை மாற்றி "பிரான் பற்று" என்று மருவி வரலாயிற்று இவ்வாறே இந்த பெயரானது 'இன்றும் பேசப்பட்டு வருகின்றது.

அத்துடன் மற்றுமொரு காரணமும் கூறப்படுகிறது. முருகன் மீது இங்கு இருக்கின்ற மக்கள் பற்று வைத்திருந்ததால் "பிரான்பற்று" என்று அழைக்கலாயினர்.

**ஆலயத்தின் தோற்றம்**

சைவத்திருக்கோயில்கள் சிறந்து விளங்கும் யாழ்ப்பாணத்தில் பிரான்பற்றும் ஒன்றாகும். பிரான்பற்று பெரிய வளவில் அமைந்திருந்து அருளாட்சி செய்கின்ற முருகன் பெருமையும் புகழும் அளப்பரியது. இக்கிராமத்தில் வாழ்கின்ற மாமிசம் எதனையும் உண்ணாத பரம்பரையினர் பத்தியில் உதித்த முருகேசு கார்த்திகேசுவினால் தோற்றம் பெற்றது.

அதாவது 1900 ஆண்டளவில் வந்துதித்த கார்த்திகேசு சிறந்த முருக பக்தனாக திகழ்ந்தார். இவருடைய வளவில் ஒரு பெரிய வில்வ மரம் ஒன்று இருந்தது இவருடைய கனவிலே முருகன் தோன்றி " உனது வளவில் உள்ள வில்வ மரத்தடியில் நான் இருக்கின்றேன்"என்று அருளி மறைந்தார். அடுத்த நாள் காலை அந்த மரத்தடியை சென்று பார்த்த போது வேல் ஒன்று இருப்பதனை கண்டு மகிழ்ந்தார். அதனை அம்மரத்தடியில் வைத்து வழிபட்டு வந்தார். சிறிது காலம் செல்லச் செல்ல அந்த வேலை மழை, வெய்யிலில் இருந்து பாதுகாக்க ஒரு தகரத்தினால் வளைத்து முகடு மாதிரி போட்டு வழிபட்டனர். அத்துடன் இவர் ஒரு பசு வளர்த்து வந்தார். அதனுடைய பாலினை கறந்து வேலுக்கு வைத்து வழிபாட பின்னர் எடுத்து வரும் காலத்தில் இவருடைய பசுவினை யாரோ திருடிச் சென்றனர். அதனை முருகன் தெரியப்படுத்தியதால் "உண்மையாகவே முருகன் இருகின்றார் என்று சொல்லி தானும் தன்னுடைய பிள்ளைகளான மார்க்கண்டு, செல்லக்கண்டு, தர்மலிங்கம், மகள் தெய்வநாயகி ஆகியோரின் உதவியுடன் பனை ஓலைகளை வெட்டி அம்மரத்தடியுடன் இணைத்து ஒரு கொட்டில் ஒன்றைப் போட்டு வழிபட்டனர். இந்த வளவு அடைப்புக்கள் இல்லாது காணப்பட்டதாலும் இவருடைய வளவின் பின்புறம் வயல் என்பதாலும் வளவினூடாகவே வயலுக்கு செல்லும் மக்கள் போவர். போகின்றவர்கள் முருகன் மீது நம்பிக்கை கொண்டு வழிபட்டனர். பின்னர் பொங்கல் செய்தும் வழிபடலாயினர். இவ்வாறு மக்கள் மனதில் இடம்பிடித்த முருகன் நோய் நொடிகளை தீர்த்தும் வந்தார். இவ்வாறு இருக்கும் காலத்தில் கல்லாலான கோயில் கட்ட வேண்டும் என்ற எண்ணத்தின் விந்தையே இன்றைய பெரியவளவில் கம்பீரமாய் காட்சியளிக்கும் இக்கோயில்.

ஆலய வளர்ச்சி பிரான்பற்று பெரியவளவு முருகன் ஆரம்பத்தில் மரத்தடியிலும் பின்னர் ஓலையினால் ஆன கொட்டிலிலும் அருள்பாலித்து வந்த முருகனுக்கு கல்லாலான ஒரு கோயிலை கட்ட இக் கோயிலைத் தோற்றுவித்த கார்த்திகேசுவும், அவருடைய புதல்வர்களும் கைத்தம்பி, வீரசிங்கம் முத்து ஆகியோரின் தலைமையில் 1935இல் கோயில் கட்டும் பணி ஆரம்பமானது.

கோயில் அமைப்பதற்குரிய பணம் மக்களிடம் இல்லை. அதனால் இவர்கள் பனையோலையால் இழைத்த குட்டான்கள் (பெட்டி) ஒவ்வொரு வீட்டிற்கும் ஒன்று என்று கொடுத்து பின்வருமாறு கூறப்பட்டது.

"நீங்கள் சமைக்கும் அரிசியிலும் ஒரு கைப்பிடியை எடுத்து இது முருகனுக்கு என்று சொல்லி இந்த குட்டானுக்குள் போடுங்கள் இது நிறைந்த பின்னர் கோயிலடியில் கொண்டுவந்து தாருங்கள்" என்றுகூறப்பட்டு கொடுக்கப்பட்டது. அப்படி சேர்க்கப்பட்ட அரிசியை விற்றும் வசதி படைத்தவர்களிடம் இருந்து பெறப்பட்ட பணத்தில் இருந்தும் கோயில் கட்டும் பணி ஆரம்பமானது. இக்கால கட்டத்தில் கார்த்திகேசு இறைபதம் அடைந்தார். தந்தையின் வழிநின்று மகனான செல்லக்கண்டு கோயில் கட்டட வேலையைப் பூர்தியாக்கி பிரம்மஸ்ரீ சாமிக்குருக்கள் வரும் வரையும் பூசை செய்து வந்தார்.

கோயில் கட்டி முடிவுறும் காலத்தில் கருங்கல்லினாலான முருகன், வள்ளி, தெய்வானை விக்கிரகங்களும் ஏனைய பரிவார மூர்த்தங்களும் 1945 ஆண்டு கொண்டு வரப்பட்டன. 1945ஆம் ஆண்டு பிரம்மஸ்ரீ சாமிக்குருக்கள் தலைமையில் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இக்காலம் வரையும் தனி ஒருவருடைய தலைமையில் இருந்த ஆலயம் 1972ஆம் ஆண்டு சாமிநாதன் சின்னராசா தலைமையில் ஆலயத்துக்கு நிர்வாகசபை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. அன்று தொடக்கம் ஒழுங்கான முறையில் இன்று வரையும் ஆண்டு தோறும் புதிய நிர்வாகம் மாற்றப்பட்டு வருகின்றது.

நிர்வாகத்துடன் ஒத்துழைப்புடனும் ஊர்மக்கள் உதவியுடனும் சா.சின்னராசா தன்னாலான சகல ஒத்துழைப்புக்களையும் வழங்கி 3/4 பங்குக்குக்கூட தானே பொறுப்பேற்று இந்திய கட்டட கலைஞர்களை வரவழைத்து இராஜ கோபுரத்தை அமைத்தார். 1979.07.03 சிரோமணி க.சிவபாலக்குருக்கள் தலைமையில் கோபுர கும்பாபிஷேகம் நடைபெற்றது.

ஐந்தாவது கும்பாபிஷேகம் 27.03.2000 - பிரம்மஸ்ரீ உலகேஸ்வரக்குருக்கள்
பரிவார மூர்த்திகளின் முத்தேர் இன்று (03.09.2009) வியாழக்கிழமை முத்தேர் நடைபெறவிருக்கிறது.
இந்நிகழ்வை அடியார்கள் கண்டு பிரான்பற்று முருகமூர்த்தியின் அருள் பெற்று இன்புற்று வாழ வேண்டுகிறோம்.

மலர் அமைப்பு: திரு.நா.சசிக்குமார் (B.A).

T.S.S.சின்ராசா
தேர்த்திருவிழா உபயகாரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டைமானாறு செல்
## தேர்த் திருவிழாச் சிறப்பு



### ஓம்கார மாமணி ஒலிக்க தேவாதி தேவனே தேரேறி வருக!



எந்நிதியும் தர சந்நிதியில் பெரு நிதியாக உறைந்த கந்தப்பெருமான் மருதர் கதிர்காமர் என்னும் மகானை ஆள்கொண்டு கதிர்காமம் காட்டித் தமக்குப் பக்திமார்க்கமான பூசையை வல்லியாற்றம் கரை பூவரச மரத்தருகே புரிவித்து உவந்தமுதம் தந்து ஆற்றுப்படுத்திய ஆற்றங்கரை வேலன் அண்ணன் ஆனைமுகன் முன்வர வள்ளி, தெய்வயானை சமேத ஷண்முகப்பெருமான் சுவாமிகள் மூன்று தேர்களில் சந்நிதியில் வலம் வந்து அருள் சுரக்கின்றனர்.

அன்னதானக் கந்தனை அடிபணிகின்றோம். அவனது அனுக்கிரகமும் அற்புதமும் எண்ணற்றவை, அனுபூதி நிலையில் அவன்தன் பெருநிதி பெற்றோர் அனேகர்.

அக்கினி தத்துவமாகி (அழித்தல்) தேர்கோலம் கண்டு தரிசித்து எதிர்வருகின்ற வினை என்னும் துயர் களைந்து ஆவணி பூரணையில் திவ்விய தீர்த்தம் ஆடி திருவருள் ஆனந்தம் பெறுவோம்.

ஆறு.சிவசண்முகம் ஐயர், தலைவர்- ஸ்ரீ செல்வச்சந்நிதி, ஆலயம் தொண்டைமானாறு.

### ஆசியுரை



செல்வச்சந்நிதி ஆலய முருகப்பெருமான் மீது அளவு கடந்த பக்தி கொண்ட சைவப் பெருமக்கள் உலகின் பல பாகங்களிலும் வாழ்ந்த போதும் மகோற்சவ காலத்தில் அதிஉன்னத விரத அனுஸ்டானங்களை மேற்கொள்வது சிறப்புக்குரியதாகும். மகோற்சவ காலத்தில் தேர், தீர்த்தம் இரண்டும் அதி முக்கியமும் சிறப்பும் கொண்டன. அனேகர் மகோற்சவ காலத்தில் தவறாது தேர், தீர்த்தம் இரு நாள்களில் ஒரு நாளாவது வந்து பெருமானை தரிசித்தால் இஷ்ட சித்தி பெறலாம் என்ற நம்பிக்கை கொண்டுள்ளார்கள். அதிலும் ஆன்மாவின் பாவவினைகளை அழித்தொழிக்கும் தேர்மீது பவனி வருவதை கண்ணுற விரும்பி அலையெனத் திரளும் அடியார் வெள்ளம் தேரின் மகத்துவத்தை உணர்த்துகிறது. இவ்வாறு தனி மகத்துவம் கொண்ட தேர் உற்சவ தினத்தன்று உதயன் பத்திரிகை மலர் வெளியிடுவதில் நம் எல்லோர்க்கும் மிக்க மகிழ்ச்சி. இம் மலர் வெளியீட்டிற்கு முருகப்பெருமான் திருவருளுடன் எனது நல்லாசியினை வழங்குகிறேன்.'

த. மகேந்திரன் ஐயர்,மகோற்சவக் குருக்கள்.

### தேர்ப் பவனி கண்டு முருகன் அருள்பெறுவோம்



ஆலயங்கள் ஆன்ம ஈடேற்றத்திற்கு இன்றியமையாதன. ஆலயங்களில் மகோற்சவ காலம் மிகவும் புனிதமும் பக்தர்களின் பக்திவெள்ளமும் இறையருளும் மிக்கதானது. இம் மகோற்சவத்தில் தேர், தீர்த்தம் ஆகியன விசேடத்திற்குரியன. தேர் உற்சவத்தில் அடியார்களின் நேர்த்திகள் எல்லோரையும் ஈர்த்து மனமுருக்கும் நிலையினை ஏற்படுத்தும்.

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் தேர் உற்சவ நாளில் பல பக்தர்களின் மனக்குறைகள் அசை மீட்டுவது வழமையாகிவிட்டது. 1984 இல் உருவாக்கப்பட்ட சித்திரத்தேர் இருவருடங்களில் வன்முறை அதிகரிப்பால் அழிக்கப்பட்டது. பாவவினை அழிக்கப் பெருமான் பவனிவருவது தேர் உற்சவத்தில் என்று சமயம் அறிவுறுத்துகின்றது. ஆனால் ஏராளமான பாரிய செலவில் அமைக்கப்பட்ட செல்வச்சந்நிதி தேர் இருவருடங்களில் அழிக்கப்பட்டது எல்லோர் நெஞ்சங்களிலும் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தி விட்டது. இருப்பினும் பழைய தேர் பாதிப்புக்குள்ளாகாது பத்திரமாக இருந்தது பெருமான் சித்தமே. எனினும் 2003, 2004 இல் புதிய சித்திரத்தேர்கள் அமைத்து சிறப்பாக்கி வருவது யாவர்க்கும் மகிழ்ச்சியைக் கொடுக்கின்றன. இவ்வாறான மகிமை பெற்ற தேர் உற்சவத்தில் அடியவர்கள் பங்குகொண்டு பெருமான் அருள் பெறும்வேளையில் உதயன் பத்திரிகை ஸ்தாபனம் விசேட அனுபந்தம் வெளியிடுவது மிகவும் போற்றத்தக்கது. இப்பணி சிறந்து விளங்க மக்கள் மனத்திருப்தி பெற்றுப் பெருமான் நல்லருளைப் பெற வேண்டுதல் செய்து எமது நல்லாசிகளை வழங்குகின்றோம்.

வி.தெய்வேந்திர ஐயா, பொதுச் செயலாளர், செல்வச்சந்நிதி ஆலய பரிபாலன சபை.

### நல்லை ஆதீன குரு முதல்வரின் அருளாசிச் செய்தி



செல்வச்சந்நிதி ஆலயத்தில் இன்று தேர்த்திருவிழா. அன்னதானக் கந்தன் என்று அழைக்கப்படுகின்ற அழகன் முருகன் இன்று சித்திரத்தேரேறி சிங்காரப் பவனிவரும் அற்புதமான அருள்காட்சி காணக் கண்கோடி வேண்டும்.

சந்நிதியிலுறையும் சண்முகப்பெருமான் இன்றையதினம் அடியவர்க்கருளும் அருட் கந்தனாக தேரிலே ஆரோகணித்து வருகின்றான். வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனான முருகன் செல்வச்சந்நிதி வேலவனாக வழிபடும் அடியார்களின் குறைதீர்க்கும் குமரனாக வீற்றிருந்து அருள்பாலிக்கின்றான். கருணைபுரியும் கார்த்திகேயன் கழலினை பணிபவர்களுக்கு பேரானந்தப் பெருவாழ்வை நல்க வேண்டும் என்று உளமாரப் பிரார்த்தித்து அருளாசி வழங்குகின்றோம்.

ஈழம் வாழ் மக்கள் அனைவரும் துன்பம் நீக்கி இன்பம் எய்தி நலமே வாழவேண்டும் என்று சந்நிதியானை வேண்டி வாழ்த்தித் துதித்து நல்லைக் குருமணியின் பாதபங்கயம் பணிந்து வணங்குகின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.




**ஆசைப்பிள்ளை**
அன் சன் நகைமாடம்
22 கரட் தங்க நகைகள் விரும்பிய டிசைன்களில் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்துகொடுக்கப்படும்.
இல.10, பஸ் நிலையம் முன்பாக, சங்கானை.

**செ.இராசரட்ணம் SRP பம்புகள்**
நீர் இறைக்கும் இயந்திர உதிரிப்பாக உற்பத்தியாளர்
கே.கே.எஸ். வீதி, கோண்டாவில், தாவடி.

**சிறி நதியா**
நகை மாளிகை
அன் டிஜிற்றல் கலர் லாப்

யாழ்.நகரில் புதிய பொலிவுடன்
- யப்பானிய தொழில் நுட்பத்துடன் புத்தம் புதிய லுமாலா ஆண், பெண், ஸ்போட்ஸ், யுனியர் துவிச்சக்கர வண்டிகளும் அதன் உதிரிப்பாகங்களும்.
- இந்தியாவில் உற்பத்தியாகி, உலகத் தரக்கட்டுப்பாட்டின் ISO 9001 சான்றிதழ் பெற்ற புத்தம் புதிய கிரோ ஆண், பெண், ஸ்போட்ஸ், யூனியர் மிதிவண்டிகளும், உதிரிப்பாகங்களும்.
- வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மௌண்டின், சொப்பர் மிதிவண்டிகளும் பேபி வோக்கர், பேபி பிறேம், பேபி கார் வகைகளும்
- பல்வகையான தொலைக்காட்சிப் பெட்டிகள், வானொலிப் பெட்டிகள், சீடி டெக் வகைகள், கசற் றேடியோக்கள், டிஸ் அன்ரனா வகைகள், ஓடியோ, வீடியோ கசற்றுகள், சீடி வகைகள் பிலிம்ரோல் வகைகள் மணிக்கூட்டு வகைகள், மிக்சி வகைகள், றைஸ்குக்கர், அவண் வகைகள், சாச்சர் லைற் வகைகள், மின் கேற்றல் வகைகளும்.
- பினிக்ஸ் பிளாஸ்ரிக் வீட்டுப் பாவனைப் பொருள்கள், தளபாட வகைகளும்.
- மோட்டார் வாகன ரயர், ரியூப் வகைகளும் மற்றும் தலைக்கவசங்கள்.

இவை அனைத்துப் பொருள்களையும் ஒரே நவீனமயப்படுத்தப்பட்ட காட்சி அறைகளில் நீங்கள் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
**இ.ச.பெ. நாகரத்தினம் சக நிறுவனம்**
52, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P 0212223096, Fax 0212224394, E-mail: ESPN.JF @ Hotmail.com

மீண்டும் வந்துவிட்டது மில்க்வைற் நீலசே..
**மில்க்வைற் தொழிலகம்**
த.பெ.இல.77, யாழ்ப்பாணம்.

இப்போது அதிக பணம் எங்களிடமிருந்து ரன் சுரக்கும் கடன் சேவை
இலங்கை வங்கியின் ரன் சுரக்கும் அடகுச் சேவையுடன் இணையும் உங்களுக்கு அதிக சலுகைகள்.
அதிக பணம் குறைந்த வட்டி தவணை முறையில் மீளச் செலுத்தல், அரச வங்கியின் உயர் பாதுகாப்பு,
இப்போது இலங்கை வங்கியில் ரன் சுரக்கும் அடகுச்சேவையின் மூலம் அதிக பணத்திற்கு குறைந்த வட்டி.....
தங்க பிஸ்கட்டுடன் 24 கரட் தங்கப்பவுண் ஒன்றுக்கு ரூபா 21000/=
22 கரட் தங்கப் பவுண் ஒன்றுக்கு ரூபா 19 000/=
இன்னும் அதிக வரப்பிரசாதங்களுடன் அரச வங்கியின் நம்பிக்கையான பாதுகாப்பு
இலங்கை வங்கி
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள இலங்கை வங்கி கிளையை அல்லது எமது 24 மணி நேர வாடிக்கையாளர் சேவை மையத்தை தொடர்பு கொள்ளுங்கள்
தொ.பேசி. 0112 204 444
BOC
தேசத்தின் வங்கியாளர்

மொத்த, சில்லறை வியாபாரம் உலகெங்கிலிருந்தும் வடமராட்சி வாழ் மக்கள் பணத்தினை வெஸ்டன் யூனியன் பணப்பரிமாற்றம் மூலம் விரைவாகச் செய்துகொள்ளலாம்.
**புதிய அம்பிகா ஸ்ரோர்ஸ்**
பிரதான வீதி, நெல்லியடி.
தொலைபேசி இல: 0212263139, 021 226 3571.
பக்ஸ்: 021 226 4197.


**கிருபா லேணர்ஸ்**
சாரதி பயிற்சிப் பாடசாலை
புதிய சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கும் மற்றும் எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வீதி ஒழுங்கு வகுப்புகளும் ரெயல் பரீட்சையில் சித்தியடைய வான், மோட்டார் சைக்கிள், ஆட்டோ ஆகிய வாகனங்களில் விசேட பயிற்சியும் வழங்கப்படும்.
தலைமைக் காரியாலயம்:
225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 4353, 0777225292.
கிளை: மகாத்மா வீதி, நெல்லியடி. 0652006550.

சந்நிதி முருகா தேரேறி வந்
பாடசாலை, அலுவலக,
தேவையான காகிதாதிகள்
கணணி உபகரணங்கள், அ
கவர்ச்சிதரும் அப்பிய
அனைத்துக்கும் நாட
**பேப்பர்**
300, ஆஸ்பத்திரி வீதி


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ல்வச்சந்நிதி முருகன் ஆலய

# ப்புமலர் - 03.09.2009





## அன்னதானக் கந்தனுக்கு இன்று தேர்த்திருவிழா



அன்னதானக் கந்தனின் கடைக்கண் பார்வை எல்லோர்க்கும் கிடைக்கப் பிரார்த்திப்போம்.

'வீரவேல் தாரவேல் விண்ணோர் சிறை மீட்டவேல்
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் - வாரிக்
குளித்த வேல் கொன்றை வேல் சூர் மார்பும் குன்றும்
துளைத்தவேல் ஒன்றே துணை'

வேண்டுவார் வேண்டுவன தருவான் எங்கள் சந்நிதி வேற்பெருமான். அடியவர்களின் அடியவனாய் இருந்து எம்மையெல்லாம் காத்தருளும் சிங்கார வேலனுக்கு இன்று தேர்த்திருவிழா. இன்று தேரேறிவரும் ஆற்றங்கரையானின் அருளொளியின் பிரகாசம் எங்கெங்கும் பரவத் திருவுளங்கொண்டு சின்னக் கதிர்காமமாம் எங்கள் சந்நிதி வேலவனின் அருளொளி எங்கும் பரவட்டும்.

தலவிருட்சமாம் பூவரசமரத்தடியில் அமர்ந்திருக்கும் வேலனுக்கு 65 ஆலிலையில் அமுது படைத்து எம்பெருமானின் அருமருந்தை நாமெல்லாம் உட்கொண்டவுடன் எம்மிடம் உள்ள அனைத்து வினைகளும் அறுக்கப்பட்டு அன்னதானக் கந்தனால் ஆட்கொள்ளப்படுவது திண்ணம்.

தேரேறிவரும் எம் வேலவனை அன்போடும் பக்தியோர்டும் சைவ சீலர்களாக அடியவர்கள் கூட்டம் தென்றலாக அருளொளி வீசி தவழ்ந்துவரும் எங்கள் செல்வச்சந்நிதிக் கந்தன் அடியவர்களுக்கு நிம்மதியான வாழ்வையும் சுபீட்சமான எதிர்காலத்தையும் வாரி வழங்கவரும் இந் நன்நாளில் அன்னதானக் கந்தனின் நாமத்திற்கேற்ப அன்னத்தை குறைவில்லாது தன்னை நாடிவரும் அடியவர்க்கெல்லாம் பசிப்பிணியைப் போக்கிக்கொண்டிருக்கும் வேலவனின் தாள்பணிந்து எல்லோர்க்கும் அருள் கிடைக்க போற்றுகின்றோம்.

'எந்நிதியும் தரும் எங்கள் அன்னக் கந்தன்'

செ.மோகனதாஸ், சந்நிதியான் ஆச்சிரமம், செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.

## சஞ்சலங்கள் தீர்க்கும் சந்நிதி முருகன் தேர் ஏறி வருகின்றான்

இ[...]றான பக்தி உணர்வு இவர்களுக்கு எங்கேயிருந்து வந்தது. அலை அலையாக வந்து கொண்டிருக்கின்ற இவ்வளவு அடியார்களும் இங்கே ஒன்று கூட முடியுமா? என்று வியக்கின்ற விதத்தில் தொண்டைமானாறு பதி செல்வச்சந்நிதி முருகனின் தேர் உற்சவம் இன்று மிகவும் பக்தி உணர்வுடன் இடம்பெறுகிறது.

சகல விதமான வேறுபாடுகளையும் மறந்து நாம் எல்லோரும் சந்நிதியானது அடியவர்கள் என இந்தத் தேர் உற்சவத்தில் சங்கமிக்கின்ற அந்த பக்தி உணர்வு, அங்கே கூடுகின்ற அடியவர்கள் அனைவருக்கும் அமைதியையும் சாந்தியையும் ஏற்படுத்துவதாக அமைந்திருக்கும்.

அது மட்டுமன்றி கலியுகக் கந்தன் சந்நிதி முருகனும் ஏனைய மூல மூர்த்திகளும் சித்திரத் தேர்களில் தேர் ஏறி வீதி உலா வருகின்ற பொழுது அங்கே நாம் காணுகின்ற எழிற் கோலம் பால் வேறுபாடு, வயது வேறுபாடு என அனைத்தையும் மறந்து பக்தி என்ற உச்ச நிலைக்கு இட்டுச் சென்று அனைவரையும் பரவசமாக்குவதாய் அமைந்துவிடும்.

அழகும் எளிமையும் ஒன்றிணைகின்றபொழுது ஏற்படுகின்ற அந்தக்காட்சி இயல்பாக எல்லோருடைய உள்ளத்தையும் அதனுடன் லயிக்கச் செய்கின்றது. ஆம் இதே போன்று தான் சந்நிதி முருகன் தேர் ஏறி வீதி உலா வருகின்ற அந்த அழகும் எளிமையும் அங்கே கூடுகின்ற அனைத்து அடியார்களையும் ஆட்கொள்வதாக அமைந்துவிடும்.

ஜேர்மன் நாட்டில் பிறந்து தொண்டைமானாறு பதி செல்வச்சந்நிதி ஆலயத்தின் சிறப்பை அறிந்து அவ்வாலயத்திற்கு வந்து அங்கேயே தங்கியிருந்து ஆன்மீக ஈடேற்றம் பெற்றவர் ஜேர்மன் சுவாமிகள். இவர் ஆனந்த ஆச்சிரமத்திற்கு செல்லும் பாதையில் தென்னந் தோப்பின் மத்தியில் சிறு குடில் அமைத்து அங்கே கூடுகின்றவர்களுக்கு எளிமையின் எடுத்துக்காட்டாய் வாழ்ந்து வந்தவர். அவரை நாடுகின்ற அடியவர்களை ஆன்மீக ரீதியாக ஆற்றுப்படுத்தி வாழ்ந்து வந்த ஓர் அருளாளர். அது மட்டுமல்ல அவருடைய இறுதிக்காலத்தில், உறவினர்கள் வந்து அவரது நாட்டிற்கு அவரை அழைத்த நேரத்திலும் அதற்கு இசையாது சந்நிதி மண்ணிலேயே தங்கிச் சந்நிதியில் சங்கமமானார்.

இதேபோன்றுதான் கைதடியைச் சேர்ந்த வேலாயுதம் என்ற அன்பர் கிளிநொச்சி பாற்சபையில் முகாமையாளராகக் கடமையாற்றியவர், பின்பு லண்டனுக்கு புலம் பெயர்ந்து சென்று தொழில் புரிந்தார். ஆனால், சந்நிதியானின் அருளின் மகிமையை அனுபவத்தால் உணர்ந்துகொண்ட நிலையில் லண்டனிலிருந்து சந்நிதிக்கே திரும்பி வந்து தான் தேடிய செல்வங்களைச் சந்நிதியானது திருப்பணிக்கே காணிக்கையாக்கி 30.07.2006 இல் சந்நிதியிலேயே சங்கமமானார்.

ஆற்றங்கரை வேலனாய், அன்னதானக் கந்தனாய் விளங்குகின்ற சந்நிதி முருகன் தீராத துன்பங்களை, தீராத சஞ்சலங்களை எல்லாம் தீர்க்கின்ற கலியுகக் கந்தனாவான்.

ஆம்! தமிழ் மக்களாகிய எமக்கு இன்று ஏற்பட்டுள்ள இந்தக் கொடிய துன்பங்களிலிருந்து நாம் விடுபடுவதற்கு ஒரே வழி தமிழர்களாகிய நாம் ஒற்றுமையுள்ளவர்களாகவும். தர்மநெறி தவறாதவர்களாகவும் எமது வாழ்க்கையை வழிப்படுத்தி இன்று தேர் ஏறி வருகின்ற சந்நிதி முருகனின் திருப்பாதங்களை என்றும் தூய்மையுடன் துதிப்போமாக.


ந. அரியரத்தினம்.


இல.01, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2709
இல.56, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 6744
இல.108அ, லக்சன் பிளாசா கட்டடம்
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 8412

New Micro Computer Systems
Computer Education
No:30,Main Street, Chankanai, Jaffna . T.P: 0602210727

NEW TONE ELECTRICAL
கொழும்பு விலையில் தரமான மின் பாவனைப் பொருள்கள்,
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
440, 442, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2037.

அ[...]ம் இன்றும் என்றென்றும் உங்கள்
புலவர் வீடியோ
கோண்டாவில்


மக்கள் வங்கியின் சங்வத்சர வாசனா
2009 ஜூலை 01 முதல் 2009 செப்ரெம்பர் 30 வரை
ரூ.5000 பெறுமதியான ஆண்டுப் பூர்த்தி சங்வத்சர
இத்துரும் பத ஒன்றைக் கொள்வனவு செய்து...
சொகுசு வீடொன்றை அல்லது 327 தங்கப்
பவுண்களை வென்றிட அரிய வாய்ப்பு....
மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி

வருகை தரும் வைத்திய நிபுணர்கள்
★பொது மருத்துவ நிபுணர் Dr.S.கேதீஸ்வரன்
★பொது மருத்துவ நிபுணர் Dr.S.சிவன்சுதன்
★சத்திர சிகிச்சை நிபுணர் Dr.S.ரவிராஜ்
★சத்திர சிகிச்சை நிபுணர் Dr.S.ஜெயரட்ணம்
★இதயநோய் சிகிச்சை நிபுணர் Dr.P.லக்ஸ்மன்
★மகப்பேற்று பெண்ணோயியல் நிபுணர்கள்
Dr.S.பவானி
Dr..A.சிறீதரன்
Dr.S.சுரேஸ்குமார்
★கண் சத்திர சிகிச்சை நிபுணர்:
Dr.S.குகதாசன்
★தோல் நோய் வைத்தியர்:
Dr.திருமதி V.அச்சுதன்
★நவீன 'ஸ்கானிங்' வசதி
(ULTRA SOUND SCANNING)
★வெளிநோயாளர் பகுதி.
★கொழும்பு இரத்தப் பரிசோதனைகள்
★பற்சிகிச்சைப் பிரிவு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.
கஜமுகன் மெடி கெயர்
மத்திய மகா வித்தியாலய வீதி, நெல்லியடி, கரவெட்டி.T.P.: 0212264875

[...]றி வந்து அமைதி தந்திடுவாய் !
[...]வலக, அச்சகங்களுக்குத்
[...]தாதிகள் எழுது பொருள்கள்,
[...]கள், அற்லஸ்டிஸ்ரிபியூட்டர்ஸ்
[...]அப்பியாசக் கொப்பிகள்
[...]ம் நாடவேண்டிய இடம்
[...]ர் ஹவுஸ்
[...]திரி வீதி, யாழ்ப்பாணம்.

நல்ல ரக தேயிலை, அரிசி, மா, பால்மா வகை
குழந்தைகளுக்கான பால்மா வகை பலசரக்குப்
பொருள்கள் எண்ணெய் வகை, பிஸ்கெற் வகை இன்னும் பல
தரப்பட்ட பொருள்களை மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள
S.V.M
பலசரக்கு மாளிகை
ஆஸ்பத்திரி வீதி, யாழ்.நகர்.

Dealers in Stationery paper
School books & Etc
Chithamparappillai
Book Depot
Nelliyady, Karaveddy. T.P: 021 226 3223.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







சிறுப்பிட்டி மேற்கு ஜனசக்தி கிராமத்தை இலங்கை வங்கி அச்சுவேலிக் கிளையின் அபிவிருத்திக் கிராமமாக அறிமுகம் செய்யும் நிகழ்வும் விளையாட்டு விழாவும் ஜனசக்தி மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

விழாவில் கலந்து கொண்ட விருந்தினர்கள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவதையும் அபிவிருத்திக் கிராம பெயர்ப் பலகையை இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவி பொதுமுகாமையாளர் என்.சிவரட்ணம் திரைநீக்கம் செய்து வைப்பதையும் முதல் இரு படங்களிலும் காணலாம். வி.கிருஷ்ணகுமார் தலைமையுரையாற்றுவதையும், செயற்பாட்டு முகாமையாளர் ஆர்.ஜெயேந்திரா உரையாற்றுவதையும், பிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் செல்வி ஆர்.ஜமுனாவுக்கு தையல் இயந்திரத்தையும் அதற்கான உரிமைப்பத்திரத்தையும் கையளிப்பதையும் அடுத்துள்ள படங்களில் காணலாம். (படங்கள்: அச்சுவேலிச் செய்தியாளர்)

# 'சனல் 4' வீடியோ உண்மையானதா? தடயவியல் ஆய்வுக்கு உட்படுத்துக!

## மங்கள, மனோ கணேசன் கூட்டாக கோரிக்கை

கொழும்பு, செப். 3

'சனல் - 4' தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட இளைஞர்கள் சிலரை இராணுவத்தினர் கொல்வது போன்ற வீடியோ காட்சியை தடயவியல் ஆய்வுக்கு உட்படுத்தி அக்காட்சி பொய்யானது என்று நிரூபிக்கப்படும் பட்சத்தில் 'சனல் - 4' தொலைக்காட்சிக்கும் அவ் வீடியோ காட்சியை ஒளிபரப்பிய அனைத்துத் தொலைக்காட்சிகளுக்கும் எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கை அரசு வழக்குத் தொடரவேண்டும் என்று எம்.பிக்கள் மங்கள சமரவீர, மனோ கணேசன் மற்றும் புதிய சிஹல உறுமய கட்சியின் தலைவர் சரத்மனமேந்ரா ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ராஜகிரியவில் உள்ள மங்கள சமரவீரவின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர்கள் இந்த வேண்டுகோளைக் கூட்டாக விடுத்தனர். அங்கு மங்கள சமரவீர கூறியவை வருமாறு:-

நீண்ட காலமாக இலங்கை சர்வதேச நாடுகளுடன் நல்லுறவைப் பேணி வந்தது. ஆனால் தற்போது அது சீர்குலைந்து போயுள்ளது. இலங்கைக்கு எதிராக மனித உரிமைக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருவதே இதற்குக் காரணம்.

இந்த வருட ஆரம்பத்தில் இருந்து யுத்தக் குற்றச்சாட்டின் கீழ் இலங்கை அரசு சர்வதேச நீதிமன்றின் முன் விசாரிக்கப்பட வேண்டும் என்று சர்வதேச நாடுகள் கூறி வந்தன. இது முழு நாட்டையும் பாதிக்கும் விடயம் என்பதால் நாம் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தோம்.

இது சர்வதேச ரீதியில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது, நாட்டுக்குப் பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளது. இது அரசுக்கு ஏற்பட்ட அபகீர்த்தியல்ல. முழு நாட்டு மக்களுக்குமே ஏற்பட்ட அபகீர்த்தி.

இந்த வீடியோக் காட்சி பொய்யென அரசு கருதினால், அதை நிரூபிக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். இதைத் தடயவியல் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும்.

இந்த வீடியோக் காட்சி பொய்யென நிரூபிக்கப்பட்டால் சனல் - 4 தொலைக்காட்சிக்கும், அந்த வீடியோ ஒளிபரப்பிய ஏனைய தொலைக்காட்சி நிறுவனங்களுக்கும் எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் அரசு வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும் - என்றார்.

இது தொடர்பாக மனோகணேசன் எம்.பி. கூறியவை வருமாறு:

சனல் - 4 தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டுள்ள வீடியோ காட்சியால் எமது நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்பட்டுள்ளது. இது உலகம் முழுவதும் சென்றடைந்து எமக்குப் பெரும் அவமானத்தை ஏற்படுத்தியுள்ளது.

1983 இல் கூட கொழும்பு பிரதான பஸ் நிலையத்தில் தமிழர் ஒருவரைக் காடையர்கள் தாக்குவது போன்ற புகைப்படம் உலகம் முழுவதும் சென்று இவ்வாறு நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியிருந்தது.

அதேபோல் தெற்கில் சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்டமை, காத்தான்குடி பள்ளிவாசலில் இடம்பெற்ற கொலைச் சம்பவம், திருமலையில் 5 மாணவர்கள் கொல்லப்பட்ட சம்பவம் ஆகியவை தொடர்பான புகைப்படங்களும் சர்வதேசத்துக்குச் சென்று இந்த நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியது.

ஆனால், இப்போதுதான் வீடியோ காட்சி ஒன்றுவெளியாகி நாட்டை அவமானப்படுத்திக்கொண்டிருக்கின்றது. இந்த வீடியோக் காட்சி தொடர்பாக ஊடகவியலாளர்கள் மீதும், எதிர்க்கட்சி எம்.பிக்கள் மீதும் அரசு பாய்வதில் எவ்வித அர்த்தமுமில்லை.

இந்த வீடியோவின் உண்மைத்தன்மையை அறிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இது பொய்யென நிரூபிக்கப்படும் பட்சத்தில் சனல் - 4 உள்ளிட்ட அதை ஒளிபரப்பிய அனைத்து தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து அரசு நட்டஈடு பெறவேண்டும் - என்றார்.

புதிய சிஹல உறுமயவின் தலைவர் சரத் மனமேந்ரா கூறியவை வருமாறு:-

சனல் - 4 தொலைக்காட்சிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்குப் பணம் தேவைப்பட்டால் நாம் வீதியில் இறங்கி மக்களிடம் பணம் சேமித்து அதை அரசிடம் வழங்கவும் தயாராகவுள்ளோம்.

இதை அரசு செய்யத் தவறினால் மங்கள சமரவீரவின் தலைமையில் நாம் சர்வதேச நீதிமன்றில் சனல் - 4 க்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வோம் - என்றார். (சி)

# திஸநாயகத்தை உடன் விடுதலை செய்க; சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்து

கொழும்பு, செப்.3

கொழும்பு மேல் நீதிமன்றத்தால் 20 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் ஊடகவியலாளர் திஸநாயகத்தை உடன் விடுதலை செய்யுமாறு சர்வதேச மன்னிப்புச் சபை கோரியுள்ளது.

ஊடகவியலாளர் திஸநாயகத்திற்கு வழங்கப்பட்டிருக்கும் கடூழியச் சிறைத் தண்டனைய்ய ஆட்சேபித்து வெளியிட்ட கண்டன அறிக்கையிலேயே சர்வதேச மன்னிப்புச் சபை ஊடகவியலாளர் திஸநாயகத்தை இலங்கை அரசு உடன் விடுதலை செய்ய வேண்டும் என்று கோரியுள்ளது.

ஊடகவியலாளர் திஸநாயகத்திற்கு வழங்கப்பட்டிருக்கும் கடூழியச் சிறைக்கான தீர்ப்பு இலங்கையில் கருத்து வெளியிடும் சுதந்திரம் மீதான நேரடியான - அப்பட்டமான மீறல் என்றும் மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன் இத்தீர்ப்பு இலங்கையில் பத்திரிகைச் சுதந்திரம் மீதான நேரடித் தாக்குதல் என்றும் அது தெரிவித்துள்ளது.

இந்நிலையில் ஊடகவியலாளர் திஸ நாயகத்தைப் போன்று தடுத்து வைக்கப் பட்டிருக்கும் அவரின் ஊடக நண்பர்களையும் அரசு உடன் விடு தலை செய்ய வேண் டும்.

நாட்டின் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் அமுலாக்கத்திற்கு அரசு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்றும் சதரர் வதேச மன்னிப்புச் சபை கோரியுள்ளது.

திஸாநாயகத்துக்கு விடுக்கப்பட்டுள்ள இத்தண்டனையை ஆட்சேபித்து எல்லைகளற்ற செய்தியாளர்கள் அமைப்பு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

### எல்லை களற்ற செய்தியாளர்கள் அமைப்பு

20 வருட கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட ஊடகவியலாளர் திஸநாயகத்தின் மேன்முறையீட்டு நடவடிக்கைகளின்போது வழக்கின் உண்மை தன்மையும், சட்டத்தின் உணர்வும் பேணப்பட வேண்டும்.

பயங்கரவாதத்துக்கு ஆதரவளித்தார்; இன உணர்வுகளைத் தூண்டினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் ஊடகவியலாளர் ஜே.எஸ்.திஸநாயகத்திற்கு வெட்கக்கேடான - 20 வருட கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறித்து அதிர்ச்சியடைந்துள்ளோம்.

திஸநாயகம் மீது மிகக் கடுமையான இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளமை நீதிக்கும், பழிவாங்கலுக்கும் இடையில் சிலருக்கு குழப்பமுள்ளதை புலப்படுத்தியுள்ளது.

பலவந்தமாக எடுக்கப்பட்ட வாக்கு மூலங்கள் பிழையான - திரிபுபடுத்தப்பட்ட தகவல்கள் என்பனவற்றையும் நாங்கள் சுட்டிக்காட்டுகிறோம்.

மேன்முறையீட்டு நடவடிக்கைகளின் போது சட்டத்தின் உணர்வும், வழக்கின் உண்மைத் தன்மையும் பேணப்படும் என நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

சிறையில் வைக்கப்பட்டிருந்தவேளை மோசமடைந்த திஸநாயகத்தின் உடல் நிலை மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் கோருகிறோம் - என்றுள்ளது. (சி)

## நன்றி நவில்லும் மதியபோசன அழைப்பும்



அமிர்தநாதர்
(அலெக்ஸாண்டர்)
செபஸ்ரியாம்பிள்ளை
(சின்னவன்)

கடந்த (30.08.2009) ஞாயிற்றுக்கிழமை அன்று மரணமான எமது குடும்பத் தலைவரின் துயரச் செய்தி அறிந்தும் 31.08.2009 திங்கட்கிழமை அன்று நடைபெற்ற அன்னாரின் இறுதிக் கிரியையின் போதும் வருகை தந்து எமது துயரத்தில் பங்குபற்றி ஆறுதல் அளித்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (03.09.2009) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்தில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

46/46, சென்.அன்ரனிஸ் றோட்,
பாஷையூர்,
யாழ்ப்பாணம்.

செ.இராஜேஸ்வரி (மனைவி)
பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

(88459)

# சீனாவில் வர்த்தகக் கண்காட்சியை பார்வையிட ஆர்வமுள்ளோரை தொடர்பு கொள்ளக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.3

கைத்தொழில், வர்த்தகக் கண்காட்சி ஒன்று எதிர்வரும் ஒக்டோபர் மாதம் இரண்டாம் வாரத்தில் சீனாவில் நடைபெறவுள்ளது.

இந்தக் கண்காட்சியில் பல்வேறு வகையான உற்பத்தியாளர்கள், உற்பத்தி நிறுவனத்தினர் மற்றும் தொழில்முயற்சியாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

மூன்று வாரங்களுக்கு இக்கண்காட்சி தொடர்ந்து நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சி மூலம் வர்த்தக மற்றும் கைத்தொழில் துறைசார் தொடர்புகளை கைத் தொழில் சேவை அமைப்பு என்னும் நிறுவனத்தினூடாகப் பெறுவதற்கு யாழ் வர்த்தக தொழிற்றுறை மன்றம் ஒழுங்கு செய்துள்ளது.

கண்காட்சியைப் பார்வையிட ஆர்வமுள்ளோர் எதிர்வரும் 8ஆம் திகதிக்கு முன்னர் இல.175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்றத்தினருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (201)

# சுழிபுரம் சத்தியகாட்டு சந்தையில் கச்சான் இலைக்கட்டுகள் விற்பனை

சுழிபுரம், செப். 3

சுழிபுரம் சத்தியக்காட்டு சந்தையில் கச்சான் இலைக்கட்டுகள் விற்பனை செய்யப்படுகின்றன.

கால்நடைகளுக்கு உணவாக கச்சான் இலைகள் பயன்படுத்தப்படுவதனால் கால்நடை வளர்ப்போர் இதனை வாங்கிச் செல்கின்றனர்.

இதனால் கச்சான் இலைக்கட்டுக்கள் பெருமளவில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

வைக்கோல் தட்டுப்பாட்டை கச்சான் இலைக்கட்டுகள் நிவர்த்தி செய்வதாக கால்நடை வளர்ப்போர் தெரிவிக்கின்றனர். (204-28)

# ஸ்தாபகர் நினைவு தினமும் பரிசில் வழங்கலும்

சுழிபுரம், செப்.3

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய ஸ்தாபகர் நினைவு தினமும் பரிசில் வழங்கலும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் க. சந்திரசேகரன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி ச. பவானி கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் துரை எங்கரசு, சர்வோதய மாவட்ட இணைப்பாளர் ஏ.கே. சிவசுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொள்வர்.

நினைவுப் பேருரையை யாழ்.பல்கலைக்கழக உதவி விரிவுரையாளர் செல்வி ஜெயதர்சினி ஜெயராஜசிங்கம் நிகழ்த்துவார். (203-28)

# சந்நிதியான் ஆலயத்தில் வில்லிசைக் கச்சேரி

கெருடாவில், செப்.3

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய தேர்த்திருவிழாவான இன்று ஆலய முன்றலில் விசேட வில்லிசைக் கச்சேரி இடம்பெறவுள்ளது.

'கந்தன் கருணையும் சந்நிதி பூசை முறையும்' என்னும் தலைப்பில் ஜெயகோபால சுவாமிகளின் வில்லிசை இடம் பெறவுள்ளது. (203-253)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடுகின்றேன் - நான்
இன்னமும்
இன்பத்தை தேடுகின்றேன் - ஆனால்
துன்பம் தான் - எனது
வாழ்க்கையில் எப்போதும்
முட்டி மோதுகின்றது.
எவ்வளவோ
இன்னல்கள் மத்தியிலும்
தேடுகின்றேன்!
என்னைச் சூழ்ந்து
துன்பம் தொடர்ந்தாலும் - எனது
இலட்சியம்
நிறைவேறும் என்ற
நம்பிக்கை எனக்கு உண்டு.
இறைவா!...!...!...! இனியாவது
கண் திறந்து பாரும்,
எம் துன்பத்தைத்
தீர்ப்பதற்கு.

ஆக்கம்:
செல்வி ப. பிருந்தா,
யா/ அம்பன்
அ.மி.த.க.
பாடசாலை.

## யதார்த்தங்கள் சில உங்களுக்காக...

★ அமைதி என்பது மனிதனுக்கு தான் நம்பிய கொள்கையை அமுலாக்குவதன் மூலமாக மட்டுமே வரும்.

★ நேர்மையோடு யோசிப்பது வேறு. நேர்மையோடு வாழ்வது வேறு. நிறையப்பேர் மிக உயர்வாக யோசித்துக் கொண்டிருப்பார்கள்.

★ தைரியசாலிக்கு மரணம் ஒரே தடவை தான். ஆனால் கோழைகளுக்கு தினந்தினம் மரணம்.

★ மனதிற்குப் பதில் சொல்லிக் கொள்ள முடிந்தால் எப்படிப்பட்ட பிரச்சினையிருந்தாலும் கடந்து விடமுடியும்.

★ மனிதனுக்குப் பசி எடுத்தாலொழிய உணவின் ருசி தெரியாது. அப்படி கஸ்டங்களை அனுபவித்தாலேயொழிய சுகத்தில் இருக்கும் இன்பம் தெரியாது.

ச. டிலானி A/L 2011 Arts,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

## கேள்விக்கு என்ன பதில்? - 36 இல் பரிசு பெறுவோர்

முதலாம் பரிசு:- உதயகுமார் பிரதீப்
சங்குவேலி வடக்கு, மானிப்பாய்.

இரண்டாம் பரிசு:- ந.சாளினி
நாவலடி, புலோலி மத்தி, பருத்தித்துறை.

மூன்றாம் பரிசு:- சி.துளசிகரன்
லோட்டன் றோட், தம்பர் லேன்,
மானிப்பாய்.

### பாராட்டுப் பெறுவோர்

01) ஏ. கபீர்த்தன்
62, நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

02) கே. அரசேஸ்வரன்
கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

03) கிருஸ்ணசாமி கிரிசாம்பாள்
லோட்டன் வீதி, தம்பர் ஒழுங்கை, மானிப்பாய்.

04) குகதாசன் பிரகவி
230, இராமநாதன் வீதி, திருநெல்வேலி.

05) மு. ஹேமசாலினி
மடத்தடி, பலாலி வீதி, உரும்பிராய்.

06) க. தர்ஷிகன்
நீர்வேலி மத்தி, நீர்வேலி.

## கேள்விக்கு என்ன பதில்? -38

கங்காரு மிருகத்தின் குட்டி எங்கே வளர்கிறது?
(சரியான விடையை 11.09.2009 இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்).

## சிரித்து வாழவேண்டும்

நகைச்சுவை உணர்ச்சி மனிதனுக்கு இறைவன் கொடுத்த தனி வரம். அது உடலில் ஆரோக்கியமான இரசாயன மாற்றத்தை ஏற்றபடுத்துகின்றது. கசப்பு உணர்ச்சிகளான கோபம், பயம், வருத்தம், குற்ற உணர்வு முதலியன உடலில் எதிர்மாறான இரசாயன மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியவை, சிறிது நேரம் கூட விளையாட்டின்றி எப்போதும் வேலையென்று இருந்தால் அது ஒருவனை வாழ்க்கையிற் சுவாரஸ்யமில்லாதவனாக ஆக்கிவிடும்.

விளையாட்டும், நகைச்சுவையும் ஒருவரின் புத்திக் கூர்மையை அதிகரிப்பதோடு ஆரோக்கியத்தையும் கொடுக்கும்.

ஒருநாளில் ஒரு முறையேனும் வயிறு குலுங்கச் சிரித்தால் மருத்துவரிடம் போகத் தேவையில்லை என்பது முன்னோர்களின் கூற்று.

வயிறு குலுங்கச் சிரிப்பது நோயைக் குணப்படுத்த உதவுகின்றது. வயிறு குலுங்கச் சிரிப்பதால் உடல் திறந்து விரியும். இதனால் நுரையீரல் அதிகப்படியான வாயுவை உள்ளிழுக்கிறது. வயிற்று உறுப்புக்கள் நன்றாக வேலை செய்து ஜீரணிக்க உதவுகின்றது. இறுகிய தசைகள் தளர்கின்றன. இது ஒரு சிறந்த நிவாரணியாகும். மேலும் மனிதனோடு மனிதனை இணைக்கும் ஒரு காந்தக்கல் சிரிப்பு என்பதையும் உணர்ந்து கொண்டால் சிரிக்காமல் வாழ மாட்டீர்கள்.

தே.போ.கருபன்,
கச்சேரி கிழக்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

பூவாகும் மொட்டே கேள்
பணத்தினில் இன்பமில்லை
காயாகும் பூவே
பார்
அன்பினில் தோல்வியில்லை
பூவை உரசும் பூங்காற்றுக்கு
முள்கள் குத்துவதில்லை

உள்ளத்தில் அமைதி
இருந்தால் சோகமான
வாழ்விலும் சுவையிருக்கும்
சோக வெள்ளத்தில் நீ
சிக்கும்போது எதிர் நீச்சல்
போடு
வெற்றி கிடைக்கும்
உலகமே உன்னைச்
சுற்றி நிற்கும்

தோல்வி கண்டு அஞ்சும்
போது வெற்றி
பெறுவது
சுலபமா
எம் வாழ்க்கை இனித்திடுமா

பிறரைப் போலவே வாழ
நினைப்பது மடமை
இருப்பதைக் கொண்டு திருப்தி
அடைவதே
உனக்கு பெருமை
திறமையினை வெளியே எடு
ஓடி விடும் உன்
வறுமை.

சுப்பிரமணியம் ஜெயரூபன்,
பருத்தித்துறை.

## கேள்விக்கு என்ன பதில்?

-36இன் சரியான விடை
ஆபிரகாம்லிங்கன்.

## இன்னும் எத்தனை நாள்.....?

முள்கம்பி வேலி முகம் மறைக்க உள்ளிருந்து
மூச்சுமுட்டி அழும் துயரம் யாரேனும்
கேட்டீரோ...?
பறவைகள் பறக்கின்ற வானம் கூட சுதந்திரம் தான்
புவி மட்டும் மனிதர்களை இப்படி ஏன்
வதைக்கிறது?

ஓடித்திரிந்த இடமெல்லாம் தீயெரிந்து
போனதுவோ...?
ஓசையற்று அழும் மனக்குமுறல்
கேட்கலையோ...?
தேடிப் பாசம் வைத்த உறவுகளும்
எங்குளவோ..?
தேம்பும் மன அவலம் தீர்வதுவும்
எப்பொழுதோ..?

யார் யார் உயிரிழந்தார்? யார் யார்? உயிர்
பிழைத்தார்...?
உறவுகளைத் தொலைத்து மனம் ஊமையாய்
அழுகிறதே!
வேரில் விழுந்த அடி மாறும் நாள் வரைக்கும்
வேதனையில் வெம்புதலே விதி விதித்த
சதியாமோ..?

அஞ்சலி, சங்கத்தானை.

## புரிந்து கொள்

### மரணம்

மாலையில் மரணம் என்று
தெரிந்தும் கூட காலையில்
கண்ணீர் விடுவதில்லை பூக்கள்...

மதியத்தில் சொர்க்கம் என்று
தெரிந்தும் கூட நிலத்து நீர்
விலகி ஓடுவதில்லை

வாழ்க்கை என்னும் நாடகத்தின்
இறுதிக் கட்டம் மரணம் தான்.

G.டனுசன்,
கல்வியங்காடு. (D.M.V).

### நான்கு டைனோசர்களை விடப் பெரிதான கடலின் சிருஷ்டிப்பு என்ன?

அது வேறொன்றுமில்லை. சமுத்திரங்களில் வாழும் நீலநிற இராட்சதத் திமிங்கிலங்கள்தான். ஒரு வயது வந்த இந்த திமிங்கிலத்தின் நீளம் 32 மீற்றராகும் (100 அடி). இதன் எடை என்னவென்று நினைக் கின்றீர்கள்?

அது 200 தொன்னுக்கும் மேலாகும். கிட்டத்தட்ட நீலத் திமிங்கிலம் 60 யானைகளை விடப் பெரிதாகும். ஆண், பெண் என்ற வேறுபாடில்லாத ஒரே அளவான உருவ அமைப்பையும் இவை கொண்டவை.

-மூர்த்தி-

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..............................
முகவரி :-..............................
:-..............................
.................... ....................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## இந்த வாரம் வரலாற்றில்

**ஓகஸ்ட் 28**



பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்சுக்கும் இளவரசி டயானவுக்கும் இடையிலான விவாகரத்து 1996ஆம் ஆண்டு ஓகஸ்ட் 28இல் நீதிமன்றினால் உறுதிப்படுத்தப்பட்டது. இதன் மூலம் டயானா 'றோயல் ஹைனஸ்' எனப்படும் அரச மரியாதையை இழந்தார்.

**ஓகஸ்ட் 29**

1831ஆம் ஆண்டு ஓகஸ்ட் 29ஆம் திகதி 'மைக்கல் பரடே' என்ற விஞ்ஞானி முதலாவது மின் மாற்றியை லண்டன் றோயல் கலாசாலையில் வெற்றிகரமாக இயக்கிக் காட்டினார்.



**ஓகஸ்ட் 30**



'அஜர் பஜான்' என்ற நாடு 1991 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 30 ஆம் திகதி சுதந்திர நாடாகப் பிரகடனம் செய்யப்பட்டது.

**ஓகஸ்ட் 31**

இப்போது உலக மக்களிடம் பிரபல்யம் பெற்று விளங்கும் 'கொக்கோ கோலா' குளிர் பானம் 1900ஆம் ஆண்டு ஓகஸ்ட் 31ஆம் திகதி பிரிட்டனில் முதன் முதலாக விற்பனைக்கு வந்தது.




**செப்ரெம்பர் 01**



ஜப்பானின் டோக்கியோ மற்றும் யொஹோகமா ஆகிய நகரங்களில் 1924ஆம் ஆண்டு செப்ரெம்பர் முதலாம் திகதி ஏற்பட்ட பூகம்பத்தால் இரண்டு லட்சத்திற்கும் அதிகமானோர் பலியாகினர்.

**செப்ரெம்பர் 02**

தகவல் தொழில் நுட்பத்தில் பெரும் புரட்சியை உண்டு பண்ணிய இறுவட்டு (VCD) 1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் 02ஆம் திகதி பிலிப்பைன்சில் முதன் முதலாக அறிமுகப்படுத்தப் பட்டது.




**செப்ரெம்பர் 03**



முதலாவது உலக மகாயுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது 1916ஆம் ஆண்டு செப்ரெம்பர் 03ஆம் திகதி விமானம் ஒன்று உலகிலேயே முதன்முதலாகச் சுட்டு வீழ்த்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அகதிகளை இப்படியே வைத்திருந்தால் சர்வதேச அழுத்தங்கள் அதிகரிக்கும்!

## அரசுக்குப் புத்தி சொல்கிறது ஜே.வி.பி.

கொழும்பு, செப். 03

அகதிகளை உடனடியாக மீளக்குடியமர்த்தாது அவர்களைத் தொடர்ந்தும் தடுத்து வைத்திருந்தால் இலங்கை மீதான சர்வதேச அழுத்தம் அதிகரிக்கும் என்று ஜே.வி.பி. எச்சரித்துள்ளது.

பத்திரமுல்லையிலுள்ள அக்கட்சியின் தலைமைக்காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அக்கட்சியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத்தே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு,

30 வருடங்களாக இடம்பெற்ற யுத்தம் காரணமாக பல்வேறு கட்டங்களில் தமிழ் மக்கள் இடம்பெயர்ந்து உள்நாட்டில் மாத்திரமின்றி வெளிநாடுகளிலும் அகதிகளாகவுள்ளனர்.

இந்தியாவில் தற்போது சுமார் ஒரு லட்சம்பேர் அகதிகளாகவுள்ளனர். இங்கு மூன்றுலட்சம்பேர் உள்ளனர். இவர்கள் அனைவரையும் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

வவுனியா அகதிமுகாம்களில் உள்ள மூன்று லட்சம் அகதிகளுள் 80 வீதமானவர்கள் இந்த வருடத்திற்குள் மீள்குடியமர்த்தப்படுவர் என்று அரசு சொன்னது. ஆனால் 25 வீதமானவர்கள் கூட இன்னமும் மீள்குடியமர்த்தப்படவில்லை.

ஜேர்மன், ஜப்பான் போன்ற நாடுகளிலும் யுத்தம் இடம்பெற்றது. அவை தற்போது முன்னேறிவிட்டன. கம்போடியாவிலும் யுத்தம் இடம்பெற்றது. அது முன்னேறவில்லை. கம்போடியா போன்றுதான் இந்த இலங்கையும் உள்ளது.

அகதிமுகாம்களில் உள்ள மக்கள் உடனடியாக மீள்குடியமர்த்தப்படாவிட்டால் அரசு பெரும் நெருக்கடிகளை ஏதிர்கொள்ளவேண்டிவரும். சர்வதேச நாடுகளின் தலையீடு இலங்கையில் நிச்சயம் அதிகரிக்கும். முன்னர் புலிகளை அடிப் படையாக வைத்து சர்வதேசத் தலையீடுகள் அதிகரித்திருந்தன.

முகாம்களில் உள்ள மக்கள் அவர்கள் விரும்பிய இடங்களுக்குச் சென்று வர முடியும். ஆனால் இலங்கை அகதிகளால் அவ்வாறு முடியாது. இது அகதிமுகாம் அல்ல. தடுப்புமுகாம்.

இந்த அகதிகளை எம்பிக்கள் பார்க்க முடியாது. இந்த மக்களுக்கு நாம் நிவாரணப்பொருள்களைக் கொண்டு சென்றபோதுஅதை எம்மால் நேரடியாக வழங்க முடியாமல் போய்விட்டது. இராணுவத்தினர் முகாம்களுக்குச் செல்ல எம்மை அனுமதிக்க வில்லை. அதனால் நாம் அவற்றை இராணுவத்தினரிடம்தான் ஒப்படைத்து விட்டு வந்தோம் - என்றார்.

## பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், செப்.3

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் ஆயுள்வேத மூலிகைத் தோட்டம் அமைத்தல், இலைக்கஞ்சி திட்டம் ஆகியவை தொடர்பான பயிற்சிப் பட்டறை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற உள்ளது.

வகை 1 ஏபி, 1சி ஆகியவற்றைச் சேர்ந்த பாடசாலைகளின் அதிபர்கள், பயிற்சி வகுப்பில் பங்குபற்றத் தெரிவுசெய்யப்பட்ட ஜீ.சி.ஈ. உயர்தர மாணவர்கள் ஆகியோரை பயிற்சிப் பட்டறையில் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.(203-207)

## அமெரிக்கா கண்டனம்!

கொழும்பு, செப்.3

ஊடகவியலாளர் திஸநாயகத்துக்கு 20 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதை அமெரிக்கா கடுமையாகக் கண்டித்துள்ளது.

திஸநாயகத்துக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு குறித்தும் அதன் கடுமை குறித்தும் நாங்கள் ஏமாற்றமடைந்துள்ளோம் என அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் பிரதிப் பேச்சாளர் ரொபேர்ட் வூட் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஊடகசுதந்திரத்தின் நிலை குறித்து நாங்கள் தொடர்ந்தும் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம். பத்திரிகையாளர்கள் தொடர்ந்தும் அச்சுறுத்த லின்கீழ் உள்ளனர். இதன் காரணமாக சுய தணிக்கையைப் பின்பற்றுகின்றனர் என்றும் ரொபேர்ட் வூட் தெரிவித்தார்.

"திஸநாயகத்தின் விடயத்தை நாங்கள் தொடர்ந்தும் உன்னிப்பாக அவதானித்து வருகிறோம். மேன்முறையீடு குறித்தும் அவதானிப்போம்." என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சிறையில் திஸநாயகம் பாதுகாப்பாகவும் நல்ல உடல்நலத்துடனும் இருப்பதை உறுதி செய்வதற்கான அனைத்து நடவடிக் கைகளையும் மேற்கொள்ளுமாறு இலங்கை அரசை வலியுறுத்துகிறோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.


மகா கும்பாபிஷேகப் பெருவிழா

அருள்மிகு பெரியமாவடி ஸ்ரீ கந்தசுவாமி தேவஸ்தானம்

சாவகச்சேரி

முருகன் அடியார்களே!

நூற்றாண்டு கால மா விருட்சத்தை தலவிருட்சமாகக் கொண்டு எழுந்தருளி அருள்பாலிக்கும் எம்பெருமானுக்கு மகாகும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

கிரியா கால விவரங்கள்

04.09.2009 வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு
- கிரியைகள் ஆரம்பம்

05.09.2009 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு எண்ணெய்க்
- காப்புச்சாத்துதல்

06.09.2009 ஞாயிற்றுக்கிழமை காலை 6.57 - 8.35 மணி
- மகாகும்பாபிஷேகம்

அனைவரும் வாரீர், அருள்பெற்றுய்வீர்.

ஆலய தர்மகர்த்தாவும்
பெரிய மாவடி வாழ்மக்களும்.

(88371)


# நாட்டிற்காக உயிரையே தியாகம் செய்ய தயார் என்கின்றார் ஜனாதிபதி மஹிந்த

கொழும்பு, செப். 03

நாட்டிற்காக உயிரையே தியாகம் செய்ய தாம் தயாராக இருக் கிறார் - என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறார்.

'போக்ஸ்' சஞ்சிகைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களுக்காக முடிந்தளவிலான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நாட்டில் இடம்பெற்ற யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதையடுத்து தற்சமயம் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் இதற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இடமளிக்கப்படாது.

அபிவிருத்தியின்றி சமாதானம் இல்லை. நாட்டின் பொருளாதாரத்தை நாம் அபிவிருத்தி செய்ய வேண்டும். வடக்குக் கிழக்கில் வாழும் தமிழ் சமூகங்களுடன் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பி இந்த நாட்டில் நிலையான சமாதானத்தையும் அபிவிருத்தியையும் ஏற்படுத்திய தலைவர் ஒருவராக இருப்பதையே நான் விரும்புகின்றேன்.

யுத்தம் முடிந்து விட்டது. இனி நாம் இந்த நாட்டை அபிவிருத்தியின்பால் இட்டுச்செல்லும் பணிகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும். நான் முழு நாட்டுக்குமான ஜனாதிபதியாவேன்.

நான் மக்களை சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், பறங்கியர் என வேறுபடுத்திப்பார்க்க விரும்பவில்லை. நான் அவர்களை நாட்டை நேசிப்பவர்கள் என்றும் நாட்டை நேசிக்காதவர்கள் என்றுமே வேறுபடுத்திப் பார்க்கின்றேன்.

தேவையான சந்தர்ப்பங்களில் நான் தமிழிலும் பேசுகிறேன். தமிழ் மக்களது சொந்த மொழியிலேயே பேசுவதன் மூலம் அவர்களோடு மிக நெருங்கிப் பழகக்கூடிய வாய்ப்பு ஏற்படுகிறது.

மத்திய வங்கியின் அறிக்கைகளின்படி கடந்த நான்கு ஆண்டுகளில் 11 வீதமாக இருந்த பணவீக்கம் தற்போது 1.1 வீதத்திற்குக் குறைவடைந்துள்ளது.

தலா வீத வருமானம் 1200 டொலர்களில் இருந்து 2000 டொலர்கள்வரை உயர்ந்திருக்கிறது.

நாம் எமக்கேயான இலங்கை மாதிரி ஒன்றை ஏற்படுத்த வேண்டும். விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதையே நான் விரும்புகின்றேன். உணவில் நாம் தன்னிறைவு அடைய முடியுமாக இருந்தால் கைத்தொழில் துறையில் தானாகவே முன்னேற முடியும் - என்றார்.

கடைசிக்கட்ட போரின்போது மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன எனக் குறிப்பிடப்படும் குற்றச்சாட்டுக்கள் குறித்து வினவப்பட்டபோது -

நாம் ஆபிரிக்காவிலோ அல்லது ஐரோப்பாவிலோ நடந்தவற்றைப் பின்பற்றவில்லை. கடந்துபோனவற்றைத் தோண்டிக் கொண்டிருப்பது ஆரோக்கியமானதல்ல என்றே நான் நினைக்கிறேன். நாம் கடந்துபோனவற்றை மறந்து புதியதோர் வாழ்க்கையை புதிய சிந்தனைகளை ஆரம்பிக்க வேண்டும் என்று ஜனாதிபதி கூறினார்.

## 'அபின்' பயன்படுத்தும் ஆயுள்வேத வைத்தியரை பதிவு செய்யக் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.3

வடமராட்சி தெற்கு, வடக்கு, மருதங்கேணி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஆயுள்வேத வைத்தியர்களில் மருந்து தாயாரிப்பதற்கு அபினை பயன்படுத்தும் பதிவு செய்யப்பட்ட ஆயுள்வேத வைத்தியர்கள் எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்னர் ஆயுள்வேத பொதுச்சுகாதார வைத்திய அதிகாரி, வடமராட்சி தெற்கு, மேற்கு(ஆயுள்வேத மத்திய மருந்தகம், கரவெட்டி) அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (201)


CAD & BS

Computer Aided Drafting & Building Studies



ஆரம்பம்.:-23.09.2009
(காலை 10.00மணி)

கட்டடத்துறையில் உங்கள் திறனை வளர்த்துக்கொள்ளுங்கள்

கட்டடத்தொழில் நுட்பவியலாளர்கள், கட்டடத் தொழில் நுட்ப மாணவர்கள் க.பொ.த (உ/த) கற்றோர்கவனத்திற்கு!
உங்களுக்காகவே நவீன தொழில்நுட்ப யுக்திகளையும் பொருத்தமான தொழில் நுட்பங்களையும் உங்கள் துறையில் பிரயோகிக்கத் தக்க வகையில் வடிவமைக்கப்பட்ட விசேட கற்கைநெறி.
இக்கற்கை நெறி இத்துறையில் உங்கள் உயர்கல்வியை தொடரவும் அல்லது வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்ளவும் ஓர் சிறந்த அத்திவாரமாகும்.

Course Contents :
Duration :- 6Months
1.Building Technology
2.Construction Materials
3.Building Services
4.Building Drawings
5.Quantity Surveying
6.Basic Theory of Structures
7.Computer Aided Drafting

CAD & BS

CBM

Contemporary Business Management



ஆரம்பம்.:- 23.09.2009
(காலை 10.00மணி)

முகாமைத்துவத்துறையில் உங்கள் திறனை வளர்த்துக்கொள்ளுங்கள்.

இக்கற்கை நெறியானது முகாமைத்துவத் துறையில் பணிபுரிவோர் மற்றும் இத்துறையில் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு நவீன முகாமைத்துவத்தின் எண்ணக்கருக்களையும்,சமகால தகவல் தொழில்நுட்ப, தொழில்நுட்ப பிரயோகங்களையும் சிறந்த முறையில் பயன்படுத்த தக்கவகையில் வடிவமைக்கப்பட்ட கற்கை நெறியாகும். இக்கற்கை நெறி இத்துறையில் உங்கள் உயர்கல்வியை தொடரவும் வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்ளவும் ஓர் சிறந்த அடித்தளத்தினை ஏற்படுத்தி தருகின்றது.

Course Contents :
Duration :- 6Months
1.Management & Organizational Behaviour
2.Human Resource Management
3.Marketing Management
4.Financial Management
5.Business Communcation
6.ICT For Managers

CBM

IIS CITY CAMPUS

#200,Sivan Pannai Road,Jaffna
Tel:021 222 8060 Fax:021 22...
Email:iiscc@sltnet.lk Web: www.iiscitycampus.com



நீங்காத நினைவலைகள்

| 5 ஆம் ஆண்டு | | 4 ஆம் ஆண்டு | |
|---|---|---|---|
| பிறப்பு | இறப்பு | பிறப்பு | இறப்பு |
| 29 | 29 | 29 | 13 |
| 03 | 08 | 12 | 09 |
| 1938 | 2004 | 1946 | 2005 |





கதிரிப்பிள்ளை தம்பிப்பிள்ளை

தம்பிப்பிள்ளை அன்னப்பிள்ளை

பிறந்தவர் இறப்பது நியதி
எனினும் தாங்க முடியவில்லையே உங்கள் பிரிவை
உறுத்துது எமது உள்ளங்களை
உருக்குது மனதை நாள் தோறும்

அன்பான குணமும் ஆணித்தரமான வார்த்தைகளும்
பேசியே வாழ்ந்த உயர்ந்த மனிதர்கள் நீங்கள்
உற்றாரும் ஊராரும் கேட்கின்றனரே உங்களை
எப்படிச் சொல்வோம் நீங்கள் சென்ற இடத்தை

...தெற்கு,

(88421)

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசகேசரிப் பிள்ளையார் ஆலய

# ...ழாச் சிறப்புமலர் - 03.09.2009

## வேண்டுவோர்க்கு வேண்டுவன ஈயும் அரசகேசரிப் பிள்ளையார்

சகல வளங்களும் பெற்ற சிறப்பு மிகுந்த ஊர் நமது நீர்வேலிக் கிராமம் நமது ஊரின் மத்தியில் இருந்து மக்களுக்கு அருள் பாலிப்பவர் அரசகேசரி பிள்ளையார். வேண்டுவார்க்கு வேண்டுவன ஈயும் எம் பெருமான் மீது எமது ஊர் மக்கள் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்துள்ளனர்.

''பிள்ளையார் கோவிலில் நேர்த்தி வைத்தால் விரும்பிய வரம் கிட்டும்'' என்று நம்புபவர்கள் எமது ஊர் மக்கள். அப்பேர்ப்பட்ட சிறப்பும் புதுமையும் வாய்ந்த ஆலயத்தில் அறங்காவல் சபையின் தலைவராக இருக்கும் வாய்ப்புக் கிட்டியது விநாயகப் பெருமானின் அருள் என்றே கருதுகிறேன். என்னுடன் பணியாற்றும் சகல உறுப்பினரும் பூரண ஒத்துழைப்பைத் தருகின்றனர்.

எமது ஆலயத்தின் பிரதமகுரு சிவஸ்ரீ சோமதேவசர்மா தமது மகன் ஜெகன் உதவியுடன் தமது பணியை சிறப்புறச் செய்கிறார் அவருக்கு எமது நன்றிகள்.

நமது ஊர் மக்களும் ஆலயம் சிறப்பாக நடப்பதற்கு வேண்டிய நிதி உதவியை அளித்து வருகிறார்கள். அவர்களுக்கு விநாயகப் பெருமானின் அருள் வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.

அறங்காவல் சபை, அரசகேசரி பிள்ளையார் கோவில்.

## நீர்வையில் அருள் பொழியும் விநாயகர்

நீர்வளம் நிரம்பப் பெற்ற நீர்வையம் பதியில் அருள் மழை பொழிந்து மக்களை காத்து வரும் எம் அரசகேசரி விநாயகப் பெருமான் இன்று தேர் ஏறி கருணை மழை பொழியும் இவ் வேளையில் எல்லா மக்களும் துன்ப துயரங்கள் நீங்கி இவ்வுலக வாழ்வில் சகல செல்வங்களும் பெற்று மங்களகரமாக வாழ எல்லாம் வல்ல விநாயகப் பெருமானைப் பிரார்த்தித்து வேண்டுகிறேன்.

'மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'

*சிவத்தமிழ்ச் சொல்லழகர்*
ச. லலீசன்

## வண்ணத்தேர் வடம் பற்றிடுவோம் வாரீர்.....

நீர்வளமும் நில வளமும் நிரம்பி வழிகின்ற எங்கள்
நீர்வையம்பதியிலே, அரசமரச் சோலையில் வீற்றிருக்கும்
எங்கள் அரசகேசரிப்பிள்ளையார் தேரேறி வருகின்றார்.
வண்ணத் தேர் வடம் பற்றிடுவோம் வாரீர்! வாரீர்!!

தொல்வினையும் வல்வினையும் அறவே தீர்ந்து போக
அடைபட்ட மக்களும் சுதந்திரமாய் தான் வாழ
சகல செல்வ யோகமும் யாவர்க்கும் கிடைக்க வேண்டி
வண்ணத்தேர் வடம்பற்றிடுவோம் வாரீர்! வாரீர் !!

ஆனைமுகனுடன் சக்தி வடிவேலனும் கூட வருகின்றான்.
அச்சமில்லை அச்சமில்லை வேலும் மயிலும் உண்டு
நல்லன நினைத்து, நல்லன சொல்லி, நல்லன செய்திட
வண்ணத்தேர் வடம்பற்றிடுவோம் வாரீர்!வாரீர்!!

நீரூர் முருகதாசன்.

### தேரேறி வரும்காட்சிகண்டு பிரார்த்திப்போம்



*''ஓம் கணேசாய நமஹ''*

*நீர்வளமும் நிலவளமும் கொண்ட நீர்வையம் பதியில் வீற்றிருந்து அருள் பாலிக்கும் அரச கேசரிப்பிள்ளையார் தேரேறி வரும் இன்னாளில் மக்களின் துயர் துடைத்து இன்பம் பெருகி எல்லா வகை வளமும் பெற அருள் பாலிப்பாராக!*

*எல்லாம் வல்ல, தனக்கு மேல் ஒரு நாயகனுமில்லாத முழுமுதற் பொருளாம் விநாயகன், அறுவகை சமயங்களில் முதன்மையுடையதும் காணபத்தியமே அவ்விநாயகனை வழிபட்டே எக்காரியத்தையும் தொடங்குகிறோம் இவ்வாறு பெருமையும் சிறப்பும் முதன்மையும் கொண்ட விநாயகன் தேரேறி வரும் காட்சியை கண்டு பிரார்த்திப் போமாக!*

*''மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''*

த. நடராசா, செயலாளர், வலி கிழக்கு பிரதேச சபை.

## பிரார்த்தனைச் செய்தி



நீர்வேலி மண் அறிஞர்களும் குருமார்களும் தூய துறவிகளும் பிறந்த மண். நீர்மை என்றால் ஒழுக்கம் என்றும் வேலி என்றால் ஊர் என்றும் பொருள் கொள்வர். ஆக, இவ்வூர் அறநெறி வலுவா ஆன்றோர் வாழும் திருவூர் ஆகும். இவ்வூரின் மத்யஸ்தானத்தில் அரசகேசரி மாமந்திரியால் ஸ்தாபிக்கப்பட்ட அரசகேசரி விநாயகருடைய பேராலயம் அமைவு பெற்று அருளொளி பரப்புகின்றது.

இப் பெருமானை ''செம்பாட்டுப் பிள்ளையார்'' எனவும் கூறுவர். அதாவது செம்மையான பாடல்கள் உருவாகும் பவித்திரமான பூமியில் இவ்விறைவன் வீற்றருளுவது தான் இதற்கு காரணமோ? இத் தல ஈஸ்வரன் மீதான ஊஞ்சற் பாமாலை காப்புச் செய்யுளில் ''பாராரு முடி அரசகேசரிப் பேர்ப் பாவலனுக்கருள் புரிந்த புனித மூர்த்தி'' என அரசகேசரி பாவலனுக்கும் இவ் ஆலயத்திற்குமிடையான தொடர்பு விளக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு பழமையும் பெருமையும் மிக்க நீர்வை அரசகேசரியான் இன்று இரதபவனி காண்கிறார். இவ்வாலய இரதமும் அழகுறு வேலைப்பாடுகள் நிறைந்தது. யாழ்ப்பாணத்தின் புகழ் பூத்த திருத்தேர்களுள் ஒன்றாக ஆய்வாளர்களால் கணிக்கப்படுவது. தேரில் அமைந்துள்ள இரு குதிரைகளின் எழிலும் துடிப்பும் உயிரோட்டமும் கண்டனுபவிக்க வேண்டியவை. இத்தகு அழகுறு ரதத்தில் ஐம்முகமும் பத்துக்கரமும் கொண்ட பஞ்சமுக விநாயகர் முருகப்பெருமான் சகிதம் எழுந்தருளி இன்று எல்லா துக்கங்களையும் அழித்து இன்பம் பெருக அருள்கிறார். யாவரும் பெருமானை சேவித்து சர்வ மங்கலமுடன் வாழ பிரார்த்திக்கின்றோம்.

சிவஸ்ரீ. கு. தியாகராஜக்குருக்கள்
(நீர்வை மணி)

...ஜானன்
...க்கும் ஆலை
...தி, நீர்வேலி வடக்கு.
...ளர்: S. நாகரத்தினம்.

அபிராமி மருந்தகம்
பருத்தித்துறை வீதி,
நீர்வேலி கந்தசுவாமி கோவிலடி.

சேகர் & தரன்
குளிர்களி அகம்
ஆலய வீதி, நீர்வேலி.

ஆனந்தன் சுவையகம்
& பல்பொருள் வாணிபம்
அரசகேசரிப் பிள்ளையார்
கோயில் வீதி, நீர்வேலி.

அருள் முருகன்
பந்தல் சேவை
நீர்வேலி தெற்கு.
உரிமையாளர்: தம்பா

...பிரதாப்
...ன்ஸ் போட் சேவிஸ்
நீர்வேலி வடக்கு.
...ரிமையாளர்: க. ஜெயானந்தன்.

சுபவேணுஜா
மோட்டார் சைக்கிள்
திருத்தகமும்
சேவிஸ் ஸ்ரேசனும்
நீர்வேலி குறுக்கு வீதி, நீர்வேலி வடக்கு.
உரிமையாளர்: செ.செல்வாகரன்.

முருகா
ரான்ஸ்போட்
கரந்தன் றோட்,
நீர்வேலி மேற்கு.

லம்போதரன்
ரான்ஸ்போட் சேவிஸ்
கரந்தன்,
நீர்வேலி.


...ஸ் அன் கம்பனியின்
...ற்றரி வகைகள், ❄போட்டோக் கொப்பி இயந்திரங்கள்
...வகைகள் என்பவற்றையும்
...சக்கர உழவு இயந்திரங்களையும் மொத்தமாகவும்
...கொள்ளலாம். மேலும் CIC தயாரிப்புக்களான
...நாசினி வகைகள் ❄ தண்ணீர்த்தாங்கிகள்
...ள் ❄ பெயின்ற் வகைகள் என்பவற்றையும்
...ம்பனிகளின் கிருமிநாசினி வகைகள், உரவகைகள், கால்நடை
...பாவனைக்குத் தேவையான மளிகைப் பொருள்களையும்
...ரையின் கீழ் நியாயவிலையில் பெற்றிட தலைசிறந்த நிறுவனம்

...களஞ்சியம்
..., நீர்வேலி வடக்கு, நீர்வேலி.




ஸ்ரீமகாவிஷ்ணு
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'டாடா' (TATA) நிறுவனத்தின் ஏக விநியோகஸ்தர்களான 'டிமோ' (Dimo) நிறுவனத்தின் காட்சியறை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ். ஸ்ரான்லி வீதியில் திறந்து வைக்கப்பட்டது. விருந்தினர்கள் மங்கள வாத்தியம் முழங்க அழைத்து வரப்படுவதையும், 'டிமோ' நிறுவனத்தின் உப தலைவர் கே.பண்டிதகே நாடாவை வெட்டிக் காட்சியறையைத் திறந்து வைப்பதையும் படங்களில் காணலாம்.

## அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிய நபருக்கு 40 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம், செப்.3

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்ற உழவு இயந்திரத்தின் சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 40 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு நீதிமன்றில் எடுக்கப்பட்டது.

வழக்கினை விசாரித்த நீதிவான் வாகனச் சாரதிக்கு 40 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் 20 மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார்.

அத்துடன் மணலைப் பறிமுதல் செய்து நீதிமன்றில் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டார்.

(203-207)

## சமய சந்நிதிகளில்

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்றுவரும் பெருந்திருவிழாவில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் பிற்பகல் 2 மணிக்குத் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன. (06)

* * *

வடலியடைப்பு, புதறானை சித்தி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா இன்று வியாழகிழமை முற்பகல் 11 மணிக்கும், தீர்த்தத்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கும் இடம்பெறும். (204-112)

* * *

வடகோவைபூரீசக்ராழ்வார்ஆலயவருடாந்த பெருந்திருவிழா நேற்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை தேர்த்திருவிழாவும் மாலை உறியடி நிகழ்வும் இடம்பெறும். மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழா இடம்பெறும்

திருவிழாக் காலங்களில் பகல் வேளைகளில் தினமும் அன்னதானம் வழங்கப்படும். (203-72)

* * *

ஆனைக்கோட்டை வரத விக்ன விநாயகர் சம்மந்தப் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கும் தீர்த்தத்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கும் இடம்பெறும். (204-100)

* * *

நவாலி, அந்திரான் முருகமூர்த்தி ஆலய வருடாந்த பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கும், தீர்த்தத்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கும் இடம்பெறும். (204-100)

* * *

ஏழாலை தெற்கு, களபாவோடை வசந்த நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் பால் அபிஷேகவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றையதினம் விசேடபூசை இடம்பெற்று சுவாமி திருவீதியுலா வருதலும் இடம்பெறும். (204)

* * *

யாழ்ப்பாணம்,செப்.3

வட்டுக்கோட்டை, துணவி ஞானவைரவ சுவாமி ஆலயத்தின் கும்பாபிஷேக தின சங்காபிஷேக நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றையதினம் வசந்த மண்டபப்பூசை நடைபெற்று அதனைத் தொடர்ந்து சுவாமி திருவீதியுலா வருதலும் இடம்பெறும். (204)

## சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை புதிய கட்டடத்தில் இன்று காலடி வைக்கிறது

தென்மராட்சிப் பிரதேசத்தில் ஆரம்பக் கல்வி பரீட்சைகளில் குறிப்பாக ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைகளில் சாதனைகள் பல படைத்த சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை 20 வருடங்களின் பின்னர் தனக்கென புதிய கட்டடத்தினை அமைத்து இன்று (03.09.2009) வியாழக்கிழமை பிரவேசிக்கின்றது.

புதிய கட்டடப் பிரவேசமானது இப் பாடசாலை மாணவர்களின் சாதனைகளுக்குக் கிடைத்த அரும்பெரும் சொத்தாகக் கருத முடிகிறது.

1904ஆம் ஆண்டு அமரர் வி.தாமோதரம் பிள்ளையால் சைவத் தமிழ்ப் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டு 1962ஆம் ஆண்டு அரசாங்கப் பாடசாலையாகப் பொறுப்பேற்கப்பட்டது.

காலப்போக்கில் சாவகச்சேரி இந்து மத்திய மகா வித்தியாலயமாகவும் பின்னர் சாவகச்சேரி இந்துக் கல்லூரியாகவும் தரம் உயர்த்தப்பட்டு 1989ஆம் ஆண்டு வரை தரம் 1 தொடக்கம் தரம் 13வரை வகுப்புக்களை கொண்டு இயங்கியது.

கடந்த 21.08.1989 இல் தரம் ஒன்று தொடக்கம் தரம் 5 வரை இந்து ஆரம்பப் பாடசாலையாகவும் தரம் 6 தொடக்கம் தரம் 13 வரை இந்துக் கல்லூரியாகவும் பிரிக்கப்பட்டு தனித்தனி நிர்வாக அலகுகளிடம் கையளிக்கப்பட்டன.

நிர்வாக அலகுகள் பிரிக்கப்பட்ட போதிலும் இந்து ஆரம்பப் பாடசாலைக்கென கட்டட வசதிகள் இல்லாததால் இந்துக் கல்லூரியின் ஒரு பகுதிக் கட்டடத்தில் கடந்த 20 வருடங்களாக இயங்கி வந்தது.

தென்மராட்சிப் பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள அதிக மாணவர்கள் இப் பாடசாலையில் இணைந்து கொள்வதால் பாடசாலையின் கற்றல் செயற்பாடுகளில் இடம்பற்றாக்குறை, வளப் பற்றாக்குறை என்பன அதிக அளவில் காணப்பட்டன.

இந்த நிலையை உணர்ந்த சாவகச்சேரி இந்துவின் பழைய மாணவர்கள் பழைய மாணவர் சங்க லண்டன் கிளையினர், ஆசிரியர் சங்கம் ஆகியவை இணைந்து சாவகச்சேரி தாமோதரம்பிள்ளை வீதியில் தற்போது புதிய கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ள சாவகச்சேரி சப்பச்சி மாவடி பிள்ளையார் ஆலயத்திற்குச் சொந்தமான 40 பரப்புக் காணியை சலுகை விலையில் கொள்வனவு செய்ய நிதி வழங்கினர். 19.02.2004 ஆம் திகதி காணி கொள்வனவு செய்யப்பட்டது.

அரச சார்பற்ற நிறுவனமான அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான சுவிஸ் முகவர் அமைப்பினர் தமது செலவில் இப் பாடசாலைக்கு ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்குரிய வகையில் நவீன வசதிகளுடன் கூடிய கட்டடம் அமைக்க முன்வந்தனர்.

தென்மராட்சி கல்வி வலயத்தினரின் பெருமுயற்சியினால் கடந்த 16.03.2006ஆம் திகதி அப்போதைய அதிபர் வ.கயிலேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கட்டடத்திற்காக அத்திபாரக்கல் நாட்டப்பட்டது.

அதன்பின்னர் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக சிறிது காலம் வேலைகள் தடைப்பட்டன.

### தென்னவன்

கடந்த 01.11.2008ஆம் திகதி பொறுப்பேற்று யாழ்.மண்ணில் புகழ்பூத்த ரூளின்ஸ் கட்டட ஒப்பந்தகாரர்கள் இக் கட்டடத்தினை அழகுற அமைத்துள்ளனர்.


யாழ்.மாவட்டத்தில் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கென சகல வசதிகளுடனும் கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

இன்று (03.09.2009) புதிய கட்டத்தில் கால்டி எடுத்து வைக்கும் சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை வருங்காலத்தில் மாணவர்கள் மூலம் மென்மேலும் சாதனைகள் படைத்து தென்மராட்சிக்குப் பெருமை சேர்க்கும் என்பதில் ஐயமில்லை. *

## அபலைகள் அல்ல

பெண்களின் முக்கியத்துவத்தைப் பற்றி பாரதநாட்டினர் இன்றாவது புரிந்துகொள்ள வேண்டும். பெண்கள் அபலைகள், பலமற்றவர்கள் அல்ல என்பதை அறிந்து கொள்ள வேண்டும். எத்தகைய செயலானாலும் வீட்டில் முன்னேற்றம் ஏற்பட, நல்ல பெயர் எடுக்க, வெற்றிபெற, கௌரவம் பெறுவதற்கு பெண்களே முக்கிய காரணம். இது மட்டுமல்ல வீட்டைக்காக்க, நாடு நற்பெயர் பெற, உலகம் நற்பெயர் பெற பெண்களைக் கௌரவித்து, அவர்களுக்கு உயர்ந்த மதிப்பு அளித்தல் வேண்டும். பெண்களைக் கௌரவிக்கும் புனிதமான பழக்கம் பழங்காலம் முதல் இருந்து வந்தது. மங்கல இல்லத்தின் தலைவியாக அவள் கிரஹலக்ஷ்மி எனப்படுகிறாள். பிறர் கவலையையும், துன்பத்தையும் போக்குவதற்கு பெண் அனைத்தையும் தியாகம் செய்கிறாள்.

பெண்ணுக்கு ஏழு விதமான ஆற்றல்கள் உண்டு. சத்தியம், பிரேமை, தர்மம், தியாகம், சகனம், ஸ்வானுபூதி, ஆனந்தம், அனைத்தையும் கொண்டவளே பெண். இல்லத்துக்கோ, தனக்கோ, தமது குழந்தைகளுக்கோ, அமைதி, வழமை, முன்னேற்றம், நலம், கௌரவம், கீர்த்தி இவை அடையப் பெறுவதற்கு பெண்ணே மூல காரணம். ஆகவே, 'வீட்டைக் கவனி அதற்குப் பின்னணியில் இருக்கும் பெண்மணியைக் கவனி' என்று கூறுவதுண்டு. பெண்ணுக்கு கௌரவம் தரும் தங்குமிடமாகவும், கோவிலாகவும் இருப்பது அவளது வீடாகும். ஆகவேதான் அவள் கிரஹலக்ஷ்மி என்று அழைக்கப்படுகிறாள்.



சமயச் சிந்தனை


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

Happy Birthday Happy Birthday Happy Birthday Happy Birthday

நீர் கொழும்பில் வசிக்கும்
வில்சன் - சுதர்சினி தம்பதியரின்
செல்வப் புதல்வன் ரிஷிகாந்
தனது முதலாவது பிறந்த நாளை
இன்று (03.09.2009)
வியாழக்கிழமை தனது இல்லத்தில்
வெகு விமரிசையாகக்
கொண்டாடுகின்றார். இவரைத் தாத்தா
கணபதிப்பிள்ளை, அம்மம்மா
மேரிசறோசா, மாமன்மார்
ஜெகதீபன் (U.K) நவதீபன்
(கொழும்பு), ஜனாதீபன், சித்தி
துஷ்யந்தினி ஆகியோர்
வேளாங்கன்னியின் அருள் பெற்று
பல்லாண்டு காலம் வாழ
வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
சோ.கணபதிப்பிள்ளை
17, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

(88478)




சாமியே சரணம் ஐயப்பா

## மூன்றாவது பிறந்தநாள் வாழ்த்து

காரைநகர், சத்திரந்தையைச் சேர்ந்த
மயூரன் - சுபதினி தம்பதியரின் அன்பு
மகள் (செல்லக்குட்டி) பானுசா தனது
மூன்றாவது பிறந்தநாளை இன்று
(03.09.2009) வியாழக்கிழமை
யாழ்.நீராவியடியில் உள்ள தனது
இல்லத்தில் கொண்டாடுகின்றார்.
பானுசாவை அன்பு அப்பா, அம்மா,
அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா,
அம்மம்மா, சித்தப்பா, சித்திமார், மாமா,
அத்தை, உற்றார், உறவினர் யாவரும்
ஈழத்துச் சிதம்பரத்தில்
குடிகொண்டிருக்கும் எண்ணியதை
திண்ணமுறச் செய்திடும் என்றும் உள்ள
பரம்பொருள் இனியவன்
பார்த்தசாரதியின் மைந்தன் தர்மசாஸ்தா
அருள்பெற்று பல நலன்களும் அமைய
பல்லாண்டு காலம் வாழ்கவென
வாழ்த்துகின்றார்கள்.

7/8, முதலாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(88477)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்திரமான நிலையில் இந்தியப் பொருளாதாரம் வறட்சியை எளிதாகச் சமாளித்து விடலாம்

## பிரதமர் மன்மோகன் சிங் நம்பிக்கை



டில்லி, செப். 03

இந்தியப் பொருளாதாரம் மோசமான நிலையில் இல்லை. 5 கோடி தொன் உணவு தானியம் கையிருப்பில் உள்ளது. எனவே வறட்சியைச் சமாளித்து விட முடியும் - என்று பிரதமர் மன்மோகன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் பொருளாதார நிலைமையை ஆய்வு செய்வதற்காக, பிரதமரும், திட்டக் கமிஷன் தலைவருமான மன்மோகன் கமிஷன் கூட்டத்தைக் கூட்டினார். அக்கூட்டத்தில் மன்மோகன்சிங் பேசியபோதே இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

நாட்டின் பொருளாதாரத்தை ஆய்வு செய்வது முக்கியமானது. ஏனென்றால் நாம் இரண்டாவது தடவையாக ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததற்காக மட்டுமல்ல, நாம் 11 ஆவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் மத்திய பகுதியில் இருக்கிறோம்.

சர்வதேச பொருளாதார மந்தநிலை, இந்திய பொருளாதாரத்தையும் பாதித்தது. எனவே, நாம் சிக்கலான ஆண்டைக் கடந்து வந்துள்ளோம் தற்போது சர்வதேச பொருளாதார மந்தநிலை முடிவுக்கு வரப்போகிறது. இனிவரும் மாதங்களில் இயல்புநிலை திரும்பும். எனவே,இந்தியப் பொருளாதாரம் மோசமான நிலையில் இல்லை.

பொருளாதார வளர்ச்சிக்கு எரிசக்தி முக்கியமானது. ஆனால் நாம் இந்த விடயத்தில் பற்றாக்குறை நிலையில்தான் இருக்கிறோம். ஏனென்றால், நமது பெற்றோலியப் பொருள் தேவையில் 70 சதவீதத்தை இறக்குமதி செய்தே வருகிறோம். நிலக்கரி விடயத்திலும் பற்றாக்குறையை நோக்கிச்சென்று கொண்டிருக்கிறோம். புதிய எரிசக்திக் கொள்கையை உருவாக்க வேண்டும். பருவநிலை மாற்றத்தை சமாளிப்பதற்கும் இது அவசியம்.

நாட்டில் பருவமழை சரிவரப் பெய்யவில்லை. இதனால் ஏற்பட்ட வறட்சியைச் சமாளிக்கும் நடவடிக்கைகளில் மத்திய அரசு தற்போது ஈடுபட்டுள்ளது.

வரட்சியைச் சமாளிக்கும் அளவுக்கு நாம் வலிமையான நிலையில் இருக்கிறோம். நமது உணவு தானிய உற்பத்தி அதிகமாக உள்ளது. எனவே, யாரும் அவநம்பிக்கை கொள்ள வேண்டாம். நம்மிடம் 5 கோடி தொன் உணவு தானியம் கையிருப்பில் உள்ளது. இதைக்கொண்டு பொது விநியோகத் திட்டம் மூலமாக 13 மாதங்களுக்கு விநியோகம் செய்யலாம். எனவே, வறட்சியை எளிதாகச் சமாளித்து விட முடியும் - என்றார்.




## இமாச்சலப் பிரதேசத்தில் பஸ் விபத்து 24 பேர் உயிரிழப்பு; 9 பேர் படுகாயம்

மண்டி, செப். 03

இமாசலப் பிரதேசத்தின் மலைப் பகுதியில் சென்றுக் கொண்டிருந்த பஸ் ஒன்று பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 24 பேர் உயிரிழந்தனர். 9 க்கும் அதிகமானோர் காயமடைந்தனர். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது.

பிலாஸ்பூரிலிருந்து சுந்தர் நகரை நோக்கி சென்ற இந்தப் பஸ்ஸில் 35 முதல் 40 பயணிகள் பயணித்திருப்பார்கள் என பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

விபத்து நடந்த பகுதியில் இருந்து 24 சடலங்களும் மீட்கப்பட்டு விட்டன. காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.



ஓணம் பண்டிகை நேற்றுக் கொண்டாடப்பட்டது. இதை வரவேற்கும் விதமாக திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரியில் படிக்கும் கேரள மாநிலத்தை சேர்ந்த மாணவிகள் பாரம்பரிய உடையணிந்து நேற்றுமுன்தினம் பூக் கோலம் வரைந்தபோது...

# நாடாளுமன்றப் பொதுக் கணக்குக் கமிட்டித் தலைவர் பதவியை ராஜினாமாச் செய்யும் பேச்சுக்கே இடமில்லை

## ஜஸ்வந்த் சிங் திட்டவட்டம்

புதுடில்லி, செப். 3

நாடாளுமன்ற பொதுக் கணக்குக் கமிட்டித் தலைவர் பதவியை ராஜினாமாச் செய்யும் பேச்சுக்கே இடமில்லை - என்று பாரதிய ஜனதா கட்சியிலிருந்து சமீபத்தில் நீக்கப்பட்ட ஜஸ்வந்த்சிங் தெரிவித்தார்.

நாடாளுமன்றப் பொதுக் கணக்குக் கமிட்டியில், எதிர்க்கட்சி என்ற முறையில் ஜஸ்வந்த் சிங், ஜஷ்வந்த் சின்கா, கோபிநாத் முண்டே ஆகியோரை உறுப்பினர்களாக நியமிக்க பா.ஜ.க. சிபாரிசு செய்தது. இதில் பொதுக் கணக்குக் கமிட்டித் தலைவராக ஜஸ்வந்த் சிங் நியமிக்கப்பட்டார்.

பாகிஸ்தான் பிரிவினைக்கு ஜின்னா காரணமில்லை என்று கூறி அவரைப் புகழ்ந்து புத்தகம் எழுதியதற்காக பா.ஜ.க விலிருந்து சமீபத்தில் ஜஸ்வந்த் சிங் நீக்கப்பட்டார்.

இதன்பின், பா.ஜ.க தலைமையைத் தாக்கி ஜஸ்வந்த் சிங் தினமும் பேட்டி யளித்து வருகிறார்.இதனால்,தேசிய அரசியலில் தினமும் பரபரப்பு ஏற்பட்டு வருகிறது.

இந்தச் சூழ்நிலையில், டில்லியில் ஜஸ்வந்த் சிங்கை திங்களன்று பா.ஜ.க. மூத்த தலைவர்களில் ஒருவரான சுஷ்மா சுவராஜ் சந்தித்துப் பேசினார்.



பொதுக் கணக்குக் கமிட்டித் தலைவர் பதவியை ராஜினாமாச் செய்யுமாறு அப்போது ஜஸ்வந்த் சிங்கை அவர் கேட்டு கொண்டார்.

இதற்கிடையில், தான் எழுதிய புத்தகத்துக்கு குஜராத் அரசு விதித்துள்ள தடையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் ஜஸ்வந்த் சிங் வழக்கு தொடர்ந்துள்ளார். இதன் மீதான விசாரணை நேற்றுமுன்தினம் நடந்தது. இதற்காக உச்ச நீதிமன்றத்துக்கு நேற்றுமுன்தினம் வந்திருந்த ஜஸ்வந்த் சிங் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு -

பொதுக் கணக்குக் கமிட்டித் தலைவர் பதவியை ராஜினாமாச் செய்யமாட்டேன். என்னை ராஜினாமாச் செய்யும்படி கேட்கும் உரிமை மக்களவை சபாநாயகருக்கு மட்டுமே உள்ளது. வேறு யாருக்கும் இல்லை. பா.ஜ.கவில் மீண்டும் சேர மாட்டேன். அது மட்டுமின்றி சமாஜ்வாடி உட்பட வேறு கட்சியிலும்சேரும் எண்ணமும் இல்லை - என்றார்.

# கட்சியின் முடிவைப் பின்பற்றி நடக்குக வசுந்தராவுக்கு வெங்கையா அறிவுரை

டில்லி, செப். 03

ராஜஸ்தான் சட்டப்பேரவையின் எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்பிலிருந்து விலகுமாறு கட்சி பிறப்பித்த கட்டளையை பின்பற்றுங்கள் - என்று ராஜஸ்தான் முன்னாள் முதல்வர் வசுந்தரா ராஜேவுக்கு கட்சியின் மூத்த தலைவர் வெங்கையா நாயுடு அறிவுரை கூறியுள்ளார்.

டில்லியில் நேற்றுமுன்தினம் அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு

மக்களவை மற்றும் சட்டப்பேரவை தேர்தலில் தோல்விக்கு பொறுப்பேற்று வசுந்தராவை ராஜினாமாச் செய்யுமாறு கட்சித் தலைவர் ராஜ்நாத் சிங் தன்னிச்சையாக முடிவு எடுத்து அறிவித்தார் எனவும், அதனால்தான் அவர் ராஜினாமா செய்ய மறுத்து வருகிறார் எனவும் சில பத்திரிகைகளிலும், இலத்திரனியல்ஊடகங்களிலும் வெளியான செய்தி தவறானது.

இது கட்சி எடுத்த முடிவு. அவரது ராஜிநாமாவுக்காக கட்சி காத்திருக்கிறது. இதில் மாற்றமில்லை. ராஜினாமாவுக்குப் பிறகு அவர் பரிந்துரை செய்பவரை சட்டப்பேரவை எதிர்க் கட்சித் தலைவர் பதவிக்கு நியமனம் செய்வது உள்ளிட்ட அவரது சில நிபந்தனைகள் பரிசீலிக்கப்படும்.



அவருக்குத் தற்போது உடல்நிலை சரியில்லை என்று தகவல் வந்துள்ளது. அதனால்தான் திட்டமிட்டிருந்தபடி அவர் என்னைச் சந்திக்க வரவில்லை. அவருக்கு பதிலாக அவரது மகனும் எம்.பியுமான துஷ்யந்த் என்னைச் சந்தித்தார். தனது தாய்க்கு உடல்நிலை சரியில்லை என்ற காரணத்தை அவர் அப்போது தெரிவித் தார். எனவே, வசுந்தரா உடல்நிலை தேறிவந்த பின்னர் என்னைச் சந்திக்கலாம். அதுவரை நாங்கள் காத்திருக்கிறோம் - என்றார்.

# சென்னைப் பொலிஸார் அதிரடி வேட்டை; கடத்த முயன்ற 9 சுவாமி சிலைகள் மீட்பு!

## 3 பேர் கைது

சென்னை, செப். 03

சென்னையில் இருந்து வெளிநாட்டுக்கு கடத்த முயன்ற 9 சுவாமி சிலைகளைப் பொலிஸார் மீட்டனர். இதுதொடர்பாக 3 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து தமிழக சிலை திருட்டுத் தடுப்புப் பொலிஸ் ஐ.ஜி. ராஜேந்திரன் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியவை வருமாறு -

தமிழக கோயில்களில் புராதனமான சுவாமி சிலைகள் திருட்டு போவதைத் தடுக்க கூடுதல் டி.ஜி.பி. திலகவதி உத்தரவின் பேரில், பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே திருட்டுப்போன சிலைகளை மீட்பதற்கும் நடவடிக்கை எடுத்து வருகிறோம். சிலை திருட்டுக் கும்பல் ஒன்று சென்னை சென்ரல் ரயில் நிலையம் அருகே நடமாடுகிறது என இரகசியத் தகவல் கிடைத்தது.

அந்தக் கும்பலைக் கண்காணித்துப் பிடிக்க தனிப்படை அமைக்கப்பட்டது. தனிப்படைப் பொலிஸார் மாறுவேடத்தில் தீவிரமாக கண்காணித்தபோது வேகமாக ஸ்கார்பியோ கார் ஒன்று வந்தது. அந்த காரை மடக்கி பிடித்து தனிப்படைப் பொலிஸார் சோதனை செய்தனர். சோதனையின்போது, காரில் ஒரு கோடி ரூபா மதிப்புள்ள திருட்டுச் சிலைகள் இருந்தன. சிலைகளை 4 சாக்கு மூடைகளில் கட்டி வைத்திருந்தனர்.

மொத்தம் 9 ஐம்பொன் சிலைகள் சாக்குமூடையில் இருந்து மீட்கப்பட்டன. சிலைகளைக் கடத்தி வந்த கர்நாடக மாநிலம் மைசூரை சேர்ந்த ஷியாம், நாமக்கலை சேர்ந்த முருகேசன், ராசிபுரத்தை சேர்ந்த சுகுமாறன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

இந்த ஆண்டு இதுவரை 25 சிலைகள் மீட்கப்பட்டுள்ளன. தற்போது பிடிபட்டுள்ள சிலைகளை வெளிநாடுகளுக்கு கடத்தி சென்று விற்க கடத்தல்காரர்கள் திட்டமிட்டுள்ளனர் - என்றார்.

## ஈழத் தமிழருக்காகக் கூட்டம் நடத்த அனுமதி கோரி

# பெரியார் திராவிடர் கழகம் வழக்கு; அரசுக்கு உயர்நீதிமன்று நோட்டீஸ்

சென்னை, செப். 03

இலங்கைத் தமிழர்களுக்காக, தமிழீழ விடுதலை மற்றும் விடுதலைப் புலி என்ற தலைப்பில் கூட்டம் நடத்த அனுமதி வழங்கக் கோரி பெரியார் திராவிடர் கழகம் சென்னை உயர்நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கில் அரசை பதிலளிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சேலம் மாவட்டம் மேட்டூர் அணை பெரியார் திராவிடர் கழகத் தலைவர் ஏ.அண்ணாதுரை சென்னை உயர்நீதிமன்றில் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார். அதில் -

பெரியார் திராவிடர் கழகம் இலங்கைத் தமிழர்களின் நலனுக்காக அமைதியான முறையில் போராட்டங்களை நடத்தி வருகிறது. இலங்கையில் உள்ள அப்பாவித் தமிழர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, அவர்களின் உரிமை மற்றும் நலனுக்காக மேட்டூர் அணையில் பொதுக் கூட்டம் நடத்த அனுமதி கேட்டோம்.

தடை செய்யப்பட்ட அமைப்புகளுக்கு ஆதரவுக் கூட்டம் நடத்தக்கூடாது என்றும், சுவர் விளம்பரம் செய்யக்கூடாது என்றும், ஏற்கனவே தலைமைச் செயலாளர் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். இந்த அறிவிப்பைக் காட்டி எங்களுக்குக்கூட்டம் நடத்த அனுமதி மறுக்கப்பட்டது. நாங்கள் இலங்கைத் தமிழர்களுக்காகவே கூட்டம் நடத்துகிறோம். எனவே, நாளை 4 ஆம் திகதி இந்தக் கூட்டத்தை நடத்த அனுமதிக்க வேண்டும். தமிழீழவிடுதலை மற்றும் விடுதலைப்புலி என்ற தலைப்பில் கூட்டம் நடத்த அனுமதிக்கவேண்டும் - என்று தெரிவித்திருந்தார்.

இந்த மனுவை நீதிபதி பி.ஜோதிமணி விசாரித்தார். இதுபற்றி அரசு பதில் தரும்படி நீதிபதி உத்தரவிட்டார்.

இந்த வழக்கு மீண்டும் வரும் 8 ஆம் திகதி விசாரணைக்கு வருகிறது.

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

## தேவை

யாழ். K.K.S. வீதியில் அமைந்துள்ள உணவகத்திற்கு ரொட்டி மேக்கர் தேவை.

T.P. 0774245943, 0774493615

# வடமாகாணத்துக்கு உள்ளூராட்சி விருது

யாழ்ப்பாணம், செப். 3

உள்ளூராட்சி அமைச்சினால் கடந்த வருடம் நாடளாவிய ரீதியில் உள்ளூராட்சி சபைகளிடையே நடத்தப்பட்ட உள்ளூராட்சி மறுசீரமைப்பு செயற்பாடுகளை திறம்பட மேற்கொண்டமைக்கான விருது வடக்கு மாகாணத்திற்கு கிடைத்துள்ளது.

அத்துடன் உள்ளூராட்சி மறுசீரமைப்பு செயற்பாடுகளை சிறந்த முறையில் செயற்படுத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கும் சிறப்பு விருது வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் இவ் விருதுகள் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோனினால் வழங்கப்பட்டது.

(203-207)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

1118 நீலம்

வெற்றி இலக்கங்கள்

சிங்கம் 40 41 42 46

01-09-2009

ஜக்பொட் பரிசு ரூபா. 2,962,500/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 220,259 | 20/- | 4,405,180/- |
| 2 இலக்கங்கள் | 20,291 | 40/- | 811,640/- |
| 1 இல. + லக்கினம் | 20,096 | 60/- | 1,205,760/- |
| 2 இல. + லக்கினம் | 1,796 | 200/- | 359,200/- |
| 3 இலக்கங்கள் | 536 | 1000/- | 536,000/- |
| 3 இல. + லக்கினம் | 57 | 10,000/- | 570,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,962,500/- | - |
| மொத்தம் | | | 8,487,780/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 263,043 | | 8,987,780/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 3,946,450/-

ஆலிந்தயே வாசனாவ

தங்கக்காசு வெற்றியாளர் : ட.ஜீ.எஸ்.ரீ.தனபால கென்கல்ல

கைத்தொலைபேசி வெற்றியாளர்: டபிள்யூ.ஏ.சந்திரசேன அக்குரஸ்ஸ

2009 செப்டம்பர் 04 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடி வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| கம்பஹா | 400476398-7-33 |
| கொழும்பு | 400473270-1-22 |
| கொழும்பு | 400477253-8-06 |
| மாத்தளை | 400461345-1-40 |
| அம்பாறை | 400464510-8-04 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை




## தொண்டைமானாறு செல்வச் சந்நிதி தேர்த்திருவிழா வாழ்த்து

சகல விதமான ஐஸ்கிறீம் வகைகளையும் குறித்த நேரத்தில் ஓடருக்குப் பெற்றுக் கொள்ள

**மது கிறீம் ஹவுஸ்**

கந்தரோடை விதி, சங்குவேலி.
T.P.:0774206465 (88485)

உரிமையாளர், க.டினேஸ்
அனுசரணை ஆட்ஸ் சுரேஸ்.

## தேவை

யாழ். நகரில் இயங்கும் பாடசாலை உபகரணங்கள் விற்பனை நிலையம் ஒன்றுக்கு பில் கிளாக் மற்றும் விற்பனையாளர் (பெண்கள்) தேவை. யாழ்.மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விண்ணப்பிக்கவும்.

தொடர்பு:- 0776913066

## கண்டெடுக்கப்பட்டது

மீசாலையில் பெறுமதியான தங்க ஆபரணம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. ஆதாரம்காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

T.P.: 0776141328, 0771819357

## விற்பனைக்கு/வாடகைக்கு

56 - டொல்பின் விற்பனைக்கு அல்லது வாடகைக்குண்டு.

தொடர்பு:- 060 222 10026, 0777033084

## T.V. விற்பனைக்கு

வெளிநாட்டில் பாவித்த நல்லநிலையில் உள்ள FLAT T.V கள் விற்பனைக்கு உண்டு.

29" - 23,000 ரூபா
25" - 20,000 ரூபா
21" - 12,000 ரூபா
AMP -BOX என்பன விற்பனைக்கு.

187/30,யூனியன் லேன்,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
T.P.: 0772417949

## உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயில் தேர்த்திருவிழா விஞ்ஞாபனம் 03.09.2009

காலம்:இன்று (03.09.2009) வியாழன் வசந்த மண்டபப் பூசை: பிற்பகல் 2.00 மணி தேர்த்திருவிழாவின் போது மங்கள இசை வழங்குவோர்.

1. ஆதீன வித்துவான்:- ச. இராசன் குழுவினர், இணுவில்
2. நாதஸ்வர வித்துவான் ப. சிவதாஸ் குழுவினர், இணுவில்
3. நாதஸ்வரவித்துவான் எஸ் .பஞ்சமூர்த்தி குமரேஸ் குழுவினர், கோண்டாவில்
4. நாதஸ்வர வித்துவான் எஸ்.பாலமுருகன் குழுவினர், நல்லூர்
5. நாதஸ்வர வித்துவான் கலாபூஷணம் ஆர். சுந்தரமூர்த்தி குழுவினர், இணுவில்

எம்பிரான் கருணாகரப் பிள்ளையாரின் தேர்த்திருவிழாவில் கலந்து கொண்டு அவனருள் பெற்று உய்யும் வண்ணம் அடியார்கள் அனைவரையும் வேண்டுகின்றோம்.

"கருணாகரன் பாதம் கனவிலும் துணை செய்யும்"

உரும்பிராய். (சி/560595) உபயகாரர்கள் மற்றும் திருப்பணிச் சபையினர்.

## அறிவித்தல்

### ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்

### வருடாந்த மகோற்சவம் - 2009

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 18ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள் ளது.

மகோற்சவ கால தற்காலிக கடைகளுக்கான (ஐஸ்கிறீம், இனிப்புக் கடை, கச்சான், தேநீர், ஏனைய கடைகள்) இடங் கள் ஒதுக்கப்படவுள்ளன. தேவையான வர்த்தகர்கள் பணத்தை முழுமையாகச் செலுத்தி இடங்களை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

* ஐஸ்கிறீம், இனிப்புக் கடைகள் பகிரங்க ஏலத்தில் வழங்கப்படும்.
* ஒதுக்கப்படும் திகதி 05.09.2009
* நேரம் மு.ப.10.30 மணி

தொ.பே.இல. 021 226 3074 அறங்காவலர்சபை. (சி/560587)


ESOFT
The Leader in Professional ICT Education

சொல்பவர்கள் சொல்லட்டும் எம்மவர்கள் நிரூபித்துள்ளார்கள் நாமே No.1 என்பதை.

BCS
British Computer Society - UK

E-Soft ல் BCS கற்பவர்களே இலங்கை ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் முதற்பரீசுகளை பெறுபவர்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்துகின்றோம்.


Special Offers
20% Discount for University / Techical College Students
15% Discount for other Students



2008ஆம் ஆண்டு நிகழ்ந்த BCS பட்டமளிப்பு விழாவில் 11 சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டன அவற்றுள் 10 விருதுகளை ESOFT மாணவர்கள் வென்றார்கள் என்பதை உங்களுக்கு அறியத்தருகின்றோம்...



Top Candidate Certifcate Level, Top Candidate Diploma Level, Top Candidate PGD Level — BCS Convocation 2008 ESOFT Students
Top Candidate Certifcate Level, Top Candidate Diploma Level, Top Candidate PGD Level, Top Candidate PGD Level — BCS Convocation 2007 ESOFT Students
Worldwide Winners BCS Convocation 2006




2007-2008 ஆய்வின் படி இலங்கையில் 80% மாணவர்கள் BCS கற்கை நெறிக்கு ESOFTஐ தெரிவு செய்கிறார்கள். இது சர்வதேச ரீதியில் 45% ஆகும்.




BIT

BIT கற்கை நெறிக்கு தொடர்ச்சியாக இலங்கையின் No.1 நிறுவனமாகத் திகழும் ESOFT நிறுவனத்தின் யாழ் கிளையில் புதிய பிரிவுகள் ஆரம்பம். உங்கள் பதிவுகளை எமது யாழ் கிளையில் மேற்கொள்ளவும்

2009ஆம் ஆண்டு நிகழ்ந்த கொழும்பு பல்கலைக்கழக BIT பட்டமளிப்பு விழாவில் 138 மாணவர்கள் பட்டம் பெற்றார்கள். அவர்களில் 72 மாணவர்கள் எமது நிறுவனத்தில் கல்வி கற்றவர்கள் என்பதை தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம்......



The Gold Medalist In 2009 BIT Convocation — The Gold Medalist in 2008 BIT Convocation — First Class Degree Holder 2007 BIT Convocation

அனைத்து கற்கை நெறிகளுக்கும் புதிய பிரிவுகள் ஆரம்பம்.... 05/09/2009 AND 07/09/2009

HND IN COMPUTING
edexcel-UK

Sun Certification for Java | Network Admimistration Linux | MCITP / MCTS Microsoft | CCNA Cisco
ICT, GIT | ICDL International Computing Driving Licence | After A/L Students DiTEC | Dip in Computerized Accounting | ESOFT Kids

ESOFT

இலங்கை அரசாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட ISO 9001 : 2008 தரச் சான்றிதல் பெற்ற கணனி நிறுவனம்.

JAFFNA BRANCH
114, NAVALAR ROAD
JAFFNA
T.P: 0212224142

Nelliady Branch:
153, Jaffna Road,
Nelliady, Karaveddy
T.P: 0212264940


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதியில் இரண்டு பஸ்கள் மோதியதில் 18 பேர் காயம்

மட்டக்களப்பு, செப். 3

மட்டக்களப்பு - வாழைச்சேனை பிரதான வீதியில் - மயிலம்பாவெளி சோதனைச் சாவடிக்கு அருகில் - நேற்று புதன் கிழமை காலை இடம்பெற்ற வாகன விபத் தில் 18 பேர் கடும் காயங்களுக்குள்ளாகினர்.

வாழைச்சேனையிலிருந்து வந்து கொண்டிருந்த இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ் ஒன்றும், மட்டக்களப்பிலிருந்து வாழைச்சேனைக்கு சென்றுகொண்டிருந்த தனியார் பஸ் ஒன்றும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகின.

இந்த விபத்தில் காயமுற்ற 18 பேரில் 10 பேர் மட்டக்களப்பு வைத்திய சாலையிலும், 8பேர் ஏறாவூர் மாவட்ட வைத்திய சாலையிலும் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

இதேவேளை, இரு பஸ்களினதும் சாரதிகளின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக மட்டக்களப்பு வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. இவர்களுக்கு வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

# மாற்றுக்கொள்கை நிலையத் தலைவர் விமான நிலையத்தில் கைதாகி விடுவிப்பு

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து நேற்றுக்காலை கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலையத்தில் கைதாகி தடுத்துவைக்கப்பட்டு விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

வெளிநாடு சென்று நாடுதிரும்பிய தம்மிடம் விமானநிலையத்தில் பொலிஸார் சுமார் ஒரு மணித்தியாலம் விசாரணை நடத்தினர் என பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்தார்.

இதற்கான காரணத்தை தாம் பொலிஸாரிடம் கேட்டபோது, இலங்கைக்கு வரும்போது தம்மைக் கைது செய்யும்படி கடந்த பெப்ரவரி மாதம் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அவர்களுக்கு அறிவித்திருந்தனர் என விமான நிலையப் பொலிஸார் தம்மிடம் கூறினர் எனவும் அவர் தெரிவித்தார்.

இக்கைது குறித்த மேலதிகத் தகவல்களை குற்றப்புலனாய்வுப் பிரிவுத் தலைமையகத்திற்குச் சென்று அறிந்துகொள்ளும்படியும் விமானநிலையப் பொலிஸார் தம்மிடம் தெரிவித்தனர் என அவர் மேலும் கூறினார். (அ-சி)

# ஷியாம்லால் ராஜபக்ஷவின் மரணம் தொடர்பாக தன்சானியாவில் 3 பேர் கைது!

கொழும்பு, செப் 03.

ருவண்டாவுக்கான ஐ.நாவின் 'சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாகப் பணியாற்றிய ஷியாம்லால் ராஜபக்ஷவின் மரணம் தொடர்பாக மூன்று சந்தேகநபர்கள் தன்சானியாவில் வைத்து பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நெருங்கிய உறவினர்களில் ஒருவரான ஷியாம்லால் ராஜபக்ஷ (வயது-45) தன்சானியாவின் ஆருஷா பகுதியில் உள்ள தமது இல்லத்தில் கடந்த ஒகஸ்ட் 11 ஆம் திகதி இரவு மர்மமான முறையில் மரணமடைந்திருந்தார்.

இந்த நிலையில் இவரது மரணம் தொடர்பாக பல்வேறு மாறுபட்ட கருத்துகளும், சர்ச்சைகளும் நிலவிவருகின்றன.

இச்சூழ்நிலையிலேயே ஷியாம்லால் ராஜபக்ஷவின் மரணம் தொடர்பாக மூன்று பேரை தாங்கள் கைது செய்துள்ளனர் என தன்சானியாவின் ஆருஷா பொலிஸார் தெரிவித்துள்ளனர். எனினும் கைதுசெய்யப்பட்டவர்களின் பெயர்,விவரங்களை வெளியிட பொலிஸார் மறுத்துவிட்டனர்.

ஆருஷா பொலிஸார் சார்பாக பேசவல்ல அதிகாரி ஒருவர்,பொலிஸ் விசாரணைகளில் இடையூறுகள் ஏற்படுத்தப்படலாம் என்பதாலேயே கைதுசெய்யப்பட்டவர்களின் பெயர்களை வெளியிடமுடியாது என்று அறிவித்துள்ளார்.

இதேவேளை, கைதுசெய்யப்பட்டவர்களில் இருவர் கடந்த ஒகஸ்ட் 11 ஆம் திகதி இரவு ஷியாம்லால் ராஜபக்ஷவின் இல்லத்திற்கு சென்றிருக்கிறார்கள் என்று தாங்கள் நம்புகின்றனர் என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஷியாம்லாலுக்குச் சொந்தமானது என்று நம்பப்படும் கையடக்கத் தொலைபேசி ஒன்றும் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்ட அந்த அதிகாரி, ஷியாம்லால் ராஜபக்ஷவின் மரணம் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்றும் தெரிவித்தார். (அ-சி)

## கண்டி பஸ் விபத்தில் சாரதி பலி; 17 பேர் காயம்

கண்டி, முல்கம்பளைப் பகுதியில் நேற்று அதிகாலை மூன்று மணியளவில் தனியார் பஸ் ஒன்றும் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றும் ஒன்றுடனொன்று மோதி விபத்திற்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார். மேலும் 17 பேர் காயமடைந்தனர் எனக் கண்டி பொலிஸார் தெரிவித்தனர்.

கல்முனையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸும், கொழும்பிலிருந்து பிபிலை நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்துச்சபைக்குச் சொந்தமான பஸ்ஸுமே இவ்வாறு மோதி விபத்துக்குள்ளாகின.

இதில் தனியார் பஸ்ஸின் சாரதியும், அதன் உரிமையாளருமான ஒருவர் உயிரிழந்தார். காயமடைந்த 17 பேர் கண்டி போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவ்விரு பஸ்களும் அதிவேகத்துடனேயே பயணித்துக் கொண்டிருந்தன எனப் பொலிஸார் தெரிவித்தனர். (அ-சி)

# திஸநாயகத்துக்கு சிறைத்தண்டனை; ஜனநாயக ஊடக அமைப்பு கண்டனம்

கொழும்பு, செப். 3

ஊடகவியலாளர் ஜே.எஸ். திஸநாயகத்துக்கு 20 வருடக் கடூழியச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டிருப்பதை இலங்கையில் ஜனநாயகத்துக்கான ஊடகவியலாளர்கள் அமைப்பு வன்மையாகக் கண்டித்திருக்கிறது. இது தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

2006 ஆம் ஆண்டு அவரால் எழுதி வெளியிடப்பட்டதாக அவரது ஒப்புதல் வாக்குமூலத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட இரண்டு கட்டுரைகள் தொடர்பாகக் குற்றம் சுமத்தப்பட்டே அவருக்கு இந்தத் தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. அவரால் எழுதப்பட்ட இவ்விரு கட்டுரைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இவையிரண்டும் இன ஒற்றுமைக்குப் பங்கம் ஏற்படுத்துகின்றன என்று கண்டறியப்பட்டமையை அடிப்படையாகக் கொண்டே இத்தண்டனை வழங்கப்பட்டிருப்பதாகத் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திஸநாயகம் ஒருபோதும் வன்முறையுடன் தொடர்புபடவோ அல்லது வன்முறையைத் தூண்டும் வகையிலோ செயற்படவோ இல்லை. மாறாக அவர் சகவாழ்வையும் இனங்களுக்கிடையிலான நீதியை யும் நிலைநிறுத்துவதற்காகவே நாமறிந்த வரை செயற்பட்டு வந்தார்.

2006 மார்ச்சில் அவர் தடுப்புக் காவ லில் வைக்கப்பட்டது முதல் அவர் ஆதாரமில்லாத குற்றச்சாட்டுகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் எனக்கூறி அவரை விடுதலை செய்யுமாறு நாம் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளோம். அதற்கும் மேலாக அவரது உடல் நிலை கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என்றும் குறைந்த பட்ச மனிதாபிமானத் தரத்திற்கமைவாக வேனும் அவருக்குத் தேவையான மருத்துவ வசதிகள் வழங்கப்படாமை குறித்து எமது எதிர்ப்பையும் வெளியிட்டு வந்தோம்.

இலங்கையில் சட்டத்தின் ஊடாக, ஊடக சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் இன்னொரு வழிமுறைக்கான திருப்புமுனையாகவே இத்தீர்ப்பை இலங்கையில் ஜனநாயகத்துக்கான ஊடகவியலாளர் அமைப்பு இனம் காண்கிறது.

இந்தத் தீர்ப்புக்கு எதிராக சாத்தியமான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முன்வருமாறு இலங்கைக்கு உள்ளும் வெளியிலும் உள்ள எல்லா ஜனநாயக சக்திகளுக்கும் அழைப்பு விடுக்கிறோம்.

ஊடகவியலாளர் திஸநாயகத்தினதும் அவருடைய நண்பர்களான ஜசிகரன் மற்றும் வளர்மதி ஆகியோரினதும் விடுதலைக்காகவும் நாம் முன்நின்று செயற்படுவது இலங்கையின் நீதியினதும் சமாதானத்தினதும் பால் நாம் கொண்ட அக்கறையின் காரணமாகவே ஆகும் - என்றுள்ளது. (சி)

## காவடி இறக்கியவர் மாரடைப்பால் மரணம்

கெருடாவில், செப். 3

செல்வச்சந்நிதி ஆலயத்துக்கு நேர்த்தி வைத்து காவடி எடுத்த ஒருவர், காவடியை இறக்கும் போது மயக்கமடைந்து பின்னர் மரணமானார்.

நேற்று இரவு 7 மணியளவில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் இடைக்காட்டைச் சேர்ந்த கந்தசாமி சுரேஷ் (வயது 34) என்பவரே மரணமானார்.

அவர் திடீர் மாரடைப்புக் காரணமாக மரணமானதாகவும் சடலம் வல்வை ஊறணி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (1-253)

# அணுகுண்டு எண்ணிக்கையை அதிகரிக்கின்றது பாகிஸ்தான்

## அமெரிக்க விஞ்ஞானிகளின் கூட்டமைப்பு தகவல்

வாஷிங்டன், செப். 03

அணு ஆயுதங்கள் கட்டுப்படுத்தப் பட வேண்டுமென்றும், ஒழிக்கப்பட வேண்டுமென்றும் பரவலாக கோரிக்கைகள் விடுக்கப்பட்டுவரும் இத்தருணத்தில் பாகிஸ்தான் அதன் அணு குண்டுகளின் எண்ணிக்கையை துரிதமாக அதிகரித்துள்ளது என அமெரிக்க விஞ்ஞானிகளின் கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானிடம் 60 அணுகுண்டுகளே இருந்தன. தற்போது மேலதிகமாக 30 அணுகுண்டுகளை உருவாக்கி இந்த எண்ணிக்கையை 90 ஆக உயர்த்தியுள்ளது. அத்துடன் அணுகுண்டுகளைச் சுமந்து சென்று தாக்கவல்ல அதிசக்தி வாய்ந்த இரு புதிய ஏவுகணைகளையும் அது தயாரித்து வருகின்றது என்றும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

அமெரிக்க விஞ்ஞானிகள் கூட்டமைப்பு சார்பாக வெளியாகும் 'அணுசக்தி குறிப்புகள்' என்ற இதழில் இத்தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஹன்ஸ் கிரிஸ்டென்சென் என்னும் விஞ்ஞானி இது குறித்து இவ்விதழில் பின்வருமாறு விவரித்துள்ளார்:-

''பாகிஸ்தானிடம் 70 முதல் 90 அணு குண்டுகள் உள்ளமை தெரியவந்துள்ளது. இதற்கு முன்னர் அதனிடம் 60 குண்டுகளே இருந்தன. தற்போது அந்த எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது. எத்தனை குண்டுகள் இராணுவத்திடம் உள்ளன? அவை எந்த வகையைச் சேர்ந்தவை? என்ற விவரங்களை உடனடியாக மதிப்பிட முடியவில்லை.

எனினும், பாகிஸ்தானிடமுள்ள அணு குண்டுகளின் எண்ணிக்கை இன்னும் 100ஐ தாண்டவில்லை. அணுகுண்டுகளை சுமந்துசெல்ல வல்ல 'ஷா ஹீன் - 2' என்னும் ஏவுகணையை பாகிஸ்தான் தயாரித்து வந்தது. இது நீண்டகால முயற்சி. தற்போது இந்த ஏவுகணை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இது அதிவிரைவில் இராணுவத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

அமெரிக்க விமானப் படையின் விண்வெளி உளவுப் பிரிவு மூலமாக இத்தகவல்கள் கடந்த ஜூன் மாதத்தில் கிடைத்துள்ளன. 2008 ஆம் வருட ஏப்ரலில் மட்டும் மூன்று நாள்களுக்குள் இரு ஏவுகணைச் சோதனைகளை பாகிஸ்தான் வெற்றிகரமாக நடத்தியுள்ளது. இந்நடவடிக்கைகள் பாகிஸ்தான் அணு ஆயுதக் குவிப்பில் ஈடுபட்டுள்ளமையையே காட்டுகின்றது.

தரையிலிருந்து தரையிலுள்ள இலக்கை தாக்கும் 'பார்பர்' அணுகுண்டுகள் வானத்திலுள்ள இலக்கை தாக்கும் 'ராவுத்' அணு குண்டுகள் சுமந்து செல்ல வல்ல இரு வகையான ஏவுகணைகளையும் பாகிஸ்தான் தயாரித்துக்கொண்டிருக்கிறது. இப்பணியில் அது மும்முரமாக ஈடுபட்டுள்ளது. எனவே, சிறிய மற்றும் இலகுரகத்தைச் சேர்ந்த புளுட்டோனியம் அணு குண்டுகளை வெற்றிகரமாக அது தயாரித்துவிட்டது என்பது நிரூபணமாகிறது.

இவ்வாறு ஹன்ஸ் கிரிஸ்டென்சென் விவரித்துள்ளார்.

# ஆப்கானிஸ்தானில் தற்கொலைத் தாக்குதல்; புலனாய்வுப் பிரிவு அதிகாரி உட்பட 22 பேர் பலி!

காபூல், செப். 03

ஆப்கானிஸ்தானின் லக்மேன் மாகாண மெஹ்டார் லாம் நகர மசூதிக்கருகில் நேற்று புதன்கிழமை மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் ஆப்கானிஸ்தான் புலனாய்வுத்துறையின் உப தலைவர் அப்துல்லா லஹ்மானி உட்பட 22 பேர் கொல்லப்பட்டனர்.

மெஹ்டார் லாம் நகர மசூதிக்கருகில் வைபவமொன்று நடைபெறவிருந்தது. இதில் கலந்துகொள்வதற்காக வந்தவர்கள் வைபவம் ஆரம்பமாவதற்கு முன்னர் வெளியில் திரண்டிருந்தனர். அப்போது பயங்கரமாக இக்குண்டுகள் வெடித்தன என நேரில் கண்டவர்கள் குறிப்பிட்டார்கள்.

இவர்கள் மத்தியில் புலனாய்வுத்துறையின் உப தலைவர் அப்துல்லா லஹ்மானியுமிருந்தார். அதிகாரிகள் அடங்கிய கூட்டத்துக்குள் புகுந்த தற்கொலைக் குண்டுதாரி குண்டை வெடிக்க வைத்துள்ளார். கொல்லப்பட்டோரில் பெரும்பாலானோர் அதிகாரிகளாவர் என்றும் அவர்கள் தெரிவித்தார்கள்.

மாகாண ஆளுநர் லுத்புல்லா மஹால் இச்சம்பவம் தொடர்பாக பத்திரிகையாளர் மாநாடொன்றில் விவரிக்கையில், ''இக் குண்டுத் தாக்குதலில் 22 பேர் கொல்லப்பட்டனர். 35 பேர் காயமடைந்துள்ளனர்'' என்றார்.

இக்குண்டுத் தாக்குதலில் மூன்று சிரேஷ்ட உள்ளூராட்சி மன்ற அதிகாரிகளும் கொல்லப்பட்டுள்ளார்கள். உளவுத்துறையின் உப தலைவரின் கார் முற்றும் முழுதாக நிர்மூலமாக்கப்பட்டுவிட்டது என்றும் அவர் கூறினார்.

இக்குண்டுத் தாக்குதலுக்கு தாங்களே பொறுப்பு என தலிபான் பேச்சாளர் சபியுல்லா முஜாஹித் ஏ.பி.செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார். தற்கொலைக் குண்டுதாரி உளவுத்துறை மின் உப தலைவரை இலக்குவைத்தே இத்தாக்குதலை நடத்தியுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## தேடப்படுவோர் பட்டியலில் பாக். தீவிரவாதிகள் இல்லை

பாகிஸ்தானில் தேடப்படும் குற்றவாளிகள் அடங்கிய பட்டியலில் லஷ்கர் - இ - தொய்பா, ஜமா - உத் - தவா ஆகிய அமைப்புகளைச் சேர்ந்த தீவிரவாதிகளின் பெயர்கள் இடம்பெறவில்லை.

கடந்த ஆண்டு மும்பையில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 179 பேர் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதல் சம்பவத்துக்கு ஜமாத் உத் - தவா அமைப்பின் தலைவர் சயீத்தும் லஸ்கர் - இ - தொய்பா அமைப்பைச் சேர்ந்தவர்களுமே காரணம் என்பது தெரியவந்தது.

எனினும், பாகிஸ்தானில் தேடப்படும் 'ரொப் - 10' குற்றாளிகள் பட்டியலில் இவர்கள் இடம்பெறவில்லை என உள்துறை அமைச் சகத்தைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பட்டியலில் அல் - குவைதா அமைப்பினதும் தலிபான் அமைப்பினதும் தீவிரவாதிகளின் பெயர்களும் உள்நாட்டில் செயற்படும் தீவிரவாத அமைப்புகளைச் சேர்ந்தவர்களின் பெயர்களுமே இடம் பெற்றுள்ளன - என்று கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகச் சிறுமிகள் இரட்டைக் கொலை சம்பந்தமாக தரகர் மணிவண்ணன் கைது

கொழும்பு, செப். 03

சமீபத்தில் மர்மமாகக் கொலை செய்யப்பட்ட மதுரைவீரன் ஜீவராணி, லக்ஷ்மன் சுமதி ஆகிய மலையகச் சிறுமிகளை வேலைக்கமர்த்த ஏற்பாடு செய்து கொடுத்த தரகரை மஸ்கெலியா நல்லதண்ணிப் பொலிஸ் நிலையப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் நெறிப்படுத்தலுக்கு அமைய நல்லதண்ணிப் பொலிஸ் நிலையப் பொலிஸார் வி.மணிவண்ணன் என்ற குறித்த தரகரையே கைது செய்துள்ளனர்.

கொழும்பில் வேலைக்கமர்த்தப்பட்டிருந்த மதுரைவீரன் ஜீவராணி, லக்ஷ்மன் சுமதி ஆகிய இரு சிறுமிகளும் கடந்த 15 ஆம் திகதி பௌத்தலோக மாவத்தைக்கு அருகில் உள்ள கால்வாய் ஒன்றிலிருந்து சடலங்களாக மீட்கப்பட்டனர்.

இவர்களின் திடீர் மர்மமரணம் தொடர்பாக பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில், இவர்களின் மரணம் தொடர்பாக கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை யினர் கொழும்பில் ஜீவராணியை வேலைக்கு அமர்த்தி வைத்திருந்த முஸ்லிம் நபரை சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைச் சட்டத்தின் கீழ் கைது செய்து, கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தினர். அவர் இப்போது நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைத்துள்ளனர்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைப் பொலிஸாரால் குறித்த முஸ்லிம் நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணை மூலம் குறித்த சிறுமிகளின் பிரதேசத்தைச் சேர்ந்த வி.மணிவண்ணன் என்கின்ற தரகர், இரு மலையகச் சிறுமிகளையும் கொழும்புக்கு அழைத்து வந்து 'ரண' ஏஜென்ஸி என்ற முகவர் நிலையம் ஊடாக குறித்த முஸ்லிம் நபரின் வீட்டில் வேலைக்குச் சேர்த்துள்ளார் என்று தெரியவந்துள்ளது.

இந்நிலையில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைப் பொலிஸாரின் நெறிப்படுத்தலின் பேரில் நல்லதண்ணிப் பொலிஸார், தரகர் மணிவண்ணனைக் கைது செய்தனர்.

இவர் இன்று கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றுக்கு அழைத்து வரப்படுவார் என்று பொலிஸ் வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. (அ-சி)

# தும்பளை நாவலர் வி.கவின் ஆண்டு விழாவும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம், செப். 3

தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகத்தின் 36 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் நாளை பிற்பகல் 2 மணிக்கு தும்பளை கணக்கிலாவத்தை விளையாட்டரங்கில் எஸ்.சத்தியானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை முகாமைத்துவ அபிவிருத்தி நிலையத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் இராஜ் சுப்பிரமணியமும் சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆர். தமிழ்மாறன், பருத்தித்துறை பிரதேச சபையின் முன்னாள் செயலாளர் எஸ்.பசுபதி, மாவட்ட கமநல தலைமை பெரும் பாக உத்தியோகத்தர் ச.உருத்திரேஸ்வரன் ஆகியோரும் காலந்து கொள்ளவுள்ளனர். (6)

## இராணுவ சேவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

அனோமா பொன்சேகாவை இலங்கை இராணுவ அதிகாரசபையின் தலைவராக நியமிப்பதன் மூலம் சரத் பொன்சேகாவின் நட்பை மீளப் புதுப்பித்துக் கொள்ளலாம் என்று ஜனதிபதியின் சகோதரரும், பாதுகாப்பமைச்சின் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதிக்கு ஆலோசனை கூறியிருக்கின்றார் என்றும் தெரியவருகிறது.

இராணுவ அதிகார சபையின் தலைவராகப் பதவியேற்றிருக்கும் அனோமா பொன்சேகா இலங்கை இராணுவத்தின் சிங்கப் படையணியின் மகளிர் பிரிவில் சுமார் 15 வருடங்கள் பணியாற்றியுள்ளார். (சி)

# ஸ்ரீநாராயண குரு முத்திரை வெளியீடு

கொழும்பு, செப். 03

ஸ்ரீநாராயண குரு தேவரின் 155ஆவது ஜெயந்தி விழாவும் முத்திரை வெளியீடும் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு கொழும்பு லொயார்டஸ் புரோட்வேயில் உள்ள ஸ்ரீநாராயண குரு ஞாபகார்த்த மலையாளி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் மேல் மாகாண ஆளுநர் அலவிமௌலானா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

அத்துடன் சிறப்பு விருந்தினர்களாக பிரதியமைச்சர் எம்.எஸ்.செல்லச்சாமி, கொழும்பு மாநகரசபையின் எதிர்க்கட்சித் தலைவர் .வாசுதேவ நாணயக்கார ஆகியோர் உட்பட ஆன்மிகத் தலைவர்களும் கலந்து கொள்வர்.

இவ்விழாவில் இன, மத, குல பேதமின்றி அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## கைதிகளைப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், இந்த உடன்படிக்கை அடுத்த இரு மாதங்களுக்கு இடையில் கைச்சாத்திடப்படும் என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு நம்புகிறது.

இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் இந்திய நீதிமன்றங்களால் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் இலங்கையர்கள் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டு, இலங்கையிலுள்ள சிறைச்சாலைகளில் தமது மிகுதித் தண்டனைக் காலம் வரை தடுத்து வைக்கப்படுவர். இதே நடைமுறையை இலங்கை நீதிமன்றங்களால் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் இந்தியர்கள் விடயத்தில் இந்தியா பின்பற்றும் என்றார். (அ-சி)

## ஆந்திரா ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசேட பொலிஸாரும் 'இஸ்ரோ' வின் சிறப்பு விமானம் மற்றும் பொதுமக்களும் ஈடுபட்டுள்ளதாக அங்கிருந்து வெளியாகும் செய்திகள் கூறுகின்றன.

இதேவேளை போதிய வெளிச்சம் இன்மையால் ஹெலிகொப்டர்கள் மூலம் அவரைத் தேடும் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் காணாமற்போன இடம் எனக்கருதப்படும் இடத்தினைச் சுற்றி வனத்துறை அதிகாரிகளுடன் சத்திஸ்கர், ஒரிசா மாநிலங்களில் இருந்து இணைந்த 5,000 விசேட பொலிஸாரும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் இந்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

ஆந்திர முதலமைச்சர் ராஜசேகரரெட்டி தொடர்பான தகவல்கள் கிடைக்காமையினால் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ்கட்சித் தலைவர் சோனியாகாந்தி ஆகியோர் கவலை தெரிவித்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டது. (அ-6)

## புலம்பெயர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அல்லது பழுதடைந்துவிட்டனவா என்று பரிசோதிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த உணவுப்பொருள்களின் மாதிரிகள் இலங்கை தரப் பரிசோதனை நிறுவனத்தினால் பரிசோதனைகளுக்காகப் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. பரிசோதனைகள் சாதகமாக அமைந்தால் உணவுப்பொருள்களை இயலுமான விரைவில் வன்னி முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் அகதிகளுக்கு விநியோகிப்பதே இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதான நோக்கமாக உள்ளது.

இதேநேரம், கப்டன் அலியில் கொண்டு வரப்பட்டிருக்கும் மருந்துப்பொருள்களும் தற்போது பாவனைக்கு உகந்த நிலையில் இருக்கின்றனவா அல்லது பழுதடைந்துவிட்டனவா என்பது குறித்து இலங்கை சுகாதார அமைச்சு பரிசோதனைகளை நடத்தி முடிவை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திற்கு அறிவிக்கும்.

பரிசோதனைகளின் முடிவைக் கருத்தில் கொண்டே மருந்துப்பொருள்களும் அகதி மக்களுக்கு விநியோகிக்கப்படும் என்று இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் உயர் அதிகாரிகள் தெரிவித்தனர். (அ-சி)

## மூன்று லட்சம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிஹால் கலபதிகூட அப்போது சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்தார். அவருக்கும் மன்னிப்பு வழங்கப்பட்டது.

இதேபோன்று வவுனியா அகதி முகாம்களில் உள்ளவர்களுக்கும் மன்னிப்பு வழங்கவேண்டும். கருணா, பிள்ளையான் போன்றவர்களைக்கூட ஐக்கிய தேசியக் கட்சி தான் சமூக வாழ்வுக்கு அழைத்து வந்தது.

அதேபோல் வவுனியா அகதி முகாம்களில் உள்ளவர்களில் புலிகள் இருந்தால் அவர்களுக்கு மன்னிப்பு வழங்கி அவர்களை சமூக வாழ்வில் இணைக்க வேண்டும். ஆனால் மூன்று லட்சம் அகதிகளையும் புலிகளாக நினைத்து அவர்களைக் கொடுமைப்படுத்தக்கூடாது. அவர்களை உடனடியாக மீளக் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இந்த் மக்கள் அகதி முகாம்களில் அதிக துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். அவர்களை மீளக்குடியமர்த்துவதன் மூலம் தான் அந்தமக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியும் - என்றார்.

புதிய வெளியீடு அறிமுகமாகிறது
பரபரப்பான விற்பனையில்
Oxford
1732/50 விலை
ENGLISH - ENGLISH TAMIL DICTIONARY
பூபாலசிங்கம் புத்தகசாலை,
இல.4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

படிவங்கள் விற்பனையாகிறது
I. உளவளத்துணை உதவியாளர் பதவி
II. இலங்கை விஞ்ஞான சேவையின் வகுப்பு II தரம் IIன் பதவி
III. ஒய்வூதிய உத்தியோகத்தர் பதவி
பூபாலசிங்கம் புத்தகசாலை,
இல.4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 6693, 4374

PHYSICS
A/L 2010 ⇒ மின்புலம்
Sat, Sun - 8 - 9 A.M.
ஆரம்பம்:- 06.09.2009 (Sun 8)
K.Selvan B.Sc. (Hons)
02.09.2009 நடைபெறும் Physics பரீட்சை 04.09.2009 வெள்ளி 4.30 மணிக்கு நடைபெறும்.
NEC Clock Tower Road, Jaffna

வெளிவந்து விட்டது
வணிகக்கல்வி - 2009 A/L
15 வகையான புத்தகங்கள் விற்பனையாகின்றன.
ஆக்கம் - A.T.நந்தன்
ஏக விநியோகஸ்தர்: (கொழும்பு)
அன்னை புத்தகசாலை
7, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 222 9881

B.Sc. காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை)
மேற்படி பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
* A/Lல் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் மூன்று பாடங்கள் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆவார்.
* இப்பட்ட நெறி ஆனது இலங்கைப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.
* பரீட்சைகள் யாவும் புதிய உயர் கல்லூரி வளாகத்தில் நடைபெறுகின்றன.
* புதிய பிரிவுக்கான விரிவுரைகள் ஆரம்பம் 05.09.2009 காலை 8 மணி
இணைப்பாளர், காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை). T.P.No.: 222 8148, 222 3208
புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

VCM INSTITUTE
இணைந்த கணிதம்
A/L 2009 Repeat
துரித மீட்டல்
ஆரம்பம் சனி (05.09.2009) காலை 7.15 AM
Mr. B. Raveendran

* லங்காபெல் * வீசா IDD
அஸ்வினி மஸ்ரி பிளாசா
72, பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு
அழையுங்கள் : 021 567 7777

அம்மா பகவான் சரணம்
சாரங்கன் பூஞ்சோலை
எம்மிடம் நல்லின செம்பரத்தைகளும், பல வர்ணக் குறோட்டன்களும், பயன்தரும் மரங்களும், சகல விதமான பூங்கன்றுகளும், பூங்கன்றுகளை நோய்த்தாக்கத்திலிருந்து பாதுகாப்பதற்குத் தேவையான சகல விதமான மருந்துகளும், பிளாஸ்ரிக் மற்றும் சீமேந்திலான பூச்சாடிகளும் விற்பனைக்குண்டு.
295, ஆலடிச்சந்தி,
பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

SCC
2009 A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான பயிற்சி நெறிகள் ஆரம்பம் 05,10.09.2009
விசேட கணனிப் பயிற்சி நெறிகள்
Diploma
Dip. In MS Office — 4 Months
Dip. In Desktop Publishing — 4 Months
Dip. In Computer Programming — 6 Months
Dip. In Eng. Drawing & Auto CAD — 3 Months
Dip. In Computerized Accounting — 4 Months
Dip. In Data Base Management System — 4 Months
Dip. In Audio & Video Editing — 4 Months
Dip. In Visual Basic — 4 Months
Dip. In Web Designing — 4 Months
Free
Dip. In Hardware Engineering
Dip. In Internet e-mail
மேலதிக விபரங்களுக்கு
ONLINE CLASSESக்கும் மாணவர் அனுமதிக்கப்படுவர்
4000/=
Softview Computer College
55, Arasady Rd, Jaffna.

தொழிற் பயிற்சிகள்
எங்கள் நிறுவனத்தில் தொழிற்கல்விகளை பயில்வதன் மூலம் உங்கள் எதிர்காலத்தை வளமாக்குங்கள்.
★ றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பெயறிங்
★ றேடியோ ★ வீடியோ டெக் ★ DVD Player
★ ரெலிவிசன் ★ CD Player ★ Amplifier — காலம்:- 10 மாதம்
★ Mobile Phone Repairing
Hard ware — Hard ware Repairing
Soft ware — Phone Lock — காலம்:- 3 மாதம்
★ ஏயார் கொண்டிசனிங்
குளிர்சாதனங்களும் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும். — காலம்:- 6 மாதம்
★ எலக்ரிக்கல் வயறிங், றிவைண்டிங் — காலம்:- 6 மாதம்
★ Diploma in Computer Hard ware Engineering — காலம்:- 3 மாதம்
குறிப்பு:- சகல பயிற்சிகளுக்கும் 6 மாதம் முதல் 10 மாதம் வரை முழு நேர செய்முறைப் பயிற்சியளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும்.
விபரங்களுக்கு: பயிற்சிகள் ஆரம்பம்:- 06.09.2009
JAFFNA TECHNICAL INSTITUTE
No. 15 மணிக்கூட்டு வீதி (பெருமாள் கோவில் முன் வீதி), யாழ்ப்பாணம். T.P.: 021 222 6434, 0718561654

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.09.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.